உ

திருச்செந்திலாண்டவன் துணை



குமரகுருபர சுவாமிகள்

உ

திருச்செந்திலாண்டவன் துணை

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள்



ஸ்ரீ காசிமடம் : : திருப்பனந்தாள்

உ

திருச்செந்திலாண்டவன் துணை

பொங்கல் வாழ்த்து

மதுரகவி, வித்துவான்,
திரு. தா. ம. வெள்ளைவாரணம் அவர்கள்,
தமிழ்ப் பேராசிரியர், செந்தமிழ்க் கல்லூரி,
திருப்பனந்தாள்.

(ஆசிரிய விருத்தம்)

சங்க இயற்றமிழ் சைவத் திருமுறை
சாத்திரம் பதினுன்குடன்
சற்குணக் குருபரர் சாற்றிய பிரபந்த
தண்டமிழ் நூல்களுடன்
துங்கப் பொருள்நயம் தோய்ந்த கவிதைகள்
சொல்நயக் கட்டுரைகள்
சூழ்ந்து மிளிர்ந்திடு குமர குருபரன்
துலங்கி வளர்ந்திடவே!

அங்கணன் தாண்மலர் அகத்தில் மலர்த்திடும்
அருணந்தி வாழியவே!
அண்ண லவர்செயும் அறங்களும் ஓங்கி
அவனியில் வாழியவே!
பொங்குக அண்ணலின் புனித மரபுடன்
பூமிசைக் காசிமடம்!
பொங்குக பல்வளன்! பொங்குக மங்களம்!
பொங்குக பொங்கலுமே!

உள்ளுறை

உ

சிவமயம்

திருச்செந்திலாண்டவன் துணை



மலர் 17 | விசுவாவசுஹு தைத் திங்கள் 1ம்வ [14-1-66] | இதழ் 1

"குமரகுருபரன்" பதினேழாவது ஆண்டு மலர்

தோற்றுவாய்

"பூங்கொன்றைக் கண்ணியான் பொன்மன் றிறைஞ்சிடுக
ஆங்கொன்றைக் கண்ணி யவர்" —குமரகுருபரர்.

"குமரகுருபரன்" திங்களிதழ் பதினாறு ஆண்டுகளாகச் சீரும் சிறப்பும் பொருந்தி வளர்ந்து, இன்று பதினேழாம் ஆண்டுத் தொடக்கம் எய்துகின்றது. பதினாறாட்டைப் பிராயத்தினர் வயதுக்கு ஏற்ற வனப்பும், மனத்தைக் கவரும் அறிவாற்றலும் பெற்று, எல்லா நலன்களும் நிரம்பி, இறையருள் விளக்கமும் இலங்கித் தோன்றுவது போலக் "குமரகுருபரன்" எல்லா நலன்களும் உடையதாய் வாசகர்களுக்கு அறிவு ஆற்றல்களும் இறையருள்

விளக்கமும் நல்கும் கட்டுரைகள் தாங்கி, அப்போதலர்ந்த செந் தாமரையின் அழகோடு பொங்கல் நன்னாளில் வாசகர்களுக்கு நல் விருந்தளிக்க வருகின்றது.

மாரியன்ன வண்மையும், "தனக்கென வாழாப் பிறர்க்குரியாளர்" ஆகிய பெருந்தகைமையும், 'ஈத்துவக்கும் இன்பமே' தமக்குரிய குறிக்கோளாகக் கொண்ட துறவுடைமையும், சைவ வான்பயிர் தழைக்கச் செய்யும் பெருமுகிலின் தன்மையும் பூண்டு இலங்கும் பெருந்தவச் செல்வர் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்களின் திரு வருள் நோக்கப் பேருதவியினால் தோன்றி வளர்ந்துவரும் "குமரகுருபரன்", வாசகர்கள் யாவரும் பாராட்டும் வண்ணம் சிறந்த மொழித் தொண்டும் சிவநெறித் தொண்டும் ஆற்றி வருகின்றது.

ஆதி குமரகுருபர சுவாமிகள் சிவநெறியிடத்தும் தீந்தமிழிடத்தும் கொண்ட பேரன்பு மாற்ற மனங்கழிய நின்றருளிரும் மாண்பு உடையது. அவர் பாடியருளியுள்ள பனுவல்களில் அப்பேரன்பு யாண்டும் நீக்கமற நிறைந்திருக்கக் காணலாம். இன்னும் தமிழ் இலக்கியத்துக்கே தனிச்சிறப்பு நல்கும் அகம் புறம் ஆகிய பொரு ளிலக்கண அமைதிகளும், தமிழ் வடமொழி இலக்கியப் பொருள் நுணுக்கங்களும் அவர் பாடல்களில் நிறைந்துள்ளன. பொய்கண்டு அகலவும், மெய்ந்நிலை தேறவும் துணிபொருள் உணர்த்தும் மெய்ப் பொருட் பெட்டகமாகவும் அவை திகழ்கின்றன. அருமையில் எளிய அழகும், சிங்கவேறு போன்ற பெருமித நடையும், ஆற்றொழுக்குப் போன்ற நெகிழ்ச்சியும், ஆன்ற பொருட் சிறப்பும் நிறைந்தவை, அவர் பாடல்கள். எத்தகைய இனிய கற்பனைக்கும் இணையற்ற ஊற்று கத் திகழும் இக்கருவூலத்தின் பயன் உலகின் எம்மருங்கும் பரவி, என்றும் மக்களுக்கு விழிப்பூட்டிப் பயன்நல்க வேண்டும் என்று திருப்பனந்தாள் ஸ்ரீ காசிமடத்து அதிபர் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி அருள்நந்தித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள் திருவுளங் கொண்டருளினார்கள். அதன் பயனாகக் காசி மடத்தின் மூல முதல்வர் திருப்பெயரால் 'குமரகுருபரன்' தோன்றி நிலவ அருள் செய்தும், அறக்கொடை நல்கியும், அருள் பாலித்துவரும் ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்கள் திருமுன் இப் பதினேழாம் ஆண்டுமலர், அன்புக் காணிக்கையாகத் திசை நோக்கிய வணக்கங்களுடனும் நன்றியறிதலுடனும் சமர்ப்பிக்கப் பெறுகின்றது.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின் ஆணைவழிநின்றெழுகும் ஸ்ரீ காசிமடம் ஜூனியர், வித்துவான், ஸ்ரீ முத்துக்குமாரசுவாமித் தம்பிரான் சுவாமிகள் அவர்கள், ஆசிரியர் குழுவில் மகிழ்ச்சியுடன் கலந்து, ஆக்க மும் ஊக்கமும் நிறைந்த அறிவுரைகளை அவ்வப்பொழுது அருளுகின் றார்கள். அவர்களுக்கும் நன்றி.

ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களின் அன்பும், அருளும், அறிவுரைகளும், ஸ்ரீ இளவரசு சுவாமிகள் அவர்களின் ஊக்கவுரை களும், பிறவும் துணைபுரிய இனிவரும் ஆண்டுகளிலும், 'குமரகுருபரன்' முன்னிலும் பன்மடங்கு சிறப்புறும் என்பது உறுதி.

ஸ்ரீ ஆதி குமரகுருபர சுவாமிகள் அருளிச் செய்த நூல்களுள் ஒவ்வொன்றாக நுண்பொருள் விளக்கக் கட்டுரைகள் எழுதியருள் பவர்கள், காஞ்சிபுரம், தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம், ஸ்ரீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள் ஆவார்கள். அவர்கள் தொடர்ந்து இவ்வாண்டும் எழுதியருள்வார்கள். டாக்டர் திரு பா. நடராஜன் எம். ஏ., டி. லிட். அவர்களின் திருமந்திர ஆங்கில மொழிபெயர்ப்பும் குறிப்புரையும் இவ்வாண்டும் தொடர்ந்து கிடைக் கும் நல்விருந்துகளில் ஒன்றாகும். Hymns of the Tamil Saivite Saints என்ற நூலில் உள்ள திருமுறைப் பாடல்களின் ஆங்கில மொழி பெயர்ப்பும் தொடர்ந்து வெளிவரும். "பாலகவி" அவர்களின் உரை நடையும் தொடர்ந்து எழுதப்பெற்று வரும். ஒவ்வொரு தலத்தைப் பற்றிய கல்வெட்டாராய்ச்சிக் கட்டுரைகளும் மாதந் தோறும் இனி வெளியிடப்பெறும்.

சென்னைத் திருப்புகழமிர்தம் ஆசிரியர் திருமுருக கிருபானந்த வாரியார் அவர்கள், கலைமகள் ஆசிரியர் திரு. கி. வா. ஜகந்நாதன் அவர்கள் எம். ஏ., மைலாப்பூர் ஸ்ரீ இராமகிருஷ்ண மடத்து 'ஸ்ரீ இராம கிருஷ்ண விஜயம்' ஆசிரியர் ஸ்ரீலஸ்ரீ பரமாத்மநந்தா சுவாமிகள் அவர்கள் அண்ணாமலைப்பல்கலைக்கழகத் தமிழ்மொழி இயல்துறைப் பேராசிரியர் திரு. தெ. பொ. மீனாட்சிசுந்தரனார் அவர்கள் எம். ஏ., பி. எல்., எம். ஓ. எல்., தமிழ் ஆராய்ச்சித் துறைத் தலைவர் திரு. கோ. சுப்பிர மணியம் அவர்கள் எம். ஏ., பி. எல்., பனசைச் செந்தமிழ்க் கல்லூரிப் பேராசிரியர் திரு. கு. சுந்தரமூர்த்தி அவர்கள், காசி இந்துப் பல்கலைக் கழகத் தமிழ் விரிவுரையாளர் திரு. டி. பி. சித்தலிங்கம் அவர்கள்

எம். ஏ., ஸ்ரீவைகுண்டம் அருள்நந்திநகர் ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் ஆர்ட்ஸ் காலேஜ் தமிழ்த்துறைத் தலைவர் திரு. பொ. முத்தரசு எம். ஏ., பி. டி., அவர்கள், ஷை கல்லூரி விரிவுரையாளர் திரு. கு. பழநிச்சாமி எம். ஏ., அவர்கள், திருப்பனந்தாள் செந்தமிழ்க்கல்லூரி பிரின்சிபால் திரு. கே. எம். வேங்கடராமையா எம். ஏ., அவர்கள், இன்னும் பல பேரறிஞர்களின் எழுத்துப் படைப்புக்களைக் "குமரகுருபரன்" தன் வாசகர்களுக்கு அளிக்காநிற்கும்.

இனி, தாள் விலையேற்றம் அச்சுக்கூலி உயர்வு முதலிய தவிர்க்க முடியாத காரணங்களால் இந்தயாண்டு தைத்திங்கள் 1-ம் உ இப்பதினேழா வது ஆண்டு மலர் முதல் ஆண்டுச் சந்தா ரூ. 1–50 லிருந்து ரூ. 2–25 ஆக உயர்த்தப்பெற்றுள்ளது. தனிப்பிரதி 0–19 பைசே. சந்தா நேயர்கள் இச்சிறு சந்தாவுயர்வை ஏற்றுத் தொடர்ந்து சந்தா செலுத்தி ஆதரிப்பார்கள் என்று நம்பப்பெறுகின்றது.

பல்வேறு துறைகளில், புதுப்புதுக் கருத்துக்கள் அமைத்து, நுண் மாண் நுழைபுலம் செறிந்த கட்டுரைகளையும், கவிதைகளையும், இசைப் பாடல்களையும், மொழிபெயர்ப்புக்களையும், மக்கள் நலனும், தமிழார் வமும், சமயப் பற்றுமே அடிப்படையாகக் கொண்டு எழுதிவரும் எல்லா அன்பர்களுக்கும் நன்றி உரியதாகுக. "குமரகுருபரன்" நல்ல முறையில் திங்கள் தோறும் வெளிவருவதற்கு எப்பொழுதும் உதவி வரும் அன்பர்களுக்கும், குமரகுருபரன் வளர்ச்சிக்காக அயராது உழைக்கும் ஆசிரியர் குழுவினருக்கும், உரிய காலத்தில் அச்சுப் பணியை நிறைவு செய்து உதவும் குமரகுருபரன் அச்சகப் பணியாளர் களுக்கும், இதழ்களைக் குறித்த காலத்தில் அனுப்பி உதவிவரும் கலைக்கோவில் சிப்பந்திகளுக்கும் செந்திலாண்டவன் திருவருள் துணை முன்னிற்க!

தமிழும் சைவமும் தழைத்தினிது ஓங்குக! குமரகுருபரன் வளர்க!

இங்ஙனம்,

ஸ்ரீவைகுண்டம், 14–1–66 } டி. எம். குமரகுருபரன் பிள்ளை பி. ஏ., பி. எல்.,
நிர்வாக ஆசிரியர்.

அருணந்தி அறங்களென நிலேத்து வாழ்க!

வித்துவான். திரு. ம. வே. பசுபதி அவர்கள்,
திருப்பனந்தாள்.

நன்மைதரு சைவமொடு தமிழும் சேர்ந்த
நறுமணத்தை உலகெங்கும் பரப்பி, வையம்
இன்பநிலே எய்திடவே அறம்வ ளர்க்கும்
ஏடாகும் குமரகுரு பரனே வாழ்க!
இன்றுடனே பதிஞறும் நிறையப் பெற்ருேய்
எழில்சிறப்பில் மிகவோங்கி இனிதே வாழ்க!
அன்புமொழித் தமிழ்போல அமைந்து வாழ்க!
அருணந்தி அறங்களென வளர்ந்து வாழ்க! 1

செந்தூரில் முருகனருள் உரிமை பெற்ற
செந்தமிழின் கவிச்சிங்கம்; காசி தன்னில்
முந்துகின்ற அறநிலேயம் கண்ட அண்ணல்
முதுபுலவன் குருபரனின் பெயரைத் தாங்கிக்
கந்தனெழில் திருவுருவம் முகப்பில் ஏந்திக்
கவின்பெற்ற குமரகுரு பரனே வாழ்க!
அந்திநிறச் சிவனருளால் செழித்து வாழ்க!
அருணந்தி அறங்களென நீடு வாழ்க! 2

திருநெறியும் அருள்நெறியும் ஆய்வும் கூட்டித்
தேன்தமிழில் பலபடைப்பும் அளிப்போய்! மேலாம்
பெருமைமிகு கவிதைகளே மொழிபெ யர்ப்பைப்
பெரிதும்யாம் சுவைத்திடவே ஈவோய்! அண்ணல்
தருமத்தின் விவரங்கள் சாத்தி ரங்கள்
தகுமிவைகள் யாவையுமே தருவாய்! ஞானி
அருங்குமர குருபரர்நூல் ஆய்வோய்! நாளும்
அருணந்தி அறங்களென நிலேத்து வாழ்க! 3

மங்கையர்க்கரசியார் பிள்ளைத் தமிழ்

(மதிப்புரை)

ஏழாம் நூற்ருண்டின் இடைப்பகுதி; மாறவர்மன் அரிகேசரி என்ற பாண்டியனின் ஆட்சி; பாண்டி நாட்டில் சமண சமயம் பரவியிருந்த காலம். அரசன் சமண் சமயச் சார்பு உடையவன். "பாண்டிமாதேவியாரும், குரைகழல் அமைச்சனுராம் குலச்சிறையாரும் என்னும் இருவர் தம் பாங்குமன்றிச் சைவம்" பாண்டி நாட்டில் இல்லாதாயிற்று. பாண்டி நாட்டில் "பொங்கு திருவெண்ணீற்றின் ஒளிபரவ, அமணவிருள் பொன்ற, அடியார்கள் இதயப்போது அவிழ ஞானசம்பந்த சிவசூரியனை"ப் பாண்டிநாட்டுக்கு அழைப்பித்தவர்கள், பாண்டிமாதேவியாகிய மங்கையர்க்கரசியார் ஆவர். இம் மங்கையர்க்கரசியார் பேரில் பாடப்பெற்றதே "மங்கையர்க்கரசியார் பிள்ளைத்தமிழ்" என்னும் நூல். இதனைப் பாடியவர் கோயம்புத்தூர், காந்திபுரம், கவியரசு, வித்துவான், மதுரை ஆதீனச் செந்தமிழ்க் கவிமணி, திரு. கு. நடேசக் கவுண்டர் அவர்கள் ஆவர். இப்பிள்ளைத் தமிழ் நூல் 1941-ல் முதன் முதல் அச்சிடப்பெற்றது. இதுபோழ்து மதுரைத் திருஞான சம்பந்த சுவாமிகள் ஆதீனம், 291-ஆவது மகா சன்னிதானம், திருவருள் தவயோக, ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர ஸ்ரீ ஞான சம்பந்த தேசிக சுவாமிகள் அவர்கள் இந்நூல் இரண்டாவது பதிப்பை வெளியிட்டருளியுள்ளார்கள்.

"திருஞான சம்பந்தர் பிள்ளைத்தமிழ்" என்று ஒரு பிரபந்தம் திருவாவடுதுறை ஆதீனத்து எட்டாவது பட்டம் ஸ்ரீலஸ்ரீ மாசிலாமணி தேசிக மூர்த்திகளால் பாடியருளப் பெற்றது. திருவாவடுதுறை ஆதீனத்து 21-ஆவது மகாசன்னிதானம் ஸ்ரீலஸ்ரீ சுப்பிரமணிய தேசிக சுவாமிகள் அவர்கள் 1953-ல் திருஞான சம்பந்தர் பிள்ளைத்தமிழை அச்சிட்டருளினர்கள். அப்பிள்ளைத்தமிழ் போன்று, மங்கையர்க்கரசியார் பிள்ளைத்தமிழ் என்னும் இப்பிரபந்தம் மதுரைத் திருஞான சம்பந்தர் மடாலயத்தினின்று வெளியிடப்பெறுவது சாலப் பொருத்தம் உடையதாகும்.

திருஞானசம்பந்தர் பிள்ளைத் தமிழில் காப்புப் பருவத்தில் திருநீறு துதிக்கப்பெற்றது போல, மங்கையர்க்கரசியார் பிள்ளைத்தமிழில் காப்புப் பருவத்தில் திருநீறு கூறியிருக்கிறது. திருநீற்றுக்கு ரக்ஷை என்ற பெயருண்டு; காப்பு என்பது பொருள். ஆகவே காக்குமாறு திரு

நீற்றை வழுத்தியது சாலவும் சிறப்புடையதாகும். அன்றியும் இப் பாடல் திருநீற்றுப் பதிகச் சொற்றொடர்கள் பலவற்றை நினைப்பிப்ப தாக இருப்பது மகிழ்ச்சி தருவதாகும். காப்புப் பருவம் 11-ஆவது பாடல் நால்வர் துதியாக அமைந்துள்ளது.

''அகரமொரு நூறுயிரம்'' என்ற 43-ஆம் பாடல் திருமூலர் திரு மந்திரப் பாடல்களை நினைவூட்டுவதோடு, அன்னதானச் சிறப்பினை நினைவூட்டுவதாக உள்ளது.

''தனுகரண புவனபோகம்'' என்ற 54-ஆம் பாடலில் சைவச் செந்நெறிச் செல்பவர்களின் உள்ளத்தைக் கலக்கிடும் பிறரைச் சுட் டிக் காட்டியிருக்கும் நயம் போற்றற்குரியது.

திருவிளையாடற்புராணச் செய்திகள் பல ஆங்காங்கு உரிய இடங் களிற் பயன்படுத்தப் பெற்றுள்ளன; செ. 19, 42, 49, 56, 68, 86 முதலியன.

யாழ்மூரிப் பாடல் செ. 38-லும், ''மானினேர்விழி'' என்ற பதிகம் செ. 55-லும் குறிக்கப்பெற்றன. ஞானசம்பந்தர் நிகழ்த்திய அற்புதங் களிற் சில ஆங்காங்கு இடம் பெற்றுள்ளன.

நீராடற் பருவத்தில் சிவபெருமான், உமாதேவியார், மூத்த பிள்ளையார், குமரப்பெருமான், பாகிரதி ஆகியோரை வையை நதிக்கு ஒப்பாகக் கூறிய நயம் படித்தறிதற்பாலதாம். 87-ஆவது பாடலில் வையைப் புதுப்புனல் ஞானசம்பந்தன் தமிழின் மணம் மிகவும் மணக் கும் என்றும், 91-ம் பாடலில் மணிவாசகர் பொருட்டு இறைவன் நிகழ்த்திய திருவிளையாடலும் கூறப்பெற்றுள்ளன.

''தற்காத்துத் தற்கொண்டாற்பேணி'' என்ற வள்ளுவர் வாய் மொழியில் கூறிய பெண்ணின் இலக்கணம் மங்கையர்க்கரசியார் மாட் டுப் பொருந்தியிருந்தது என்பதை 97-ம் பாட்டுப் பகரும்.

99-ம் பாடலில் மங்கையர்க்கரசியார்–கலைமகளாக–திருமகளாக–உமையாக–திருவருட்சக்தியாக விளங்கினர் என்று கூறப்பெற்றது.

101-ஆவது பாடல் வாழ்த்துப்பாடல்; நாடோறும் ஓதத் தகுவது.

இப்பிரபந்தத்தை இரண்டாம் பதிப்பு எய்துவித்த மதுரையாதீன மகாசந்நிதானம் அவர்களுக்குச் சைவவுலகம் நன்றி செலுத்துவ தாகுக.

விலை: ரூ. 1-00.

கிடைக்குமிடம்: மதுரை ஆதீனம்,
70, தெற்காவணிமூல வீதி,
மதுரை,

அபிராமி எல்லாமாக இருக்கும் சிறப்பு

சித்தியும் சித்தி தரும்தெய்வ மாகித் திகழும்பரா
சத்தியும் சத்தி தழைக்கும் சிவமும் தவமுயல்வார்
முத்தியும் முத்திக்கு வித்தும்வித் தாகி முளைத்தெழுந்த
புத்தியும் புத்தியின் உள்ளே புரக்கும் புரத்தையன்றே.

அம்மையை வழிபட்டோர் அடையும் இம்மைப் பயன்கள்

தனந்தரும் கல்வி தரும்ஒரு நாளும் தளர்வறியா
மனந்தரும் தெய்வ வடிவும் தரும்நெஞ்சில் வஞ்சமில்லா
இனந்தரும் நல்லன எல்லாம் தரும்அன்பர் என்பவர்க்கே
கனந்தரும் பூங்குழ லாள்அபி ராமி கடைக்கண்களே.

அடிதொழுவார் அடையும்பேறு

சொல்லும் பொருளும் எனநட மாடும் துணைவருடன்
புல்லும் பரிமளப் பூங்கொடி யே!நின் புதுமலர்த்தாள்
அல்லும் பகலும் தொழுமவர்க் கேஅழி யாவரசும்
செல்லும் தவநெறி யும்சிவ லோகமும் சித்திக்குமே.

குமரகுருபரன்

புத்தாண்டு வாழ்த்துப்பா

வித்துவான். திரு. கோ. இளையபெருமாள் அவர்கள்
தலைமைத் தமிழாசிரியர்
சுப்பிரமணிய சாஸ்திரியார் உயர்நிலைப்பள்ளி
ஆ ர ணி (வ. ஆ.)

(வெண்பா)

கோலமயி லேறுங் குமர குருபரனின்
கோலமுற இன்பங் குலவிடவே — ஞாலமிசை
எங்கும் இசைபரப்பி ஏற்றமுறத் தொண்டாற்றும்
திங்களிதழ் வாழ்க தினம். 1

சைவந் தழைக்கத் தமிழ்தழைக்கச் சான்றோரின்
மெய்வந்த கட்டுரைகள் மேன்மையுறத் — தெய்வநெறி
கூட்டுவிக்கும் எங்கள் குமர குருபரன்பேர்
ஏட்டுக்கும் உண்டோ இணை. 2

ஆண்டு பதினாறாய் ஆக்கப் பணிபுரியும்
தூண்டு சுடர்விளக்கே தொல்லுலகில் — யாண்டுமுயர்
குன்றுதோ றாடுங் குமர குருபரன்போல்
என்றும் மிளிர்க இனிது. 3

பொங்கல் வாழ்த்து

பேராசிரியர் ஐ. எஸ். வரதராஜய்யர் பாடியது

மாதவன் எழுமுயர் ஆதவன் வடக்கு
மாதிரம் புகுநாள் மகரத்தலை நாள்
பல்பயிரினை யாக்கும் பனித்துறு கழிந்திட்
டினிபுற யாவரும் இசைந்திடும் திருநாள்
தன் னேரில்லாத் தகைசால் உழவர்
பொன்னேர் பூட்டிப் பொலிதரும் புதுநாள்
கரும்பெனச் சாலியும் கமுகெனக் கரும்பும்
விரும்பிட மக்கள் விளைதரும் பொன்னாள்
மாவும் பலாவும் வாழையும் தாழையும்
காவில் கழனியில் கவின்செயும் எழில்நாள்
இஞ்சியும் மஞ்சளும் எழில்பெற்றொளிர் நாள்
உலகினுக் காணியென் றொளிர்தரும் உழவர்
நிலத்தினைப் பண்செய நினைந்தெழுந்திடும் நாள்
கண்கவர் உடைகள் கவின்பெற அணிந்து
கண்ணெனும் இனிய கற்புக் கடம்பூண்டு
சுண்ணமும் பூவலும் தீட்டி நன்மனைக்கு
வண்ணக் கோலம் மகளிர் இடும்நாள்
கற்கோட்டை யன்றிக் கவினெத் கோட்டை

பொற்கோபுர மெனப் பொலிதரும் பெருநாள்
பொங்கலும் பாகும் பொரிக்கறி யவியலும்
திங்களன்ன தீந்தயிர்த் திரளையும்
மக்கள் அனைவரும் மனை மகாருடனே
நுக்கரும் குழுடன மகிழ்ந்துணும் நாள்
ஏரினில் பூட்டும் எழிலார் விடைகள்
நாரோடு பொலிநாள் ஆவினம் பல்குநாள்
அன்பர்கள் யாவரும் பால்பொங்கிற் றெனவே
இன்புற வினவி யகமகிழ்ந்திடு நாள்
பூக்களில் வதியும் பூவையர் இருவரும்
மாக்களி ததும்ப மனைதொறும் திகழ்நாள்
பொங்குபேர் எழில்கொள் புனிதமார் மடவார்
மங்கல நாளைமகிழ்ந் தெதிர்கொளும் நாள்
இந்த நன்னாளில்
உட்பகை புறப்பகை யொழிந்து நம்பாரதம்
நிசிசரர் போன்று நிலவிப் படர்தரும்
பசிபிணி மிடிகள் ஒழிய
வசியும் வளனும் மல்கி வாழியவே.

தில்லைச் சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை

(கட்டுரை 20)

தொண்டைமண்டலாதீனம் மகாசந்நிதானம்

சீலஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் அவர்கள்

ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் மடாலயம்,

காஞ்சிபுரம்.

—<O>—

மறைநாறுஞ் செவ்வாய் மடக்கிள்ளாய் பிள்ளைப்
பிறைநாறுஞ் சிறடியெம் பேதாய் — நறைநாறும்
நாட்கமலஞ் சூடேம் நறுந்துழாய் தேடேம்நின்
தாட்கமலஞ் சூடத் தரின். 19

இவ்வெண்பா விண்பாவேயன்றி மண்பாவாகாது. இதில் உள்ள சொற்களையும் அவற்றின் பொருள்களையும் நோக்கின் விண் (விண்ணுலகு, சிவனுலகு இரண்டற்கும் உரிய) பா என்பது தெரியாதிராது. மறை, பிறை, கமலம், துழாய் எல்லாம் மண்ணைச் சார்ந்தனவாயிருப்பின் விண்பா ஆகாது. மறை தெய்வ மறை. பிறை பிள்ளைப் பிறையாயினும் விண்ணிலுள்ள வெள்ளைப் பிறை. கமலம் பொதுவாக மண்ணீரதாயினும், பிரமலோகத்ததும் விண்டுலகத்ததும் சிவலோகத்ததுமான கமலமே இதிற் கூறப்பட்டது. மடக்கிளியும் சிவபிரானது இடப்பாகத்தில் உள்ளது. சிறடி நறை நாறுந்தாள் எல்லாம் அந்நாயகியின. அன்ன ஆதலின் இவ்வெண்பாவில் மண்பாலன இல்லை, எல்லாம் விண்பாலன. அதனால் இவ்வெண்பா விண்பா (தெய்வப்பா, திவ்வியப்பா) வேயன்றி மண்பா ஆகாது.

இப்பாடற் பொருள் வேறு பாடல்களிலும் உண்டு. உளதாயினும் இந்நயம் எங்கும் பெறலரிது. இப்பாடற் குறிப்புரைகள்:—

“நின் திருவடித் தாமரைகள் கிடைக்கப் பெற்ருல் பிரம பதவியையும் திருமால் பதவியையும் விரும்பேம் என்றபடி. மறைநாறுஞ் செவ்வாய்; ‘மறைசெய்த வீர்ந்தண் மழலை’ (16) (தமிழ்த் தெய்வம்) ” நாட்கமலம் - அன்றலர்ந்த தாமரைமலர் மாலை. துழாய்-துழாய் மாலை. இதனுற் கூறியது நினது திருவடிக் கமலஞ் சூடப்பெறின் ‘கொள்ளேன் புரந்தரன் மாலயன் வாழ்வு’ என்பது (வி. சி. ரா. பி).

இதன் பொருளை விளங்கப்பெற விரும்பும் சாமானியர்க்கு இக்குறிப்புரையே போதுவன ஆகும். பதம் பிரிக்கத் தெரியாதவர்க்கு இக்குறிப்புரை பயன்தாராது. சூடே தேடே என்னுஞ் சொல் சூடேயாகும். மகர மறைவு நகர வரவு பற்றியது என்று தெரிந்தவர்க்கே அவ்வுரை செவ்வுரை. ஏனையர்க்கு ஒவ்வுரையாகாது.

இதன் பொருள்

மறைநாறுஞ் செவ்வாய்-வேதங்கள் தோன்றிய செய்ய வாயையுடைய, மடக்கிள்ளாய்-இளங்கிளியே, பிள்ளைப் பிறை-இளம்பிறை(த்திங்கள்), நாறும்சீறடி (சிறு + அடி) - கணவனுர் நின்காலில் விழுந்து ஊடலைத் தீர்க்கும் பொழுது பட்டதால் பிறைக்குறி தோன்றும் சிறிய மெல்லிய திருவடிகளையுடைய, (சிறடிப் பேதை என்று இயையும்; ‘பேதாய்’ விளி) எம்-அடியேங்களது, பேதாய்-தாயே, நறைநாறும்-தேன்கமழும், நாள்கமலம் சூடேம்-நாட்காலத்தில் மலர்ந்த தாமரைப் பூவினைச் சூடவிரும்பேம் (பிரமன் பதவியும் வேண்டேம்), நறுந்துழாய் தேடேம்-நறுமணம் வீசுந் துளசியையும் தேடமுயலேம் (விஷ்ணு பதவியும் வேண்டேம்), [ஏன் இப்படி அயன்மால் இருவர் பதமும் வேண்டா என்ருய் எனின்] (நறைநாறும்) நின்தாள் கமலம் சூடத் தரின்-உன்னுடைய திருவடித் தாமரையைச் சூடிக் கொள்ளத் தந்தருள்வையாயின் அவ்விரண்டனையும் வேண்டேம் என்றவாறு.

கமலம் என்றது பூவையே. மாலையை அன்று. துழாய் என்றதும் மாலையைக் குறிக்காது. சிவகாமவல்லியின் திருவடி வழிபாட்டாளர்க்குப் பிரமன் பதவியும் விஷ்ணு பதவியும் ஒரு பொருளாக விரும்பத் தக்கன அல்ல. அவை பதமுத்தியே

அன்றிப் பரமுத்தியாகா. திருவடிப்பேறு ஒன்றே பரமுத்தி யாகும். தரின் சூடேம். தேடேம்; தாராதொழிந்தால் சூடவும் தேடவும் கூடலாம். தரின் சூடவும் தேடவும் யாம் செய்யேம். அவற்றைப் பொருளாகவே கொள்ளேம்.

"கொள்ளேன் புரந்தரன் மால்அயன் வாழ்வு குடிகெடினும்
நள்ளேன் நினதடி யாரொடல் லால்நர கம்புகினும்
எள்ளேன் திருவரு ளாலே இருக்கப் பெறின்இறைவா
உள்ளேன் பிறதெய்வம் உன்னைஅல் லாதெங்கள் உத்தமனே"

என்னுந் திருவாசகத்தின் முதலடியைக் காட்டிய குறிப்புரை யாளர் சைவநெஞ்சம் இங்குக் குறிக்கொளற்பாலது.

சிறுமையடி சீறடி. சிறுமையூர் சீறூர் சிற்றூர். சிற்றடி எனலும் உண்டு. பேதை என்பது ஈண்டு அம்பிகை என்னும் அளவில் அமைந்தது. எம்பேதாய் என்பதற்கு எமது பேதையே எனல் அறியாமையின் பாற்படுவதுமன்றிக் கழுவாயில்லாத வழுவாய்ச் சொல்லுமாகும். 'பேதை', பெதும்பை, மங்கை, மடந்தை, அரிவை, தெரிவை, பேரிளம்பெண் என்றுள்ள எழு பருவ வேறுபாட்டுக்கும் எம்பெருமாட்டிக்கும் ஒரு சிறிதும் தொடர்பில்லை. உலகத்துப் பெண்டிர்க்கு அப்பருவம் உண்டு. உலகநாயகிக்கு அவை இல்லை. "எழுபெரும்புவன முழு தொருங்கு உதவும் இறைவி" என்று மறை கையெடுத்து ஆர்க்க வும் இடைநுடங்கும் மடநடையிளங்குமரி என இருந்த கனகள்வி (பெருந்திருடி)யை மடநடையிளங்குமரி என்னும் பொருட்டாகிய 'பேதை' என்னும் பெயராற் குறிக்கலாமே அன்றி மற்று எப் பெயராலும் (பெதும்பை முதலியவற்றாலும்) குறிக்கலாகாது. ஏன்? என்றும் ஒரே நிலையினளாதலின். பாவலர் தம் பாட்டை நோக்கி எப்பெயரையும் ஆள்வர். இதனை நோக்குவரோ? 'பேதையொரு பாற்றிரு மேனியொன் றல்லன்' என்னுந் திருவாச கத்தில் அப்பெயர் அமைந்தவாற்றை அறியாப்பேதைக்கு அறி விக்கவல்லார் ஆர்?

முடிவு

இறைவி சிவகாமியம்மை திருவறச்சாலை சமைத்தருளினுள். அதில் வைத்த முதல் மிகச் சிறிது. வளர்த்த அறம் அளவுட்

படாதது. பெரிது பெரிது எனச் சொல்லலாமே அன்றி, எவ்வளவு பெரிது எனின் இவ்வளவு பெரிது என்று வரையறுத்துச் சொல்ல அவ்விறைவிக்கும் அரிதே. ஒப்புரைக்க முயன்ருல் திருப்பனந்தாள் ஸ்ரீ காசி மடத்தின் அறத்தையே எடுத்துக் காட்டலாம். அது குறைவிலா நிறைவேயாதலின், இக்காலத்தவர் அதை அதற்கு ஒப்புரைக்க ஒரு சிறிதும் அஞ்சார்.

அம்பிகை சமைத்த அறச்சாலையை ஆசிரியர் குமரகுருபரர் 'திருவறச்சாலை' என்றதன் காரணம் யாது? அறச்சாலைக்கு வைப்பாயுள்ள 'திரு'வும் அளவுட்படாதது. காமக்கோட்டியம்மையாகிய சிவகாமவல்லிக்குக் கிடைக்காத 'திரு' வேறு யார்க்குக் கிடைக்கும்? முந்நாழி நெற்கொண்டு முப்பத்திரண்டு அறங்களையும் வளர்த்து வரும் பெருந்திறம், 'அறம்' 'அறம்' என்று பெயரிட்டுப் பழைய அறங்களையெல்லாம் பெயர்த்து அளவில்லாத பொருளைப் பெறுந்திறம் உடையார்க்கு விளங்குமோ? திருவறச்சாலைகளாகிய திருக்கோயிலிலும் திருமடங்களிலும் பொருளழிவதை அறிவால் வகுத்து நோக்கின், ஈவோ கிடைக்கும்? ஈ. ஓ. க்குக் கிடைக்கும். என்ன கிடைக்கும்? அறத்தின் பயனு? இல்லை. அதன் மறுதலைப் பயன். எங்குக் கிடைக்கும்? அண்ணுத்தல் செய்யா அளற்றிலன்றி வேறு எங்கு அப்பயன் உண்டு? நூற்றுக்குப் பத்து ஆவது நல்லது எதிலும் உண்டு. அக்கறைக்கு ஈ. ஓ. க்களிலும் உண்டு. அவர்கள் நல்லறப்பயனே நாள்தோறும் நண்ணி நன்கு வாழ்கின்றனர். திருவெண்காட்டுத் திருக்கோயிலின் செல்வத்தைப் பெருக்கிய இருவர் (ஈ. ஓ.) எல்லாராலும் புகழப்பெறுகின்றனர். அன்னேர் சிற்சிலர் இருத்தலால்தான் மழை பெய்கின்றது. அவர்களால் அருளாகிய திருவளரும் அறச்சாலையாக ஆலயங்கள் சிறந்து விளங்கி, வழிபாட்டாளர்க்கெல்லாம் இன்பவாழ்வு அளிக்கின்றன. அம்மையே நீ திருவறச்சாலை சமைத்து நல்லறம் பூண்டது என்ன பயன் தருவதாகும்? நின் கணவனும் எங்கள் அப்பனும் ஆன நடராசப்பிரான் ஊமத்தம் பூவை முடியிற் சூடி வீடுதோறும் கடைவாயிலில் நின்று பிச்சையெடுத்துக் கொண்டு தெருவெல்லாம் ஓடித் திரிகின்ருன். அத்திரிச்சலா நீ செய்யும் அறத்தின் பயன்? அது நினக்கு எரிச்சலே தோற்றவில்லையா? பிச்சையெடுப்பதற்கும் ஒரு சக்தி தேவை. அவனும் சக்தியாகிய உன் 'மிகுபுகழ்'

கொண்டே பிச்சை பெறுகின்றான். பெண்டாட்டி செய்து வந்த பேரறத்தையெல்லாம் அறிந்த உலகோர், அவளது தர்ம ப்ரசித்தம் பற்றி அகமுடையான் பிச்சையெடுக்கின்றதைப் பார்த்துச் சும்மா இருப்பரோ? அவள் செய்யும் அறங்களின் பயனை நுகரும் உலகு, அவனுக்குப் பிச்சையிடுவதில், சிறிதும் பின் வாங்காது. சீர்த்தி–ப்ரசித்தமான பெரும்புகழ். அம்மையின் சீர்த்தி (–மிகுபுகழ்) ஐயனுக்குப் பிச்சை எல்லா இடத்திலும் கிடைக்கச் செய்கின்றது. பலயாண்டுகளுக்கு முன் அண்ணாமலைப் பல்கலைக் கழகத்திற் பேராசிரியராக இருந்து புகழுடல் பெற்று விளங்கிய சைவப் பெரியார் ஒருவர் சீர்த்தி கொண்டு, அவர் மகன் பல்லூரிற் சென்று தமிழ்ப் புலமையுடையவர் பலரிடத்திற் பொருள் கேட்டுப் பிழைத்தும் புலவனாகாதொழிந்தான். பிரசித்தி வாய்ந்தவராற் பிரசித்திவாயாதார் பிழைத்தல் உலகியல். அதை உன் சீர்த்திகொண்டு பிச்சையெடுத்துத் தெருவெல்லாம் திரிதரும் என்று குறித்தார்.

"தருவற நாணத் திருவறச் சாலை சமைத்தம்மைநீ
பொருவறு நல்லறம் பூண்டதென் னும்எந்தை பொற்புலியூர்
மருவறு மத்தம் முடித்துக் கடைப்பலி தேர்ந்துவம்பே
தெருவற வோடித் திரிதரு மால்மற்றுன் சீர்த்திகொண்டே"

என்னும் பாடலின் சிறப்பை எழுத எமக்கு ஆற்றல் இல்லை. அம்மையின் அறக் கொடைக்கு விண்ணுலகத்துக் கற்பகத் தருக் கொடை பெரிதும் குறைவுடையது. அக்குறைவை அறிந்து அம்மரம் நாணி மரமாயே நின்றது. அந்நாணமும் அற(மிக) நாணிய நாணம். அக்கொடு(த்தல் செய்யும்) மரம் வறிய நெடுமரமாக நாண வளர்த்த அறங்களின் நிறைவு அம்மைக்கே செம்மையின் உண்டாகும். 'நின்னை அறப்பெறுகிற்கிலேன் நன்னெஞ்சே' என்றதிற்போல நின்றது, 'அற' என்னுஞ் சொல். 'தெருவற வோடித் திரிதரும்' என்றதிலும் 'அற' என்பது அவ்வாறு நின்றதே. 'மிகநாண' என்றலும், தெருவெல்லாம் ஓடித் திரிதரும் என்றலும் தகும். மரு–மணம்; ஆல்–அசை. 'வம்பே' என்றது சிதம்பரச் செய்யுட் கோவையில், "அம்பேருண் கண்ணார்க் கழிந்த மடநெஞ்சே, கொம்பேறுடையான் கழல் இறைஞ்சாது என்கொல்யாம், வம்பே யிறந்து

விடல்'' என்ற செய்யுளில் நின்று தரும் பொருளே தருவது. வம்பு–வீண். வல்பு என்பது வன்பு வம்பு எனத் திரிந்தது. எல்பு–என்பு என்பதில், லகரம் னகரமாயிற்று. எல்–விளக்கம். தென்பு–தெம்பு என்பதில் னகரம் மகரம் ஆயிற்று. அன்பு அம்பு என்ருயதை ''என்னம் பாலிக்குமாறு கண்டு இன்புற இன்னம் பாலிக்குமோ இப்பிறவியே'' என்றருளியதாலும் அறியலாம். 'சீர்த்தி மிகுபுகழ்' என்றது தொல்காப்பியம். இங்குத் தமிழ்த் தெய்வத்தின் குறிப்புரையில், கற்பனைக் களஞ்சியம் கவிதா சார்வ பௌமர் சிவப்பிரகாசர் அருளிய பெரியநாயகி யம்மை கட்டளைக் கலித்துறைப் பாடலுள் ஒன்றைக் காட்டியிருக்கிறது. அதை நோக்கும் வாய்ப்பொடு இந்நூல் விளக்கம் முற்றுறுக.

''இறைவற்குத் தக்க இறுமாப் பெனுமொழி யின்றியொரு
மறுவற்ற தன்மனை யாட்கேற்ற தாம்இறு மாப்பன்எனக்
குறைவற்ற நெற்கோண் டுலகேற் றுனைப்பலி கொள்ளும்அரன்
பெறவுற் றனைஅனை யேகுன்றை வாழும் பெரியம்மையே.''

இதில் 'உனைப் பெறவுற்றனை' என்றியைத்தல் வேண்டும். உனைப் பலிகொள்ளும் என்றது கவியைக் கவிக்கும் மறுவே. ஆனைக்கும் அடி சறுக்கும். ஆயினும் ஆனை ஆனையே. பூனையாமோ?

தில்லைச் சிவகாமியம்மை யிரட்டைமணிமாலை முற்றிற்று.

சீலஸ்ரீ காசிவாசி அருணந்தி மாமுனிவர் நீடினிது வாழ்க, வாழ்க, வாழ்க.

வித்துவான் ஸ்ரீமத் முத்துக்குமாரசுவாமி முனிவர்
நீடூழி வாழ்க, வாழ்க, வாழ்க.

நால்வர் வயது

அப்பருக்(கு)எண் பத்தொன்(று); அருள்வாத வூரருக்குச்
செப்பிய நாலெட்டில் தெய்வீகம் — இப்புவியில்
சுந்தரர்க்கு மூவாறு; தொன்ஞான சம்பந்தர்க்(கு)
அந்தம் பதினு(று) அறி.

திருமுருகாற்றுப்படை —
சூர்முதல்தடிந்த சுடரிலைநெடுவேல்

திரு. தெ. பொ. மீனுட்சிசுந்தரனுர் அவர்கள்

அழகில் மட்டுமே ஆண்டவன் விளங்கவில்லை; படைப் பாற்றல் மிக்க இளமையின் கூட்டுறவில் மட்டுமே அவன் தங்கிவிடவில்லை; நன்மையில் மட்டுமே அவன் குடி கொண்டிருக்கின்ருன் என்பதற்கில்லை. இங்கெல்லாம் அவனைக் காண்பது எளிது. ஆனுல் எல்லாமாய இறைவன் இவையல்லாத இடத்திலும் விளங்கத்தானே வேண்டும்? இல்லையானுல் அவன் முழுமை மூளியாகப்போகும். ஆனுல், அந்தப் பிற இடங்களில் அவனைக் காண்பது அருமையினும் அருமை. தீமையும் அலங் கோலமும் அழிவாற்றலும் எப்படி இன்பக் காட்சிகளாகும்? தம் உள்ளே இறைவன் இருப்பதை அவை எவ்வாறு காட்ட முடியும்? இதுவே இங்குள்ள முரண்பாடு; இரண்டாட்டம். உலகில் நாம் படும் துன்பமெல்லாம் இங்கேதான் விளங்குகிறது. நம் உலக வாழ்க்கையாம் ஆற்றிடையே நம்மை வருத்தி, வாட்டி மயக்கும் உறழ்தரு காட்சியின் நுட்பம் இங்கேதான் இருக்கிறது. இந்த உறழ்தரு காட்சியின் இரண்டாட்டம் எப்படித் தீரும்? அழகு நிறைந்த, இளைய மலையரமகளிரின் இன்பவிளையாட்டில் காந்தட் கண்ணி நிறைந்த சென்னியனைக் கண்டதுபோலப் பேய்மகனின் அலங்கோல அழிவுக் கூத்தினிடையேயும் செவ்வேட் சேயின் விளக்கத்தைக் கண்டு காட்டுகிருர் நக்கீரர். இன்ப இயல் நாடகங்கள் மட்டுமா இலக்கியங்களாகச் சிறக்கின்றன? துன்ப இயல் நாடகங்களும் இலக்கியங்கள் ஆவதோடு ஷேக்ஸ்பியர் முதலியவர் எழுதும்போது தலைசிறந்த இலக்கியங்களாகவும் உயர்ந்து ஓங்குகின்றன. அங்கே ஓர் அமைதியையும், பாவலன் காணும் நீதியையும் நாம் உணர்ந்து மகிழ்கிருேம். அங்கேயும் இந்த இரண்டாட்டம் மறைகிறது. அத்தகையதொரு துன்ப

இயல் நாடகத்தை இங்கே காண்கிறோம். பேய்க்கூத்தின் வழியே அது விளங்குகிறது.

வேல் என்றாலே வெற்றிக்கு வழி கோலுவது. (வெல்வது வேல்) பிற தடையை எல்லாம் வெல்லுவதே நெடுவேல். அழகுக்குத் தடை; நன்மைக்குத் தடை; உண்மைக்கே தடை; உளதாந் தன்மைக்கே தடை; ஒளிவடிவாம் அறிவுக்கே தடை; இன்பத்திற்கே தடை—நீண்டு நீண்டு இவற்றையெல்லாம் எட்டிப் பிடித்து வெல்லுவதே நெடுவேல். வென்ற நிலையில் அந்த வேலின் காட்சி மனத்தைக் கவர்கிறது. இலையை அணைப்பது போல் அணைத்துக்கொள்ளலாம் போல் தோன்றுகிறது. இலை வடிவானதுதானே அந்த வேல். இந்த இருப்பு நிலையோடும் இன்ப நிலையோடும் ஒளிவடிவாகச் சுடர்விட்டு விளங்கும் ஒளி நிலையாகவும் அது தோன்றுகிறது. அந்த ஒளி ஒரு வகையில் நோக்குமிடத்துத் தடையை வெட்டித் தள்ளத் துடிக்கும் எரிவின் ஒளியாகத் தோன்றுகிறது. கொலைக்குள்ளே பசுமை; சீற்றத்தி னுள்ளே பேரின்பம் இவ்வாறு இங்கே காண்கிறோம். வெட்டி எறிந்த வெற்றிவேல் இது. அதனால் நடுக்கத்திற்குக் காரண மான அந்நடுக்கத்தின் ஆணிவேரையும் அடிமரத்தையும் வெட்டிவீழ்த்தி அஞ்சாத அருளொளியாகக் கொழுந்துவிட்டு ஓங்குகிறது. மரத்தை வெட்டுகிறது இலை. நெற்பயிரில் நெல் விளைய வேண்டுமானால்-ஒரு நெல்லில் பல ஆயிரம் நெல் விளைய வேண்டுமானால் பழுத்த நெற்பயிரைத் தடியத்தானே வேண்டும். ஒருநெல் தன்னிலைமை இழந்து ஒழிந்தால்தானே பல நூறு நெல்லை விளைவித்துத் தரமுடியும். பழமை புதுமையைத் தடுக்கும் போது பழமையை வெட்டிப் பிளந்து கொண்டு வருவது போல, என்றும் வாழும் நிலையான புதுமை மேலோங்கி வளர்கிறது. இதற்குத் தன்னையும் அறியாமல் இடம் கொடுத்துப் பழமை மறைகிறது—இல்லை—பழமை புதுமையாக மாறுகிறது.

மனிதனுடைய வெற்றியை இங்கே காணலாம். வாழ் வாங்கு வாழும் மனிதன், நத்தம் போற் கேடும் உளதாகும் சாக்காடும் வல்ல வித்தகனாய் என்றென்றும் வாழும் வானவனா கிறான். இவனை எதிர்த்துப் பிணைத்துத் தடைப் படுத்தியவை செடிகொடிகளும், பிற உயிர்வகைகளும் ஆம். செடிகொடிகள்

நமக்கு உதவும் நிலையும் உண்டு. நம்மை அழிக்கும் நிலையும் உண்டு. நம்மை எதிர்த்து நிற்கும் இயற்கையையே 'சம்சார விருக்ஷம்' என்று வடநூலார் கூறுவதுண்டு. நம்மை வாழ வைக்க நேர்நிற்கும் மரத்தைப் போலாது நம் தலைமேல் வீழ் வதற்காகத் தலைகீழாய் நிற்கும் மரம்போல அதனை உபநிடதம் காண்கிறது. அங்கே ஓர் அரசமரம் தோன்றுகிறது. ஆனால் புத்தர் அரசமரத்தடியில் ஞானவிளக்கம் பெற்றபின்னர், தமிழ நக்கீரர் அதனை 'மோட்ச விருக்ஷமாக' அல்லாமல் 'சம்சார விருக்ஷமாக' காண்பதற்கில்லை. தமிழர்கள் தங்களிற் பலர் விரும்பும் சம்சாரம் போலப் பலருக்கும் இனிக்கும் மாம்பழம் தருகின்ற மாமரமாகவே அதனைக் கண்டார்கள். மாங்கனியால் நல்ல இளம்பெண்ணும் உயிரிழந்த கதையை அவர்கள் அறிந் திருந்தார்கள். நன்னன் என்ற ஒரு தலைவன் தனக்கென வளர்ந்த ஒரு மாமரத்திலிருந்து தண்ணீரில் விழுந்து வந்த மாங்கனியை உண்ட பெண்ணைக் கொன்றானும். பெண்கொலை யைத் தூண்டிய மாமரம் சம்சார விருக்ஷத்தைக் குறிப்பதாகியது. அது தலைகீழாய்க் கவிழ்ந்துள்ள மாமரம் (கவிழ்மா). பூத்துக் குலுங்குகிற மரம். காயோ பழமோ அங்கில்லை. தலைகீழ் நின்றால் பழுத்துக்கனிவது எங்கே? இதனை வெட்டித் தடிந்து ஞானக்கன்றோடு ஒட்டிவைத்துத் தரையில் வேரூன்றும் ஒட்டு மாஞ்செடியாக வளர்த்தல் வேண்டும்.

'சம்சார சாகரம்' என்ற வழக்கும் உண்டு. 'பிறவிப் பெருங்கடல்' என்கிறார் வள்ளுவர். அந்தப் பெருங்கடலுக்கு உள்ளேதான் தலைகீழான இந்த மாமரம் விளைந்து நிற்கின்றது.

உலகம் முழுதும் கடலாய் இருந்த காலம் ஒன்று. அதி லிருந்து முற்றி வளர்ந்து வெளிவருவதுபோல் இயற்கையின் பலவேறு மாறுதல்களால் தரையும் பாறையும் தோன்றுகின்றன. இந்தத் தரைக்கு முன்னைய நிலையாக விளங்குவது அந்தப் பெருங்கடல். அதன் உள்ளே சென்றுதான் இந்த மாமரத்தை வெட்டித்தடிய வேண்டும். தரை தோன்றிய நிலையில் உயிரினங் களும் தோன்றலாயின. முதலில் கடலில் தோன்றிப் பின் தரையில் பரவி மாறிமாறி வளரத் தொடங்கின. தரைக்கு வந்தவை முதலில் இருவேறு வகையாகவும் வாழத் தெரிந்தவை.

இன்றும் நம் தவளை நிலத்திலும் வாழும், நீரிலும் வாழும். மனிதன் வளர்ந்தபின்னர் அங்கேயும் பகைகள் கண்டான். திமிங்கிலமும் நிலத்திலும் நீரிலும் வாழும். அதனோடு மனிதன் கொண்ட பகையின் விருப்பை மோபி டிக் (Moby Dick) என்ற அமெரிக்க நாவல் என்றென்றும் மறவாத நிலையில் விளக்குகிறது.

இந்தப் பகைமையிலே மனிதனது பழைய வரலாற்றையும் காணலாம். அதனை உருவகமாகக் கொண்டால் பிறவிப் பெருங் கடலைக் கடக்கும் மனிதனது ஆன்மீக வாழ்வையும் காணலாம்.

> "தனியனேன் பெரும்பிறவிப் பௌவத் தெய்வத்
> தடந்திரையா லெற்றுண்டுபற்றொன் றின்றிக்
> கனியினேர் துவர்வாயா ரென்னுங் காலாற்
> கலக்குண்டு காமவான் சுறவின் வாய்ப்பட்
> டினியென்னே யுய்யுமா றென்றென்றெண்ணி
> யஞ்செழுத்தின் புணைபிடித்துக் கிடக்கின் றேனை
> முனைவனே முதலந்த மில்லா மல்லற்
> கரைகாட்டி யாட்கொண்டாய் மூர்க்க னேற்கே."

என்று மணிவாசகர் இதனைப் பாடுகிறார்.

எல்லாமாகிய இறைவன் புரிகின்ற திருவிளையாடலையும் மற்றோர் உருவக வகையாக இங்கே காணலாம். மனித வளர்ச்சிக்குள்ளேயும் அவன்தானே விளங்குகிறான். எல்லாத் தடைக்கும் மேலான பேரிருள் அடர்ந்து தோன்றுவதையும் வெட்டித்தள்ளுபவன் அவனே. நாம் ஒவ்வொருவரும் இதனை வெட்டித் தள்ளியே பேரொளி காணமுடியும். அவன் முதலில் நமக்காக எல்லாம் வெட்டித் தள்ளி நின்றான். இதனால் வெட்டித் தள்ளப்படுகின்ற நிலை முன்னரே அமைந்து விட்டதால் நமக்கும் வெட்டித் தள்ளுவது எளிதாகிறது. உண்மையில் செத்த பாம் பைத்தான் அடிக்கின்றோம். "நான் முன்னரே உன்னுடைய பகைவர்களைக் கொன்றுவிட்டேன்" என்று கண்ணன் அர்ச் சுனனைப் பாரதப் போரில் ஈடுபடுத்தும் போது கூறுகிறான். அண்டத்தில் இருப்பது பிண்டத்திலும் இருக்கும் என்பார்கள். அண்டத்தில் விளங்குகின்ற இந்த வெற்றி பிண்டத்தில் நம்

ஒவ்வொருவருக்கும் நிகழ்ந்துதான் தீரும். அப்போதும் அவன் நமக்கு உள்ளிருந்தோ அல்லது வெளியே நமக்கு வழிகாட்டு பவர்கள் உள்ளத்திலிருந்தோ நமக்கென இந்த வெற்றியை உண்டாக்கிக்கொண்டே வருகின்றான். இப்படிப் புராணக்கதை களாக வருகின்றவை உலகவரலாற்றின் பாடலாகவும் ஆண்ட வன் வரலாற்றின் பாடலாகவும் ஒவ்வோர் உயிரின் வரலாற்றின் பாடலாகவும் விளங்கக் காண்கிறோம்.

தரையிலும், நீரிலும் வாழக்கூடிய நிலையில் இருபேருருவின் ஒரு பேரியாக்கை விளங்குவது கண்டோம். வளர்ச்சியில் ஒவ் வொரு படியில் மேலே மேலே கால்வைக்கும்போதெல்லாம் இந்த இருவேறு நிலைமை தோன்றக் காண்போம். மரவுலகிற்கும் விலங்கு உலகிற்கும் இடைப்பட்ட நிலையில் மரமென்றும் விலங் கென்றும் ஒருங்கே சொல்லக்கூடிய நிலையும் தோன்றுகிறது. மனிதனும் முதலில் விலங்கென்றோ மனிதன் என்றோ சொல்லக் கூடாத நிலையில்தான் இருந்தான்; இன்னமும் இருக்கின்றான். இந்த நிலைமையை வெட்டிப் பிளக்கும் போதுதான் உயிர்வளர்ச்சி முன்னேறுகிறது. வெட்டிப் பிளத்தல் என்றால் பாகுபாடு, மயக்கம் இன்றித் தெள்ளத் தெளிவதேயாம். காட்டில் வாழ்ந்த வர்கள் ஞானிகளையே விழுங்கிவிடுவார்கள். அளவற்ற உட லாற்றல் பெற்றவர்கள். இந்த விலங்கு நிலைமையாம் உடலாற்ற லினும் வேறான அறிவாற்றல் வளரவேண்டும். அப்போதுதான் மனிதன் மனிதனாகின்றான். அங்கே அன்பாற்றல் வளரும்போது வானவனாகின்றான். மெய்ஞ்ஞானம் வளரும்போது ஞானியாய்ப் பின்னர் முற்றிச் சிவனாகிறான். இத்தனையும் சிவன் அருளாலே நிகழும் வெற்றிகள்.

முதலில் இந்தவேறுபாடு நம்மிடை வளரவேண்டும்போது நம்முடைய பழைய வழக்கங்கள் அதனைத் தடை செய்கின்றன. இதனால் இந்த வளர்ச்சியில் ஈடுபடவும் அஞ்சுகிறோம். ஆனால் ஒரு பரிபக்குவநிலை வந்தவுடன் அவனருள் நம்மேல் பாய்கிறது. நாம் ஓடோடிப் போனாலும், தாம்ஸன் (Thompson) என்ற புலவர் பாடுவதுபோல, இந்த வீட்டுலக வேட்டைநாய் நம்மை விடுவதில்லை. இருவேறுநிலைமை அற்றுவேறு வேறாய் ஒழிய ஞானப் பேருருவாய் நாம் மாறும்வரை நம்மைவிடாது அது பின்

தொடர்கிறது. இருபேருருவின் ஒரு பேரியாக்கை அறுவேறு வகையின் அஞ்சுவர மண்டுகிறது. இங்கே நமக்கு ஞானத் தடையாக உள்ளவையெல்லாம் நமக்கு இனமாகி இனிக்கின்றன. இந்தக் கூட்டுறவில் மயங்கி அருளை எதிர்க்கின்றோம். ஆனால் உண்மையான இயற்கை உலகப் புறப்பகைகளும் மனிதவுலகப் புறப்பகைகளும் நமக்குள்ளேயே ஞானவடிவான அன்பை அழித்துக் கொண்டு தோன்றுகின்றன. கோபம் முதலிய அகப் பகைகளும் கதைகளிலே வரும் அசுரர்களைவிட மிகமிக மாயையும் ஆற்றலும் படைத்தவைகள். அருள்பொங்கும்போது இவற்றின் கொற்றம் எல்லாம் அழிகின்றது. அந்த நிலையில் பிறவிப் பெருங்கடலில் எழுந்து நின்று உண்மையின் நிழல்போல் உண்மையைத் தலைகீழாகக் காட்டிய சம்சாரம் என்கிற மாமரத்தின் தோற்றமும் அடியோடு வெட்டிக்களையப் பெறுகிறது. இதுவே அவனுடைய கொற்றம் - அவனுடைய வேல் கொன்று குவித்ததால் வந்த கொற்றம்.

இந்த வெற்றியைப் பற்றிக் குற்றம் குறை கூறுவதற்கில்லை. பிற கொற்றங்கள் போலல்லவே இந்தக் கொற்றம். கொலை என்பதெல்லாம் உருவகம்தானே! யாருக்கு இங்கே கேடு? எல்லாம் சிவமாகின்ற இந்தக் காட்சியில் தீமையும் அலங்கோலமும் சாவுமே நன்மையும் அழகும் அழியாமையுமாக மாறுகின்றன; மயக்கம் எல்லாம் தீர்கின்றன. கண் குருடு தீர்கிறது. அருளைக் கண்டு மருண்ட வெருட்சியும் தீர்கிறது. நிலையான இன்பம் பேரொளியாகப் பொங்குகிறது. இந்தப் பேரொளியே செக்கச் சிவந்து தோன்றுகின்றது. அவன் ஏந்தியிருக்கின்ற வேல் செவ்வேல். எப்போதும் இந்த ஞானப்போரைச் செய்து கொண்டிருத்தலின் அது எப்போதும் செக்கச் சிவந்திருக்கின்றது. எப்போதும் இவ்வாறு நின்றுகொண்டிருக்கக்கூடிய வேல் ஞானம் ஒன்றேதான். இவ்வளவு பேராற்றல் படைத்தவன் நமக்கு உரிமையும் வழங்கி நம்முடைய பக்குவத்திற்கேற்பவும், நம்முடைய வினைத்திறத்திற்கேற்பவும் நடுநிலைமையில் நிற்கின்றான் – செவ்வேல் ஏந்திநிற்கின்றான்.

இத்தகைய எல்லையற்ற பேராற்றல் உடையவன் எடுப்பார் கைப்பிள்ளைபோல நமக்கு எளிவந்து அருள்கின்ற நிலையை

நோக்கி அவனை ஒரு குழந்தை என்றே கூறிவிடலாம். இந்தக் குழந்தையை நம் குழந்தை – நம் சேய் என்றும் கூறலாம். வித்திலிருந்துதான் மரம் விளைகிறது. ஆனால் அதில் விளையும் கனியின் வித்தினை வித்தில் தோன்றியது என்று சொல்லாமல் மரத்தில் விளைந்தது என்கிறோம். சீவனுக்குள்ளே சிவன் ஒளிர் கிறது. வித்தை அடக்கி மரம் தோன்றுவதுபோல் சிவனை அடக்கிச்சீவன் தோன்றுகிறது. ஆனால் ஒருநாள் சிவம் பூத்துக் காய்த்துக் கனிகிறது. அதனைப் பழைய உலக மரபுப்படி சீவன் பூத்த சிவன் எனலாம். இந்த வகையில் நம்முடைய சேய்தானே அந்தச் சிவமும்.

ஆண்டவன் கொற்றம் மாசுமறுவற்ற மறுவில் கொற்றம். ஆனால் இந்தக் கொற்றம் அவனுக்கு இயல்பாக அமைந்தது. வெற்றியால் வருகின்ற இந்த நல்ல இசைப்புகழ் எங்கிருந்தோ வந்து அவனை அடையவில்லை; எய்தவில்லை. அவன் நம் உள்ளே தான் இருக்கின்றான். ஆனால் ஒருநாள் அவனை உணரும்போது அவன் வந்தான் என்கிறோம். வாராதே வரவல்லான் அவன். இப்படித்தான் அவனுடைய பெருமையும், புகழும் செல்வமும் எல்லாம் இயல்பாக அமைந்தவை. பழைய தொல்காப்பிய முறைப்படி அவன் வாகையெல்லாம் அவனுக்கியல்பான முல்லையே எனலாம். சென்றடையாத திருவுடையான் அவன்.

இனி எய்யா நல்லிசை என்றால் வேறொரு பொருளும் தோன்றுகிறது. எய்யாமை என்றால் அறியாமை என்று பொருள். (தொல். உரியியல்) எனவே எய்யா நல்லிசை என்பது ஒருவரும் அறிந்துணர முடியாத புகழ் என்றும் பொருள்படும். (நச்சினார்க்கினியர்) இந்தப் புகழைக் கனவு கண்டதுபோல உருவகமாகக் கூறுவதன்றி வேறு எப்படி விளக்க முடியும்?

இந்தக் கொற்றத்தைக் கண்டபின் கொற்றவள்ளைபாடி ஆடவேண்டாமா? அந்தக் கூத்திலைப் பின்பார்ப்போம்.

திருமந்திரம் TIRUMANTIRAM

ஐந்தாம் தந்திரம் Tantra the Fifth

டாக்டர், திரு. பா. நடராசன் அவர்கள் M. A., D. Litt.,
Member, Legislative Assembly,
MADRAS-31.

மலர் 16. இதழ் 12-ன் தொடர்ச்சி

The Infine Vasts of Primal Sakti.

அருட்சத்தி சுகானந்தப் பெருவெளியில் உள்ளது.

97. தீம்புலனை திசையது சிந்திக்கில்
ஆம்புலனாய் அறிவார்க்கு அமுதாய்நிற்கும்;
தேம்புலனை தெளிவறிவார்கட்குக்
கோம்புலன் நாடிய கொல்லையுமாமே.

If thou meditateth on the primal source
Whence the evil senses sprang;
Thou shalt know it as the Land of Beaming
-The ambrosia of the Realised;
To them that hath been given the clear vision, nectar Sweet,
It is verily the Infinite Vasts of Wisdom's highest seeking.

தீமையைத் தரும் ஐம்புலன்கள் தோன்றிய மூலமாயை யின் உறைவிடத்தை ஆராய்வார்க்கு, அது ஆன்மா உய்வதற் குரிய அருட்சத்தியாய் ஞானிகளின் அமுதமாய் அமையும். தேன் தோன்றியது போன்ற இனிமை கொண்ட ஞானத்தெளிவு பெற்றவர்கட்கு, அவ்வருள் ஞானநெறி தேடிய பெருவெளியு மாகும்.

குறிப்பு:

வரி: 1. தீம்புலன் – தீமையைத் தரும் ஐம்புலன்.
2. ஆம்புலன் – தான் அவன் ஆகுகின்ற நிலம்; விடுபேறு.
3. தேம்புலன் – தேன் தெரிகின்ற.
4. கோம்புலன் – கோப்புலன் – அறிவின் தலையாட
கொல்லை – சுகானந்தப் பெருவெளி. [சிவஞானம்.

Arul Sakti helps all along to attain Salvation.

அருட்சத்தி முத்திநெறிக்கு உதவுகின்றது.

98. இருள் நீக்கி, எண்ணில் பிறவிகடத்தி,
அருள் நீங்கா வண்ணமே ஆதி அருளும்;
மருள் நீங்கா வானவர் கோனொடும் கூடிப்
பொருள் நீங்கா இன்பம் புலம் பயில்தானே.

The Primal Energy releaseth the Soul from
enveloping gloom,
Roweth it across the sea of myriad births,
Granteth the Grace Abiding;
And landeth it on the shores of Truth's Bliss
To be United to the Lord of Heavenly Beings
–Themselves as yet unfree from Impurity's obscuration.

கேவலாவத்தையில் மல இருளில் கட்டுண்டு கிடந்த ஆன்மாவை சகலாவத்தையில் உய்வித்து, உடல் தந்து, பல பிறவிகள் எடுக்கச் செய்து, இறுதி வரை விடாது, அருளை வழங்குகின்றாள் ஆதிச்சத்தி; பின்னே சுத்தாவத்தையில் உண்மை அறிவானந்தம் என்றும் பயிலும் பேரின்பப் பெரு வெளியில் தேவர்களுக்கும் அரசான இறைவனோடு இரண்டறக் கலக்கச் செய்கின்றாள். [அந்தத் தேவர்களும் இன்னும் ஆணவ மலம் நீங்கப்பெறாது அந்தப் பதத்தினைப் பெற்றிலர்.]

குறிப்புரை:

வரி: 3. மருள்நீங்கா – ஆணவம் நீங்கப்பெறாத; — தேவர்கள் விஞ்ஞான கலர் ஆகையால், ஒரு மலம் இன்னும் நீங்கப் பெறாதவர்.

மருள் நீங்கா நின்ற என்று செய்யா நின்ற என்ற வினைப்பாடாகக் கொண்டு, ஆணவம் கழியப்பெற்று என்று, முத்திநெறிக்கு முயலும் ஆன்மா மேலும் ஏற்றிப் பொருள்கோடலாகும்.

தேவர்கோன் – இறைவன்.

Grace illumineth.

அருள் ஒளி செய்கின்றது.

99. இருள் சூழ் அறையில் இருந்தது நாடில்,
பொருள் சூழ் விளக்கது புக்கெரிந்தாற் போல்,
மருள் சூழ் மயக்கத்து மாமலர் நந்தி
அருள் சூழ் இறைவனும் அம்மையுமாமே.

As groping into a chamber enveloped in thick gloom,
A sudden shaft of light pierceth and illumineth,
So, into the gloom of bewildering Ignorance
Is the presence of the Lord and Lady of Grace
–She, the adored of Nandi, by blossoms myriad.

இருண்ட ஒரு அறையுளே தேடிக்கொண்டிருப்போருக்கு, விளக்கொன்று திடீரெனப் புகுத, உடனே யாவும் ஒளிபெற்று ஓங்குதல்போல, நந்தி பன்மலரால் அருச்சித்துப் போற்றும் இறைவனும் அருட்சத்தியும் வெளிப்படுகின்றார்கள்.

Grace leads the Soul to Salvation through successive Stages.

படிப்படியாக அருட்சத்தி ஞானநிலை நோக்கி ஆன்மாவை அழைத்துச் செல்கின்றாள்.

100. மருட்டிப் புணர்ந்து, மயக்கமு நீக்கி
வெருட்டி வினையறுத்து, இன்பம் விளைத்துக்
குருட்டினை நீக்கி, குணம்பல காட்டி,
அருட்டிகழ் ஞானம் அது புரிந்தாளே.

She tempted the Soul with guiles,
Took him to Her bosom,
Shook him from stupor,
Dispelled his Karmaic hordes,
Destroyed them to the roots,
Filled him with rapture
Lifted the veil of his Ignorance
Granted many a favour
And then, then, bestowed on him Her Grace
that illumineth.

அருட்சத்தி என்னும் மாயாள் ஆன்மாவை ஆசைபல காட்டிப் புணர்ந்தாள்; அஞ்ஞான மயக்கத்தைக் களைந்தாள்; கன்ம வினைத்திரளை அச்சுறுத்தி விரட்டினாள்; அவற்றை வேரொடும் அழித்தாள்; பேரின்பம் நல்கினாள்; ஆணவம் என்னும் குருட்டு நிலையை நீக்கினாள்; நலம் பல காட்டினாள்; இறுதியாக அருள் ஞானத்தையும் தந்தாள்.

(தொடரும்)

முத்துக்குமார சுவாமி பிள்ளைத்தமிழ்
உ ரை ந டை

பாலகவி வயிநாகரம்,

திரு. வே. இராமநாதன் செட்டியார் அவர்கள்,

தேவகோட்டை.

(மலர் 16. இதழ் 12-ன் தொடர்ச்சி)

உண்ணெகிழ் தொண்ட ருளத்திருள் சிந்திட
ஒளிவிடு முழுமணியே
உயர்மறை நூல்கலை முடிவின் முடிந்திடும்
ஒழுகொளி மரகதமே
விண்ணொடு மண்ணை விழுங்கி யருட்கதிர்
விரியு மிளஞ்சுடரே
மெய்ப்புலன் மேய்ந்து சமைந்ததொர் வீட்டை
விளக்கும் விளக்கொளியே
புண்ணிய நாறுமொர் பெண்கனி கனியும்
புனித நறுங்கனியே
புள்ளு ரெனவெம துள்ளத் தடநிறை
புத்தமு தக்கடலே
தண்ணொளி பொங்கிய கருணை நிதியே
தாலோ தாலேலோ
சங்கத் தமிழின் தலைமைப் புலவா
தாலோ தாலேலோ. 29

அகம் நெகிழுகின்ற தொண்டர்களது உள்ளத்தில் அஞ்ஞான இருள் நீங்கும்படி ஒளி விடுகின்ற சிறந்த மாணிக்கமே! உயர்ந்த வேதங்கள், மற்றைக் கலை நூல்களின் முடிவில் முடிந்திருக்கின்ற ஒழு கொளியையுடைய மரகதமே! மேலும் கீழுமிருக்கின்ற அண்ட பேரண்டங்கள் அனைத்தையும் வியாபித்து அருளொளி வீசுகின்ற இளங் கதிரவனே! மெய்ஞ்ஞானமென்னும் முகடு மேய்ந்து பொருந்திய வீட்டை விளக்கிக் காட்டு

கின்ற விளக்கொளியே! முப்பத்திரண்டு அறங்களையும் செய்த ஒப்பற்ற உமாதேவியாகிய பெண்கனி கனிந்த புனிதமான நல்ல கனியே! புள்ளூரைப் போல எமது உள்ளத் தடத்திலும் நிறைந் திருக்கின்ற புத்தமுதக் கடலே! தண்ணிய ஒளி மிகுந்த கருணை நிதியே! தாலோ தாலேலோ; சங்கத் தமிழின் தலைமைப் புலவனு கத் திகழ்ந்தவனே! தாலோ தாலேலோ.

தோலாத முத்தமிழ் நாவா மூவா மாவாமச்
சூர்வே ரறத்தொடு வேலா நூலா நூலோதும்
சீலாம லைக்கொடி பாலா கீலா மேலாகும்
தேவாதி பற்கொரு தேவா வோவா தேகூவும்
காலாயு தக்கொடி வீரு வேரு வேறேறும்
காபாலி பெற்றகு மாரா வீரா பேராளா
சேலார்வ யற்குரு கூரா தாலோ தாலேலோ
சேனுப திப்பெரு மாளே தாலோ தாலேலோ. 30

தோல்வியில்லாத முத்தமிழை ஓதுகின்ற நாவையுடைய வனே! அழியாததாகிய மாமரமாய் நின்ற அந்தச் சூரபன்மன், கிளைகளோடு அழிந்து போகும்படி ஏவிய வேற்படையை உடை யவனே! முதல் நூலாகிய வேதாகமத்தை ஓதியருளிய சீலனே! இமயமலை வல்லியின் பாலனே! எல்லாவற்றிற்கும் மூலமாயிருப் பவனே! மேலான தேவதேவனுகிய சிவபெருமானுக்குக் குரு நாதனே! குறையில்லாது கூவுகின்ற சேவற்கொடியையுடைய கீர்த்தியாளனே! யாரும் ஏருத இடபத்தில் ஏறுகின்ற காபாலி யாகிய சிவபெருமான் பெற்ற குமாரனே! வீரனே! பேராளனே! சேல்மீன்கள் நிறைந்த வயல்களையுடைய புள்ளூரனே! தாலோ தாலேலோ. சேனுபதிப் பெருமாளே! தாலோ தாலேலோ.

ஊனுயு யிர்க்குயி ராளுய் தாலோ தாலேலோ
ஓதாது ணர்த்திடு போதா தாலோ தாலேலோ
ஆனுவ ருட்கனு பானு தாலோ தாலேலோ
ஆயாத சொற்சொலு பாயா தாலோ தாலேலோ
நானுயெ னக்கரி தானுய் தாலோ தாலேலோ
நாதாதி கட்கனு பூதா தாலோ தாலேலோ
தேனுர்பொ ழிற்குரு கூரா தாலோ தாலேலோ
சேனுப திப்பெரு மாளே தாலோ தாலேலோ. 31

ஊனாகவும் உயிர்க்கு உயிராகவும் ஆனவனே! தாலோ தாலேலோ, சொல்லாற் சொல்லாமல் உண்மையை உணர்த்துகின்ற ஞானதேசிகனே! தாலோ தாலேலோ, குறையாத திருவருளை உயிர்கள் பெறத் துணையாக இருப்பவனே! தாலோ தாலேலோ, ஆராய முடியாத வேத மொழிகளைச் சொல்லுகின்ற வழிகாட்டியே! தாலோ தாலேலோ, நானாக இருந்தும், எனக்கு அரிதாக இருப்பவனே! தாலோ தாலேலோ, நாதம் முதலிய தத்துவங்களுக்குக் காரண பூதனாயிருப்பவனே! தாலோ தாலேலோ, தேன் நிறைந்த சோலைகள் சூழ்ந்த புள்ளூரனே! தாலோ தாலேலோ, சேனாபதிப் பெருமானே! தாலோ தாலேலோ.

(தொடரும்)

திருப்பரங்குன்றம் முருகப் பெருமானே

—ooOoo—

இராகம்: சுபபந்துவராளி

எடுப்பு.

திருப்புகழ் அமிர்தம் திருவாய் பொலிய
அருட்கை வேலால் அருள்வாய் முருகா! (திருப்புகழ்)

தொடுப்பு.

அறிவுக்கனியை உருவில் சிறுவனாய்
ஔவைக்கருளிய அறிவுக் கன்பனே! (திருப்புகழ்)

முடிப்பு.

"முருகா" என்றே உருகும் உள்ளம்
பெருகும் இன்பம் பெற்றிட என்றும்
கருணைக் கரத்தால் அருளை அருளும்
திருப்பரங்குன்ற முருகப் பெருமானே! (திருப்புகழ்)

"பதி"

HYMNS OF THE TAMIL SAIVITE SAINTS

BY

F. KINGSBURY, B. A. (Madras)

AND

G. E. PHILLIPS, B. A. (Lond.), M. A. (Oxon.)

[மலர் 16, இதழ் 12-ன் தொடர்ச்சி]

II

THIRUNAVUKKARASU SWAMI

(More commonly referred to as APPAR SWAMI)

64. மக்களேமணந்ததாரமவ்வயிற்றவரை யோம்புஞ்
சிக்குளேயழுந்தியீசன்றிறம்படேன்றவமதோரேன்
கொப்புளேபோலத்தோன்றி யதனுளேமறையக்கண்டு
மிக்கனே பரத்தை யோம்ப வென்செய்வான் றேன்றினேனே.

Our last fragment from Apparswami is in the minor key, in which so many of his refrains are pitched. It seems to prove, contrary to tradition, that Appar was once a married man.

64. Immersed in painful cherishing
Of child and wedded wife,
No room is there in me to feel
Thy power, Lord of my life.
O whereunto came I to birth?
To cherish this false world?
Or watch it, bubble-like, appear,
Then be to nothing hurled?

(To be continued)

உண்டேன்

திருப்புகழமிர்தம் ஆசிரியர்

திருமுருக கிருபானந்தவாரி அவர்கள்

[உலகம் ஆடம்பரத்தில் மயங்குகிறது. உடையின் உயர்வைக் கண்டு மதிக்கின்றது. உள்ளத்தின் உயர்வை உன்னுவதில்லை. தோலாடை உடுத்த சிவபிரானுக்குப் பாற்கடல் ஆலால விடத்தை அளித்தது. ஆனால் பட்டாடை அணிந்த பரந்தாமனுருக்கு, தன் மகள் இலக்குமிதேவியை ஈந்தது. ஔவைப்பிராட்டி எளிய ஆடையுடுத்திக் கொண்டு பாண்டிய மன்னனது திருமண விழாவிற்குச் சென்றிருந்தார்; அவமதிக்கப்பட்டார்; நெருக்குண்டார்; தள்ளுண்டார்; நீள் பசியால் சுருக்குண்டார்; சோறு கண்டிலார். இச் செந்தமிழ்ச் சித்திரத்தை, இக்கட்டுரை விளக்குகின்றது.]

ஔவையார்

ஒரு சொல்லைச் சாமர்த்தியமாகவும், நகைச்சுவைபடவும் சொல்வதில் ஔவையார் சமானமில்லாதவர். அவருடைய பாடல் அமிழ்தினும் இனிமையாகத் தித்திக்கும்.

ஔவையார் அக்காலத்தில் கால்நடையாகவே நடந்து பலப்பல அரசர்களையும், தனவந்தர்களையும் பார்த்து அவரவர்கட்கு அரிய அறிவுரைகளைக் கூறி நல்வழிப்படுத்தி வந்தார். அவருடைய புகழ் எங்கெங்கும் பரவியிருந்தது. அவரை மூவேந்தரும் புகழ்ந்தார்கள்; பாராட்டினார்கள்; மாவேந்தரும் மதித்தார்கள்.

ஔவையாருடைய பாடல்கள் அளவற்ற பெருமையுடையதாகத் திகழ்ந்தன; அவரால் பாடப்பெறுவதைத் தங்கள் பெரும் பேருக எண்ணினார்கள். அவரை அனைவரும் வரவேற்றுப்

புகழ்ந்து உபசரித்தார்கள். எங்கும் அவருக்குப் பாராட்டுதலும் சீராட்டுதலும் இருந்தன. அம்மையார் ஆங்காங்கு தாம் கண்ட காட்சிகளை அழகாகவும் சுவையாகவும் பாடுவார்.

பாண்டியன் மனம்

ஒரு சமயம் ஔவையார் மதுரையில் பாண்டிய மன்னனுடைய திருமணத்திற்குச் சென்றனர். திருமண விழாவில் அளவிறந்த கூட்டம். வருவாரும் போவாரும் அதிகம்.

ஔவையார் மிகவும் எளிமையாக இருப்பவர். ஆடம்பரத்தை அறவே வெறுத்தவர். எளிமையான உடை உடுத்திருந்த ஔவையாரை, அரண்மனைக் காவலாளர்கள் பிடித்து வெளியே தள்ளிவிட்டார்கள். அங்குள்ளவரும் அவரை இன்னுர் என்று அறிந்தார்கள் இல்லை. உடையால் அவருக்கு உள்ளே செல்ல வந்தது தடை.

ஆடம்பரம்

உலகம் உடையின் உயர்வைக் கண்டு மதிக்கின்றது. உள்ளத்தின் உயர்வை உன்னுவதில்லை.

சிவபெருமான் தோலாடை யுடுப்பவர்.

திருமால் பட்டாடை யுடுப்பவர்.

பாற்கடல் என்ன செய்தது தெரியுமா? அதுகூட ஆடம்பரத்தை விரும்புகின்றது. தோலாடையுடுக்கும் சிவனுருக்கு ஆலால விடத்தை அளித்தது.

பட்டாடையுடுக்கும் பரந்தாமனுக்குத் தனது மகள் இலக்குமிதேவியை ஈந்தது.

ஆதலால் சிறந்த ஆடையில்லாதவர்கள் ஒரு பெரிய சபைக்குச் சென்ருல், அவர்கள் எத்தனைதான் கற்றிருந்தாலும் அவர்களை அந்த அவையோர்கள் நன்கு மதிப்பதில்லை. இந்தக் கருத்தை நையாண்டிப் புலவர் நவில்கின்ருர்;

மேலாடை இன்றிச் சபை புகுந்தால் இந்த மேதினியோர்
நூலாயிரம் படித்தாலும் என்னுர்; நுவல் பாற்கடலோ
மாலா னவரணி பொன்னுடை கண்டு மகளைத் தந்தே
ஆலாலம் ஈந்தது தோலாடை சுற்றும் அரன் தனக்கே.

"ஆடையுடையான் அவைக் கஞ்சான்" என்ற பழமொழியும் இது குறித்து எழுந்தது.

ஒருவன் திருமண வீடு, கோயில், அரசாங்க சபை, புகை வண்டி முதலிய இடங்கள் எங்கு சென்றாலும் நல்ல பகட்டான ஆடையிருந்தால் முதலிடம் பெறுகின்றான். இன்றேல் ஒதுக்கிடம் பெறுகின்றான்.

இது குறித்து இராமலிங்க அடிகளார் இரு பாடல்கள் பாடியுள்ளார்.

அழுக்குத் துணியுடுத்திருந்தால் நேரில் பார்த்தும் பாராதவர்களைப் போல் உலகோர் இருப்பர்; ஒருவித உதவியும் புரியார். அந்தோ! பட்டு உடுத்திருந்தால் 'ஓ! வாருங்கள், ஏன் அங்கேயே நிற்கின்றீர்கள்? சும்மா உள்ளே வாருங்கள் வாருங்கள்' என்று கூறி உபசரிப்பார்கள்.

சரிகைக் கரையிட்ட உயர்ந்த ஆடையையுடுத்திருந்தால், பார்த்தவுடன், 'ஐயா! வணக்கம். தங்கள் பெயர் யாது? ஊர் எது? தங்களது வியாபாரம் என்ன? தங்கள் தாயார் யார்? தந்தையார் யார்? தங்கள் குலம் என்ன? சிறிது சொல்லலாமா? நான் அறிந்துகொள்ள திருவாய் மலரலாமா?' என்றெல்லாம் சரமாரியாக அடுக்கடுக்காகக் கேட்பார்கள். இத்தகைய ஈனர்களிடம் செல்லக்கூடாது.

நேரா அழுக்குத் துணியாகில் உன்றனை நேரில்கண்டும்
பாரா தவரென நிற்பார்; உடுத்தது பட்டெனிலோ
வாரா திருப்பதென் வாரும் என்பார்இந்த வஞ்சகர்பால்
சேராது நன்னெஞ்சமே ஒற்றியூ ரானைச்சேர் விரைந்தே.

காயார் சரிகைக் கலிங்கம் உண்டேல் இக்கலிங்கங் கண்டால்
நீயார்? நின்பேர்எது? நின்ஊர்எது? நின்நிலைஎது? நின்
தாயார், நின்தந்தைஎவர்? குலம்எது என்பார் சாற்றும் அவ்வல்
வாயாடெஞ் செலல் நெஞ்சே விடைதர வில்லையன்றே.

இந்த வண்ணம் உலகம் ஆடைக்கு அதிக மதிப்புத்தருகின்றது. ஆடை அணிகலன்கள் முதலிய ஆடம்பரம் இன்றிய ஔவையாரைப் பாண்டிய மன்னனது திருமணப் பந்தரின்

வாயிலிலே பிடித்துத்தள்ளியதில் வியப்பு ஒன்றுமில்லையே! ஔவையார் மக்களின் மிகுதியில் அதிகமான அலைப்புண்டு, உள்ளே செல்லமுடியாமல் வாளாகத் திரும்பினர்.

பாவம்! மதுரையை விட்டே புறப்பட்டு விட்டார் ஔவையார். திருமண விழாவில் கலந்து மகிழவேண்டும், நல்லுணவு உண்டு பாண்டியனிடம் பரிசுபெற வேண்டுமென்று சில புலவர்கள் வருகின்றார்கள்.

எதிரிலே வருகின்ற தமிழ் மூதாட்டியாகிய ஔவையாரைக் கண்டு, தமிழ்த்தாயே! பாண்டிய வேந்தருடைய திருமணம் வெகு சிறப்பாக நடக்கின்றதாமே? உயர்ந்த உணவுகள் படைக்கின்றார்களாமே? தாங்கள் இனிது உண்டீர்களா? என்று வினவினர்கள்.

அப்போது ஔவையார் அந்தப் புலவர்களைப் பார்த்து, 'ஐயன்மீர்! உண்டேன், உண்டேன், உண்டேன்' என்று மூன்று முறை நீளமாகக் கூறினர்.

'என்ன அம்மா! மிக்க நீளமாக உண்டேன், உண்டேன், உண்டேன் என்று மும்முறை மொழிந்தீரே; உணவு நிரம்பப் பலமோ? நீரும் நிரம்ப உண்டீரோ?' என்றார்கள் புலவர்கள்.

ஐயன்மீர்! தெளிந்த தமிழிலே வல்ல பாண்டிய மன்னருடைய மகத்தான திருமணத்திலே நான் உண்ட உயர்வை உரைக்க வேண்டுமா?

'நெருக்குண்டேன் தள்ளுண்டேன் பசியால்
சுருக்குண்டேன் ஆனல் சோறுமட்டும் உண்டிலேன்'

என்றார் அம்மையார்.

இப்பொருள்கள் அடங்கிய அருமைப் பாடல் இதோ உள்ளது.

வண்டமிழைத் தேர்ந்த வழுதி கலியாணத்
துண்ட பெருக்கம் உரைக்கக்கேள் — அண்டி
நெருக்குண்டேன் தள்ளுண்டேன் நீர்பசியினலே
சுருக்குண்டேன் சோறுண்டி லேன்.

அகத்திணைச் செய்யுட்கள்

பேராசிரியர்,

திரு. E. S. வரதராஜய்யர் அவர்கள் இயற்றியன

உடன்போக்கு

செவிலி பாசம் – பாலை

1 அன்றரிகள் உற்ற துணையாகக் கடல்கடந்து
நின்ற அரிசற்றும் நினைந்திலனே—என்றூழ்
தெறும்பாலை நுண்ணயி ரொன்றிட்டால் உள்ளூற்றும்
அறுமாறு செய்யு மது.

2 வெங்கானல் நீரைப் புனலென்று கொண்டு விலங்கினங்கள்
பொங்கார்வம் ஊரப் படர்ந்தன்மை கண்டு புழுங்கினவாய்
அங்காந் தழும்கடத் தெங்ஙனம் ஏகினள் ஆயிழைமார்
இங்காய்ந்து பஞ்சிகொண் டூட்டினும் கம்பித் திணைபவளே.

3 வாராளு மென்முலை வாமன் எழிற்றில்லை வானவன்தாள்
சேரார் படர்சுரம் எவ்வாறு சென்றனள் சேடியர்கள்
ஆராய்ந்த பஞ்சுகொண் டூட்டினும் சால அலசியடி
பேரா வெதும்புமென் கண்மணி பேரெழிற் பெட்டகமே.

4 எண்கொடு கோடரம் இன்துணை யாகவை தேகியவள்
கொண்கன் அணையமைத் தான்கடந் தேறக் குரைகடலைப்
பண்கனி சொல்லி படர்பாலை யின்னோர் பருக்கையிடத்
தெண்கடல் ஊற்றெடும் வற்றுமிச் செய்தி தெரிந்திலனே.

5 கானற் புனலைப் பருகும்நீ ரென்னக் கருதியந்த
மானங் காற்றிடும் பாலை வழியினில் மஞ்சமதில்
யானங் கணைத்தகை சற்றே நெகிழ்ப்பினும் அஞ்சியஞ்சித்
தானங் குயங்குறும் தையல்எவ் வாறு நடந்தனளே.

6 கள்ளிப் பரப்பிற் கனற்பொறி தோன்றிடக் கான்விலங்கு
துள்ளிப் பதைக்கின்ற பாலையில் தோன்றலைத் தூயமனத்
துள்ளிப் படர்ந்தனள் நன்மலர் அன்னுள் உறங்கணையில்
அள்ளிப் பரப்பவங் காருளர் என்ன அறிவின்மையே.

7 வேட்கை மிகுத்துப் பருகுநீ ரின்றி மெலிந்துடலம்
பூட்கை யுயர்த்திக் கயம்நின் றயலும் புறச்சுரத்தில்
வாட்கைக் குரிசி லுடன்சென்ற வண்ண மறிகிலனே
தாட்கம் மலர்ப்பஞ்சி யூட்டினும் நொந்தழும் தையலரே.

8 வெங்கான லைப்புனல் என்றே மயங்கி விலங்கினங்கள்
தங்கால் உலையப் படர்ந்தே மரிக்கும் தருவிறந்த
பொங்கா ரழற்கடம் புக்காள் அவள்தன் புடையமர்ந்திட்
டங்கார் பனிநீர் தெளித்தாற்று வார்என்றன் ஆயிழைக்கே.

9 கானல்வெண் டேரைப் புனலென்று கொண்டுகலை மறிகள்
வேனற் கழிந்து படர்வதும் மீள்வது மின்றிமரித்
தூனைக் கழிக்கும் உலைக்கற் கடத்தெங்ங னுற்றனளோ
தேனைப் பழிக்கும் மொழியா ளெனதுயிர்ச் சேயிழையே.

10 தாவும் சுடர்எரி பாலைதன் நாமம் தனைப்பகரும்
நாவும் சுடும்பசை யற்றவப் பாழின் தகவுரைக்கும்
பாவும் சுடும்அதிற் சென்றதெவ் வாறு பயன்மரம்சூழ்
வாவியின் மண்டபம் தண்மைபற் றுதென்னும் தன்மயளே.

11 வெய்யோர் வழிபடர் வோரைப் பொருளொன்று மின்றெனினும்
மெய்யோ ரிரண்டென வாளிற் றுணிப்ப விழுமவர்தம்
ஐயோ எனும்குரல் எங்கும் ஒலிக்கும் அருங்கடத்துப்
பொய்யோ வெனுமிடை சென்றுள் ஒருவன் புறம்படர்ந்தே.

12 கருந்தா தனைய கொலைஞர் துணிப்பக் கதறிநின்று
வருந்தா டவர்கட் கருந்தும் புனல்அவர் வாள்விழிகள்
தரும்தாரை யன்றிப் பிறிதில தாம்நடம் தன்னிலென்றன்
அருந்தா அமுதம் படர்ந்தாள் அனையான் அலமரவே.

13 கரமா யிரம்கொண்டு பல்கதிர் வீசிடும் கற்கடத்தில்
புரமாளச் செற்றவன் நேரார் புகுந்து புலம்பலுறும்
அரமா யிரங்கள் பொரும்பரல் தைக்க அரனிடது
கரமானை மானுமென் பேதைசென் றுளொரு கானைபின்னே.

14 காயும் கதிர்கள் ஒருகோடி கூடிக் கலந்தெரிப்பப்
பேயும் படர்தரும் பேய்த்தேரும் மக்களைப் பேதுறுத்தும்
வேயும் வெடித்துயர் கள்ளியும் வற்றிய வேங்கடத்துத்
தேயும் இடையென் தனிச்செல்வி யெங்ஙனம் சென்றனளே.

15 வானம் வறந்து புறம்வெம்பி யெங்கணும் வாம்பிணைகள்
கானலை நீரென் றலைந்துள மேங்கிக் கதறியழும்
கானிடை மாந்தர் விடுத்தகண் ணீரில் கடும்புலிதன்
நாநனைக் கும்சுரம் சென்றுளென் மான்தழற் சைகதத்தே.

16 நீரின் நடுவில் நிலாமணி முற்றத்து நீள்மலரார்
தாரின் வரிசை திகழ்தரப் பஞ்சணை தன்னிலடர்
காரிருட் கண்ணும் துயிலாள் பரல்பல கானகத்தே
ஈரிரும் வாளில் கிழிக்கும் சுரத்தெங்ஙன் ஏகினளே.

இராகம் : சரசாங்கி தாளம் : ஆதி

பல்லவி

அருள்புரிவாய் என்மேல் தயவாய்
முருகனே குமரனே கூர்வடி வேலனே (அருள்)

அனுபல்லவி

திருத்தாண்டவம் புரியும் தில்லை நடராஜனின்
மருகோனே மால்மரு கனே குமரேசனே (அருள்)

சரணம்

கருவினில் வந்துதித்து கண்டபயன் என்னவோ
தரணியில் வந்துதித்து கண்டபலன் சொல்லவோ
பிறவி எடுத்தும்பட்ட தொல்லையினைத் தாண்டி
மறவாமல் உன்புகழ் என்றுமே பாடிட (அருள்)

வி. கே. முத்தையா பிள்ளை பி. ஏ., பி. எல்.,
வண்ணார்பேட்டை, திருநெல்வேலி-3,

தாயுமானவரின் — பராபரக்கண்ணிகள்

Couplets in venerable adoration of the
Omnipotent and Omnipresent

sung by

St. THAYUMANAVAR

26

The real happiness of the devotees lies in receiving and paying homage to the sages and saints. Simply their dharsan, their presence and their activities will give much pleasure to them as that of their Lord. Thayumanavar feels such sensation when he thinks of the 'Jivan Mukthas' and this is treated splendidly in this song.

உண்டுடுத்துப் பூண்டிங்கு உலகத்தார் போல்திரியும்
தொண்டர் விளையாட்டேசுகங் காண் பராபரமே

(பொ—ரை) இவ்வுலகத்தார் போல உண்டும் உடுத்தும், பூண்டும் திரிகின்ற உனது தொண்டர்களின் செயலே எனக்கு இன்பம் தருவதாக இருக்கின்றது.

Oh....Lord Supreme! The activities of your devotees (Jivan Mukthas) who are also having the same daily routine such as eating, dressing and wearing as of the other Mortals, give me the real joy.

—————

(தொடரும்)

Translated by Sri. K. PALANISAMY, M.A., Lecturer in Tamil, Sri. K. G. S. Art's College, Arulnandi Nagar.

"கருணும்பிகையும், காய்வகையும்"

திரு. T. H. விவேகானந்தம் பிள்ளை அவர்கள்,
உதவி ஆணையர்,
இந்து அறநிலைய பாதுகாப்பு இலாகா
மதுரை - 1.

ராகம் – பந்துவராளி   தாளம் – ஆதி

பல்லவி

ஆயா உன் சித்த மிளகாயா. வினை கத்தரிக்
காயா கருணும்பிகை (ஆயா)

அனுபல்லவி

ஒயா உழைப் புடலங்காயா, மனை மாதுளங்
காயா இழி பேச்சுரைக்காயா சங்கொள்ளுமுனம் (ஆயா)

சரணம்

அடைந் தவரைக்காயா அத்திக்காயா வண்ணன்
அருங்கலைப் பாவைக்கா யவனுன என்கண்ணன்
குடைந்தும் பறந்துங் காணுக்கொடு வெள்ளரிக்காயன்
கொத்தவரைக்காயான் அன்பீர்க்கங்காய் வாழ்கருணை (ஆயா)

இக்கீர்த்தனை திருஅவிநாசியில் (திருப்புக்கொளியூரில்) கோயில் கொண்டு எழுந்தருளியுள்ள கருணும்பிகையின் திருவடிகளுக்குக் கவியரசு கு. நடேசக் கவுண்டர் அவர்கள் சாத்தியது. இத்திருக்கோயில் திருப்பூர்ப் புகைவண்டி நிலையத்திலிருந்து வடக்கே 8 மைல் தூரத்திலுள்ளது. கொங்கு நாட்டிலுள்ள ஒரு பாடல் பெற்ற தலம். ஐந்தாண்டுப் பருவத்து அந்தணச் சிறுவனை முதலை விழுங்கியது. சிவனது அருளால் சுந்தரர் இங்கு பதிகம்பாடி அச்சிறுவனை வருவித்தளித்த அற்புதச் செயல் நடந்த இடம்.

பலவகைக் காய்களின் பெயர் தொனிக்கும்படி அமைந்துள்ளது இக்கீர்த்தனை. இதன் இயல்பான பொருள் பின்வருமாறு :—

பல்லவி :

ஆயா உன் சித்தம் இளகாயா? (இளகமாட்டாயா) வினைகளைக் கத்தரிக்கமாட்டாயா? கருணாம்பிகையே.

அநுபல்லவி :

ஓயாத உழைப்பினையுடைய உடலம் (உடம்பு) காய்ந்து போக, அதனால் மனையின்மாது (மனைவியும்) மனம் கோபித்துப் பேசும் இழி(ந்த) பேச்சு(க்களாகிய) உரைக்கு யான் ஆயாசம் (வருத்தம்) கொள்ளு முன்னம் (ஆயா....)

சரணம் :

தன்னை அடைந்தவரைக் காயா (கோபிக்காத) அத்தியிலே வாழும் காயாம் பூவண்ணனும் (கடலில் துயிலும் திருமாலும்) அரிய கலைப்பாவைக்கு வேண்டியவன் ஆகிய (கலைப்பாவை = சரசுவதி; அவளுக்கு வேண்டியவன் பிரமன்) பிரமனும் பூமியைக் குடைந்தும், விண்ணிலே பறந்தும், காணக் கூடாமல் நின்றவனாகிய, கொடியதும் வெண்ணிற முடையதுமான சிங்கத்தின் தோலை உடம்பில் போர்த்தியவனும் (கொடு = கொடுமையான; வெள் அரிகாயன் = வெண்மையான சிங்கத்தோல் போர்த்த திருமேனியன்) கொத்து அவரை (அடியார்களை) காயாதவனும் (கோபியாதவனும்) ஆகிய அவிநாசியப்பனுடைய அன்பானது ஈர்க்க (பிடித்து இழுக்க) அங்கே அவனோடு கூடிவாழும் (அங்கு ஆய்வாழ்) கருணை ஆயா உன் சித்தம் இளகாயா என்பது.

கொடு வெள்ளரிக்காயான் என்பது, சிவபெருமான் சரப வடிவங்கொண்டு, நரசிங்கத்தை வதைத்து, உரித்துத் தோல் போர்த்துக்கொண்ட வரலாற்றினை உட்கொண்டது.

இதன் கண், மிளகாய், கத்தரிக்காய், புடலங்காய், மாதுளங்காய், பேய்ச் சுரைக்காய், அவரைக்காய், அத்திக்காய், பாவக்காய், வெள்ளரிக்காய், கொத்தவரங்காய், பீர்க்கங்காய் என்ற பதினொரு காய்களை அமைத்துப் பாடியது ஒரு வித்வ சமத்காரமாகும்.

கற்றளி தோறும் சொற்றமிழ் விளங்க....

செஞ்சொற் கொண்டல்,
வித்துவான், திரு. சொ. சிங்காரவேலன், M. A.,
மொழியியல்துறை, அண்ணாமலைப் பல்கலைக் கழகம்,

தேசநிறை வாகுமறம் தேக்குபுகழ்
வாக்கும்அருள் நந்தி யருளால்
பாசவினை மாசகலப் பைந்தமிழிந்
நாடிதனிற் பாங்கு பெருகி
வாசமணி கோயில்தொறும் வண்டமிழிற்
பாடல்பல வாய்த்திலகவே
நேசமிகக் கல்லில்அவை நீடிலக
வைத்ததிறம் நீடுநினைவாம். 1

செந்தினகர்[1] கூடல்[2]கழுக் குன்றொடு[3]நற்
றில்லை[4]புகழ் சேரும் கச்சி[5]
முந்துபுகழ் மயிலை[6]யண் ணாமலை[7]யு
நெல்லை[8]திரு ஆரூர்[9] மற்றும்
சிந்துமரு விக்குறும் பலவினொடு[10]
புன்கூரும்[11], சீர்மைக் காழி[12]
வந்துலவு நீரின்மறைக் காட்டினொடும்[13]
ஐயாறு[14] வாய்ப்பச் செய்து. 2

சிவப்பனசைத் திருத்தளியும்[15] சேருமிடைக்
கழி[16]யுமுயர் செம்மை கூடும்
தவத்துயரும் அவிநாசித்[17] தலத்துயர்சி
ரதிகையொடு[18] தாவில் வெண்ணெய்[19]

உவப்புறுநன் மருகலொடு[20] சுவாமிமலை[21]
வேளூரும்[22] ஒத்தூர்[23] தானும்
நிவப்புறு சிராப்பள்ளி[24] நீடுதிரு
முல்லைவனம்[25] நேரிற் செய்து. 3

வேளுறையும் பழனியொடு[26] தெளிச்சேரி[27]
கோலக்கா[28] விளங்கு நெய்தல்
தாளுறையும் சாய்க்காடும்[29] குடமுக்கும்[30]
கங்கைமலி வார ணாசி[31]
நாளுமெழில் திருவாலங் காட்டகத்தும்[32]
ஆப்பாடித்[33]தலத்தும் மற்றும்
கோளுமறுத் தோங்குசிவ சயிலத்தும்[34]
திரைலோக்கிக்[35] கோயி லுள்ளும். 4

திருமுறையி னருநெறியைத் தெரிந்துணரக்
கல்லில்அவை தெரித்துக் காட்டத்
தருமுறையின் அருள்மணியிந் நாளில்திரு
மாகறலின்[36] தமிழைக் கூறும்
திருநெறியின் கற்பணியைத் திகழ்வுறநின்
றியற்றியதால் திருவுங் கொண்டான்
வருமுறையின் அறமலியும் பேரரசன்
தனிஞானம் வழங்கு வோனே. 5

நால்வர் திருநட்சத்திரமும் சேக்கிழார் திருநட்சத்திரமும்

பாடிய சம்பந்தர் வைகாசி மூலம்; பயிலுமப்பர்
நீடிய சித்திரை மாதச் சதயம்; நிறைவன்றொண்டர்
ஆடியிற் சோதி; திருவாத வூரர்நல் ஆனிமகம்;
தேடிய சேக்கிழார் வைகாசிப் பூசம் சிறந்தனரே.

மெய்ஞ்ஞானமா? விஞ்ஞானமா?

சுவாமி பரமாத்மானந்தா அவர்கள்
ஸ்ரீ ராமகிருஷ்ண மடம், மைலாப்பூர் - சென்னை.

மனிதனிடத்தே மூவகை இயல்புகள்

மனிதனது அமைப்பை உற்று நோக்குங்கால், அவன் உடலும் உள்ளமும் ஆன்மாவும் இணைந்த ஒரு தொகுதியாகத் தென்படுகிறான். அவனது உடல் ஐயறிவுயிர்களின் உடலைப் போன்று, உண்டி, உறக்கம் பயம் இணைவிழைச்சு என்னும் நான்கிற்கும் வசப்படுதலின், அது அவனிடத்துள்ள விலங்கியலுக்கு அறிகுறியாகின்றது. அவனது உள்ளம் ''மக்கள் தாமே ஆறறிவுயிரே'' என்பதற்கிணங்க, நன்று தீதுகளைப் பகுத்தறியும் சிறப்பியல்பு வாய்ந்துள்ளதாதலின், மனித இயல்பிற்குச் சான்று பகர்கின்றது. அவனிடத்து உறையும் ஆன்மாவோ பரம்பொருளோடு தொடர்புற்று, அதற்குக் கருவியாய் அமைந்து மெய்ப்பொருளின் தன்மையை முழுதும் வெளிப்படுத்தும் திறனைப் பெற்றிருத்தலின் தெய்வ இயல்பு உள்ளடங்கியிருத்தற்கு ஒரு குறிப்பைத் தருகின்றது. அவனது உடல் இயற்கையறிவுக்கும் (Instinct), உள்ளம் கல்வி யறிவுக்கும், ஆன்மா மெய்யறிவுக்கும் அடங்கி இயங்குகின்றன. மூவகை இயல்புகளுள் மனித இயல் விலங்கியலுக்கும் தெய்வ இயலுக்கும் இடையே நின்று, விலங்கியலைச் சாரும்போது அதன் வண்ணம் பெற்றும், தெய்வ இயலின் வழிப்படும்போது அதன்விழுமிய வண்ணம் பெற்றும் ஒழுகுகின்றது. மனித இயலுள்ள மக்கள் விலங்கியலுக்கு ஆட்படும்போது மாக்களாகின்றனர். தெய்வ இயலுக்கு ஆளாகும்போது மெய்யடியாராய் மெய்ஞ்ஞானியராய்த் திகழ்கின்றனர். ''தக்க இன்ன தகாதன இன்னவென்று, ஒக்க உன்னலராயின் உயர்ந்துள, மக்களும் விலங்கே; மனுவின்

நெறி, புக்கவேல் விலங்கும் புத்தேளிரே” என்று கற்றோர்க்கு இதயங்களிக்கப் பாடும் கம்பநாட்டாரும் புகன்றனர். மனித இயலில் நிலை நின்று விலங்கியலை அடக்கி வென்று, பின்னர் அதனைத் தெய்வ இயலிடம் ஒப்புவித்துவிடின், தெய்வ இயல்பு மனிதனிடம் தலையெடுக்கும்; அப்போது மனித வாழ்க்கையின் மாண்பயன் கைகூடுவதாகும்.

மனிதனது உள்ளத்தே பெரும்போர்

நன்றையும் தீதையும் பகுத்தறியும் திறன் பெற்றுள்ள மனித இயல் அறநெறியைப் பற்றி நிற்கும்; சிற்றின்பச் சேற்றில் திளைக்க விழையும் விலங்கியல் ஒருபால் மனித இயல்பினைத் தன்பால் வலிந்து இழுத்து அடிப்படுத்த முயலும் போது, மனிதனது உள்ளத்தே அறத்திற்கும் மறத்திற்கும் பெரும்போர் நிகழும். “அறத்தொடு முரண்படாத விருப்பமாயுள்ளேன் நான்” என்று கண்ணபிரான் கீதையிற் கூறுவதனால், அதனைத் தேவ இயல் என்னலும் ஒருவாறு பொருந்தும். போரின்கண் வெற்றி ஒரு திறத்தார்க்கே எப்போதும் வந்தெய்துவதொன்று அன்று என்பது ஒருதலை; ஆதலானே மறம் என்னும் அசுர இயல்பிற்கும் அறம் என்னும் தேவ இயல்பிற்கும் இடையே ஓவாது போர் நிகழ, ஒரு சமயம் அசுர இயல்பிற்கும், மறுசமயம் தேவ இயல்பிற்கும் வெற்றி உண்டாகும். இதுவே தேவ – அசுரப் பெரும் போராகும்; இதற்கு மனித உள்ளமே நிலைக்களம் ஆகும். புராணங்களிற் பன்முறையும் கூறப்படும் தேவாசுரக் கடும் போர்க்கு உள்ளுறைப் பொருள் இதுவேயாகும். புறவுலகப் போரைப்போலன்றி, அகவுலகத்தே நடைபெறும் இப்போர் பகலிலும் இரவிலும், நனவிலும் கனவிலும், ஓய்வு ஒழிவிலாது நிகழ்வதாகும்; முன்னதினும் பின்னது மிகக் கொடியதாகும். தீய வேரூன்றிய பழவினை ஒருபுறம் உள்ளத்தை இழுக்க, அற உணர்ச்சி மற்றொருபால் பிடித்து உந்த இரண்டிற்கும் இடையே அது ஊசலாடிக்கொண்டிருத்தலே பெரும் பாலோரது வாழ்க்கையிற் காணும் காட்சியாகும். மீண்டும் மீண்டும் தோல்வி யுற்று மனந் தளர்ந்து கையறு நிலையினை எய்தித் துயருறுங் கால், மனித இயல்பு இறைவனையே புகலாகக் கொள்ளும்; எல்லாம் வல்ல இறையருளின் துணையாலே வெற்றி யெய்தி,

இறையின் திருவடியை இடையருது பற்றி நிற்கும்; அந்நிலையில் மற்றிண்டு வாரா நெறியிற் புக்கு, மெய்ப்பொருளைக்கண்டு, தனக்குவமை யில்லாதான் தாளிணைக்கே மீளா ஆளாய், அவனுக்கும் அவனடியார்க்கும் பணிசெய்து, தனக்கென ஒன்றின்றி ஆங்கே கிடக்கும். 'நாமார்க்கும் குடியல்லோம், நமனை அஞ்சோம், நரகத்தில் இடர்ப்படோம்,....எந்நாளும் இன்பமே துன்பமில்லை'' என்றுரைக்கும் வீறுபெறும்–அதுவே அரும் பெறற்பேருகும்.

ஞானப்போர்

அறத்தாற்றில் நிற்பவர் விலங்கியலை விட்டு மனித இயலைப் போற்றியவராவர்; மனித இயலினை விஞ்சி அதற்கப் பால் உள்ள தெய்வ இயலிற் பெயராது உறைவோனே வாழ்க்கையில் உயர்வற உயர்ந்த விழுமிய பேற்றை அடைந்தவனுவான். அறத்தாற்றைப் பற்றுபவன் தான் இயற்றிய அறங்களின் பயனை மறுமை யுலகில் துய்த்தபின் மீண்டும் இவ்வுலகிலே பிறக்கவேண்டியவனுவான்; அவன் துய்க்கும் இன்பம் ஐம்புல இன்பமே யன்றி அதற்கு மேலானதன்று; அத்தகையான் பிறப்பிறப்புச் சுழலினின்றும் விடுபட்டவனுகான். வேண்டுதல் வேண்டாமையிலான் அடிசேர்ந்தார் துயரறு சுடரடியை அடைதலின் யாண்டும் இடும்பையற்றவராவர். திருவடியைச் சார்ந்து உள்ளந்தேறி வீடுபெற விழைவாரை அச்செந்நெறியினின்றும் விலக்கும் விறலுடையது உலகப்பற்றே; அப்புறப் பற்றுக்கும் வேராய் இருப்பது 'யான்' என்னும் அகப்பற்றே. இதனை 'ஆணவம்' 'அகந்தை' என்பர் நூலோர். உலகப் பற்றை ஒழித்தற்கு இறைவன் மீதுள்ள பற்றை வளர்க்கவேண்டும். 'பற்றுக பற்றற்ருன் பற்றினை; அப்பற்றைப் பற்றுக பற்று விடற்கு'' என்பர் நாயனுர். பற்றற்ற கண்ணும், "யான் பற்றற்றவன்'' என்ற ஆணவ முனைப்பு எழுதல் கூடும்; ஆதலின் ஆணவத்தை வேர்முதன் மாய்த்தல் மெய்யுணர்வெய்துதற்கு இன்றியமையாதது. "அகந்தைக் கிழங்கை அகழ்ந்தெடு''த்த பின்னரே உளக்கோயிலில் ஞானவிளக்கேற்றல் இயல்வதாகும். ஆணவத்தோடு ஞானசாதகன் புரியும் போரே மிகக் கோரமானது–இதுவே ஞானப்போர். மனத்தை நச்சுப்

பொய்கையாக்கி, அதன் நடுவே ஆயிரந் தலைகளையும் உயர்த்தி ஆணவக் கருநாகம் உல்லாசமாக ஆடிக்கொண்டிருக்குங்கால், நல்லோரையும் ஞானத்தையும் அணுகவொட்டாது வெருட்டி விடும்.

ஆணவத்தை அடிப்படுத்தும் ஆறு

இராவணனது கதையும் சூரனது கதையும் ஆணவ அரக்கனை வென்று வாகை சூடும் வகையை உள்ளுறையாக உணர்த்துகின்றன. இராவணனது வரலாற்றை முதலில் நோக்குவோம். அரக்கரது குலத்திலே கும்பகருணனும் இராவணனும் விபீஷணனும் உதித்தனர்–இது ஆணவத்தினின்றும் தாமச அஹங்காரமும், இராஜச அஹங்காரமும், சாத்துவிக அகங்காரமும் தோன்றியதைக் குறிக்கின்றது. புலைவாளரக்கனாகிய இராவணன் மூவுலகையும் வென்று, யாவரும் வெருவ ஆட்சி செலுத்தி வந்தான் – இராஜஸ அஹங்காரமே அனைவரையும் தனது கொடுமையால் அடிப்படுத்தி வைத்திருப்பதை இது காட்டுகின்றது. இறைவனான இராமனுடைய உரிமையான சீதையை வஞ்சனையாற் கவர்ந்து வந்து அசோக வனத்திலே சிறை வைத்துத் தனக்கு உரிமையாக்க முயன்றான் – இறைவனோடும் தொடர்புள்ள ஆன்மாவினை இராஜஸ அஹங்காரம் வஞ்சனையால் அபகரித்து உடல் என்னும் சிறையில் இட்டுத் தனக்கு அடிமையாக்க முயல்வது போன்றதாகும் இது. இராமரன்றி வேறு புகலில்லாத சீதை துயருற்று, சதா அவரையே நினைந்து, இராவணனுக்கு இசைய மறுத்து, இராமர் தன்னை மீட்க வருவார் என்று நம்பி வாழ்ந்தாள் – இறைவனையே கதியாகக்கொண்ட ஆன்மா பிரிவு பொறுக்காது இடருழந்து; இராஜஸ அஹங்காரத்திற்கு ஆட்பட மறுத்து, இறைவன் தன்னை மீட்பான் என்று எதிர்பார்த்து வாழ்வதை இது ஒக்கும். இராமர் போருக்குப் புறப்பட்டு வர, விபீஷணன் இராவணனை விட்டு இராமரிடம் சரண் புகுந்தான் – இறைவன் ஆன்மாவை மீட்கப் போர் தொடுக்க எண்ணிவர சாத்துவிக அகங்காரம் இராஜச அஹங்காரத்தைத் துறந்து, இறைவனிடம் அடைக்கலம் புகுந்து, அவனுக்குத் துணையாயிற்று என்பதை இது குறிக்கின்றது. விபீஷணனைத் துணைக்கொண்டு இராமர் போர்

தொடங்கி, கும்பகருணனை முதலிற் கொன்று, பின்னர் இராவணனையும் மாய்த்தார்-சாத்துவிக அகங்காரத்தின் துணையொடு இறைவன் போர்புரிந்து, தாமச அஹங்காரத்தையும் இராஜச அஹங்காரத்தையும் இறைவன் மாய்ப்பதை இது அறிவுறுத்தும். இராமர் சீதையை மீட்டிக்கொண்டு, நாட்டிற்கு விபீஷணனை அரசனாக்கினார்-இறைவன் ஆன்மாவைத் தன்னுடன் கொணர்ந்த பின், நில உலக ஆட்சியை சாத்விக அகங்காரத்திடம் ஒப்புவிப்பதாகும் இது. ஆக, தாமச அஹங்காரத்தையும் இராஜச அகங்காரத்தையும் வென்று, சாத்துவிக அகங்காரத்தை இறைவனிடம் ஒப்புவித்தால் இறைவனது அருளால் ஆன்மா அவனை மீண்டும் சார்ந்து இன்புற்று வாழும், உடல் வாழ்வு சாத்விக அகங்காரத்தின் நல்லாட்சிக்கு விடப்படும் – ஞானப் போர் தொடுக்கும் வகை இதுவாம்.

முருகப் பெருமான் தேவயானையையும் வள்ளியையும் மணந்து வேலைக் கைக்கொண்டு, சூரனோடு போராடினார். வேல் சூரனது தலையொன்றைத் துணிக்க அவன் பன்முறையும் பலப் பல தலைகளைத் தாங்கிப் பெருமானோடு எதிர்த்துப் போரிட்டு, இறுதியில் வேறுவகையின்றி அடிவணங்கி, அவர்க்கு வாகனமானான். முருகன் இறைவன்; தேவயானை கிரியா சக்தி; வள்ளி இச்சா சக்தி; வேல் ஞான சக்தி; சூரன் ஆணவ அசுரன். இச்சா சக்தி கிரியா சக்தி இரண்டையும் துணைக்கொண்டு ஞான சக்தியால் ஆணவம் தலை தூக்கும்போதெல்லாம் அதனை அழித்து வரின், ஆணவம் இறைவனுக்கு அடிமையாகிப் பணிசெய்யும் என்பது இக்கதையின் உட்கருத்து.

விஞ்ஞானத் தேரில் உலகாயதத்தின் பவனி

இந்நாளைய உலக வாழ்விலே, மனிதனின் மூவகை இயல்புகளில் மிகத் தாழ்ந்த விலங்கியல் மனித இயல்பை அடக்கியாளவும், தெய்வ இயலை நிந்தித்து அதனோடு போர் புரியவும் தலைப்படுவதைத் தெள்ளெனக் காண்பர். உலகாயதம் மேற்றிசை மக்களிடையே நன்கு வேரூன்றி வளம்பெற வளர்ந்து, அரசியல் பொருளாதார இயல் சமூக இயல் முதலான பல துறைகளிலும் பரவித் தாண்டவமாடுகின்றது; சிறப்பாக ஞானத்தை

வேர்கல்லவும் உலகியற் சார்பைப் பலவாருக வலுப்படுத்தி அற நெறியைப் புறக்கணிக்கவும், உலக முழுதையும் தன் குடைக் கீழ் வைத்து அரசாளவும் கங்கணங் கட்டிக்கொண்டு வருகிறது. மேலையுலகிலே அறைகூவித் திரியும் உலகாயதம் விஞ்ஞான முன்னேற்றத்தினின்றும் பிறந்தது; தொடக்கத்திலே உலகியற் சார்பைப் பின்பற்றித் தமக்கு உகந்த வாழ்வில் ஈடுபடினும், குறிக்கோளின் ஒளியின்றி மண்ணக வாழ்வு மாசடைந்து இடருழக்கும் என்பதை முற்றும் மறந்தனரல்லர் உலகாயதர். நாளடைவில் அம் மனநிலை மாற்றமடையவே, மண்ணுசை விஞ்சியவராய், வலிமையற்ற ஒரு சங்கத்தை அமைத்துத் தம் சுயநல நோக்கங்களை வெற்றியொடு நிறைவேற்றவும், வல்லரசுகளாகத் திகழ்ந்து வலியற்ற கதியற்ற மக்களை அடக்கியாளவும், உலகாயதத்தின் பெருமையைப் பிதற்றவும், ஞான வாழ்வையும் அறவொழுக்கத்தையும் பழிக்கவும் மேலை நாட்டினர் விரைந்தனர். சுருங்கக் கூறின், விஞ்ஞான முன் னேற்றம் என்னும் தேரினை ஊர்ந்து உலகாயதம் வெற்றி முழக் கத்தோடும் வீர விருதுகளோடும் நானிலமெங்கும் பவனி வர லாயிற்று.

மேலை நாட்டாரது வாழ்வின் முன்னேற்றத்தில் இரு பகுதிகள் புலனுகின்றன. ஒன்று, உலகமெங்கும் அரசியல் அதி காரத்தையும் பொருளாதார இயல் அதிகாரத்தையும் செலுத்தி யும் பரப்பியும், யந்திரத் தொழில் முறையை வாழ்க்கையில் முழுதும் பயன்படுத்தியும், சிற்றின்ப வசதிகளை மென்மேலும் குவித்து, உலகியல் வாழ்விற் செழிப்படைதல் என்பது; மற் றென்ருவது, பௌதிக விஞ்ஞான வளர்ச்சிக்குத் துணையாகும் உலகியல் அறிவைப் பெருக்குதலே. அறிவுச் செல்வம் மனித னுற் பெறற்குரியதேயாயினும், கருத்து ஒன்றே வாழ்வைத் திருத்தியமைக்கப் போதியதாகாது; நன்னெறியைப் பற்றுதற் குரிய உணர்ச்சியும் ஆர்வமும் அதனை இயக்குதல் வேண்டும். வாய்மை, இன்னு செய்யாமை, கற்பு, தன்னல மறுப்பு முதலான அறப் பண்புகள் என்னும் கொடிகள் படர, இறைவன் மீதுள்ள மெய்யன்பு என்னும் மரம் இன்றியமையாததாகும். "அன்பின் வழியது உயிர்நிலை" "அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு" என்பன பொய்யாமொழியாகும். அறிவு ஆணவத்தைக்

கொழுத்து வளரச் செய்ய. ஒழுக்க விழுப்பத்திற்கு வித்தாகும் அன்பு ஆணவத்தை வேரறுத்து, மெய்ஞ்ஞானத்தை மலரச் செய்யும் திறத்ததாகும். விஞ்ஞான அறிவு மேலை நாடுகட்குச் சமய உணர்ச்சியை நல்கவில்லை; உலகியற் சார்பைச் செறியச் செய்தது. அந்த அறிவுக் கண்கொண்டு உலகத்தை நோக்குங் கால், உடைமைகளைப் பெருக்கும் அவாவையும், மெலிந்தவரை நலிந்து தன்னலத்திற்குப் பயன்படுத்தும் இழிதகவையும் அது ஊட்டுகின்றது; எளியார்க்குப் பணி செய்யும் பான்மையை ஊக்குவதில்லை. எனவே மேற்றிசை மக்களின் மனம் மாற்ற மடைந்து, மெய்ஞ்ஞானத்திற்குப் பதிலாக விஞ்ஞானத்தையும், அறஇயலுக்குப் பதிலாக மன இயலையும் வாழ்விலே நிலை நாட்டுவதாயிற்று.

விஞ்ஞான-மெய்ஞ்ஞான முரண்

உண்மையைக் காண விஞ்ஞான நூலார் பயன்படுத்தும் ஆராய்ச்சி முறை ஒருவாறு பழுதற்றதென்பதை மறுக்க இயலாது; ஆயினும் தூல இயற்கையிலுள்ள பௌதிகச் சக்திகளின் இயல்பையும் இயக்கத்தையும் ஆராய்ந்து, அச்சக்திகளைப் பம்பரம்போல் ஆட்டிவைத்துப் பயனடையும் நுண்ணறிவுத் திறனைப் பெற்றுள்ளான் விஞ்ஞானி; ஆனால் அத்திறன் உலகத்தின் ஆக்கத்திற்கும் அழிவிற்கும் பயன்படும் பொதுமையதாதலின் அதனால் நன்றே விளைதல் ஒருதலை என்று உரைத்தல் இயலாது. விஞ்ஞான அறிவின் ஆக்க நலன், மேற்றிசையாரின் ஞான வாழ்விற்கு அது விளைத்த கேட்டிற்கு ஈடு செய்ய மாட்டாத தாயிற்று. மெய்ஞ்ஞானத்தை ஊட்டும் சமயம் உயர்வற உயர்ந்த மெய்ப்பொருளாகிய இறைவன் உளன் என்ற அடிப் படையிலே தொடங்கி, மனிதனுக்குரிய கடமைகளை இறைவனோடு அவனுக்குள்ள அழிவற்ற தொடர்பைக் கொண்டு விதிக்கிறது; ஆதலின் இயற்கைக்கு அதீதமான நிலையினின்றும் அனைத்தையும் நோக்குகிறது. ஆனால் விஞ்ஞானமோ ஐம்புலக் காட்சிக்கு இலக்காகும் தூல இயற்கையை அடிப்படையாகக் கொள்ளுகிறது; மனிதனது வாழ்வையும், அதன் பயனையும், அதனோடு மனிதனுக்கு உள்ள தொடர்பையும் தூலக்கண் கொண்டு நோக்கி வருகிறது. ஆதலின் இவ்விரண்டிற்கும்

உள்ள வேறுபாடு ஞாலத்தின் மாணப் பெரிதேயாகும்; ஒன்றோ டொன்று முரண்படுவதும் வெள்ளிடை விலங்கலேயாம். மேலும் மேற்றிசையிலே விஞ்ஞான வளர்ச்சிக் காலம் சமயத்தின் தளர்ச்சிக் காலத்தோடு ஒன்றுபட்டதும் ஊழின் விளைவாயிற்று. இக்காரணங்களால் சமயக் குறிக்கோள் மக்களுக்கு உண்மை யற்றதாகவும், வாழ்வும் மனிதனது விழுமிய நாட்டமும் மன வாக்குகட்கு எட்டாத மெய்ப்பொருளோடு தொடர்பற்றனவாக வும் தோன்றலாயின. இயற்கையின் இரகசியங்களை வேட்டை யாடி வருதலையே தொழிலாகக் கொண்ட விஞ்ஞானம் அவ் வறிவை மனிதனிடத்துள்ள விலங்கியற்கு இரையளிக்கவே பயன்படுத்தி வந்தது. மனிதனிடத்துள்ள தெய்வ இயலுக்குப் பணி செய்யும் வாய்ப்பைப் பெற அதற்கு ஞானச் சார்பு இல்லா தொழிந்தது. ஆக, விஞ்ஞானம் சிற்றின்ப வேட்கையையும், பிறருடைய நாடுகளை வலிந்து பற்றும் பசியையும் கிளரச் செய்து, ஞான முன்னேற்றத்திற்கு எதிரியாயிற்று, உலகாய தத்திற்கு நட்பாயிற்று.

அறஇயலொடு முரணும் மனஇயல்

விஞ்ஞான நூலாரும் மனஇயல் நூலாரும் தமக்குரிய நிலை யினின்று வாழ்க்கையை நோக்குகின்றனர்; இதுவும் வேண்டற் பாலதேயாகும். அறஇயல் உயர்வற உயர்ந்த குறிக்கோளை ஆதாரமாகக் கொண்டிருத்தலின், மக்கள் தம் வாழ்க்கையில் அதனைப் பயன்படுத்த முயலும்போது, மக்களது மன இயலின் வேறுபாட்டுக்கும் பக்குவத்திற்கும் தக்கவாறு அறப் பண்பை உணரும் வகையும், வெளிப்படுத்தும் வகையும் வேறுபடுதல் தடுக்கவொண்ணுததாகும். ஒருவற்கு ஒரு நிலையில் அற மெனப்படுவது வேறு நிலையிலுள்ள பிறர்க்கு அறமாவதில்லை. அவற்கே இன்னெரு நிலையில் பொருந்தாததாகும்; ஆதலானே தனிமனிதனது மன இயல்பைப் பற்றிய அறிவும் உட்காட்சியும் செயல் துறையிற் பயனை நல்கும் பான்மையனவாகும். எனினும் இப்பயன் மனஇயல் மலர்ச்சியின் நோக்கத்தினையே பெரிதும் பொறுத்தது. வாழ்க்கையினை ஞான மயமாக்கும் குறியுடையார் மனஇயல் நூல் அறிவினைக் கையாளும் முறை, வாழ்க்கைப் போரில் வெற்றி தர உதவும் திறனைப் பெருக்குமாறு அந்த

அறிவினைப் பயன்படுத்தும் முறைக்கு மாறுனதாகும்; மேற்றிசை மக்கள் ஆடவர்க்கும் மகளிர்க்கும் இயற்கையோடியைந்த வாழ்விற்கே பயிற்சியளிப்பதன்றி இயற்கைக்கு அதீதமான மெய்யுணர்வை நாடுதலைக் கனவிலும் கருதார். மாந்தரின் தனி வாழ்க்கையையும் சமூக வாழ்க்கையையும் ஞானக் குறிக்கோளின் ஆட்சிக்கு உட்படுத்த முயலும் போதே ஒரு நாடு அறத்தாற்றின் விழுமிய பண்பையும் பயனையும் நன்கு காண வல்லதாகும். இய்ற்கையோடியைந்த வாழ்வு இயற்கையறிவு பெற்ற விலங்கியல் வாழ்விற்கே உய்ப்பதாகும்.

மனஇயல் நூலாரின் முடிபுகள் இன்னெரு வகையிலும் அறத்தாற்றிற்கும் ஞானப் பேற்றுக்கும் ஏதம் விளைக்கின்றன. அற வாழ்வின் அருமையும், அடக்கத்தின் மாண்பும் இயற்கையோடியைந்த வாழ்வைப் பூணும் மனஇயல் நூலாரை அச்சுறுத்தும் ஏதுக்களாகும். என்னையோவெனின் இயற்கையாக உள்ளத்தில் எழும் ஆசைகளை வலிந்து அடக்கப் பழகுபவன் நரம்பு நோய்கட்கும் மன நோய்கட்கும் ஆளாவான் என்பது 'மனப் பகுப்பியல்' நூலார் கண்ட ஒரு முடிபு. இது ஒரு சிறிதளவே உண்மையாம். முரட்டுத்தனமாக இச்சைகளாகிய சக்திகளை அடக்க முயலுவார் அதனுல் விளையும் எதிர்வினைக்கு ஆளாவது எதிர்பார்க்கக்கூடியதே; ஆனுல் தன்னடக்கத்தால் மனவளர்ச்சி தடைப்படுவதில்லை; கீழான துறையில் தடைப்படும் வளர்ச்சி உயர்ந்த துறையில் வளர்ச்சிக்குக் காரணமாகும். அறத்தையும் ஞானப் பேற்றையும் குறியாகக் கொண்டொழுகுவார்க்கு இச்சைகளை அடக்குவதால் இழுக்கு உண்டாவதில்லை. "குறிக்கோளிலாது கெட்டேன்" என்று ஒரு பெரியார் தமது இளம் பருவ வாழ்க்கையைப் பற்றி நொந்துரைத்தார். இச்சா சக்தியைத் தண்ணிய துறைகளிற் செலுத்திப் பாழாக்குவதற்குப் பதிலாக உயர்வுற்ற துறைகளிற் செலுத்தத் தொடங்கும் போது அது 'வலிந்து சக்தியை அடக்குதல்' என்னும் முறையாகாது; 'சக்தியை உயர்துறைப் படுத்தல்' என்னும் மாணும் நெறியைச் சார்ந்ததாகிறது; இதனுல் நரம்பும் மனமும் வலிமை பெறுகின்றன. மனித இயல் தெய்வ இயலாக மாறத் தலைப்படுகிறது. "அடக்கம் அமரருள் உய்க்கும்; அடங்காமை ஆரிருள் உய்த்து விடும்" என்பது தெய்வப் புலமைத் திருவள்ளுவனரது மறை

மொழி. "அறிவறிந்து ஆற்றின் அடங்கப் பெறின்" அது சீர்மையைப் பயக்கும். மன நோய்க்கும் நரம்பு நோய்க்கும் அருமருந்தாவது அடக்கமே. விலங்கியலை வாட்டுதல் கொடுமை யாகாது, "வேண்டிய வேண்டியாங்கு எய்தும்" தவ முயற்சி யாகும்.

விலங்கியலின் படையெடுப்பு

மேற்றிசை விஞ்ஞான நாகரிகம் வியத்தக்க நாகரிக மாயினும் நயத்தக்க நாகரிகமாகாதது; அது உலகாயதத்திற்கு வாகனமாகி ஞானஉலகத்துள்ளும் புகுந்து படையெடுக்க விரைகின்றது. அதன் விலங்கியல் நோக்கு மெய்ஞ்ஞான நோக்குக்கு மறுதலையாகின்றது. மனிதன் தெய்வஇயலினன் என்று ஞானநூல்கள் கூற, விஞ்ஞான நூலோ மனிதனை விலங்கியலினன் என்றும், விலங்கினத்தினின்றும் உதித்தவன் என்றும் பறையறைகிறது. விலங்கியலை வென்று ஒழித்தபின் னரே, தனது உண்மையியலான தெய்வஇயலை முற்றும் வெளிப்படுத்தும் தகுதியை அவன் பெறுவான் என்பதே மெய்ஞ் ஞானியர் கண்ட அனுபவ உண்மையாம். இதனை இந்தியர் உணர்ந்திருப்பதாலும், பழம்பெரு நாடான பாரதநாடு பல்லா யிரக்கணக்கான அதன் வாழ்விலே பலவகை அனுபவங்களையும் பெற்று, ஞானக்குறிக்கோளை எய்தி அமரநிலையுற்றிருப்ப தனுலும், நாவவிட்டு உழிதரும் விலங்கியல் நோக்கினைப் பெற் றுள்ள தற்கால விஞ்ஞான நாகரிகம் மன்னுயிரின் நலத்திற்கு ஊறுவிளைப்பதாகும் என முடிவுகட்டுகிறேம். சிற்றின்ப நுகர்ச் சிக்கும், அதற்குத் துணைசெய்யும் பொருள்நசைக்கும் ஆட்படு வோர் ஒருநாளும் இறைவனுக்குப் பணிசெய்து வாழமாட்டாதவ ராவர். நமது நாட்டிற் பரவிவரும் மேற்றிசை நாகரிகம் நமது ஞானப்பண்பாட்டுக்கும் நாகரிகத்திற்கும் தீங்கிழைப்பதாகும். பாரதநாட்டின் ஒரேநிதியான ஞானநிதியை இந்நாடு இழக்கு மாயின், உலகமே உய்வடையும் நெறியின்றி இருளடைவ தாகும். மனிதனது தனிவாழ்விற்கும் நாட்டுவாழ்விற்கும் உயிர் நிலையாக ஞானக்குறிக்கோளை ஆக்கிய நாடு இம்மலர்தலை யுலகிலே நமது நாடு ஒன்றேயாகும். இது உலகாயதத்திற்கு அடிபணிந்து வாழ்வதினும் மாள்வதே சிறந்தது; ஆனல்

நாட்டிற்கு அத்தகைய ஊழ் வாய்ந்திருப்பதாகச் சொல்ல வழியில்லை. உலகியலுக்கு வசப்பட்டு வாழும் உலக மக்கட்கு நல்லறிவுச் சுடர் கொளுத்துவதற்கெனவே பிறந்த நாடு இது. "இரும்பிறவித் தளை நீங்கி இன்புறுவார் தாம்வாழ விரும்பிவரும் ஞானமலிந்தது" என்பது சுவாமிவிவேகானந்தரது ஞானநோக்கிற்குத் தெற்றென விளங்கிய உண்மை.

நமக்குரிய கடமை

ஆதலால் உலகாயத அரக்கனை எதிர்த்துப் போர்புரிவது நமது பெருங் கடமையாம். விலங்கியல் உலகிலே கம்பீரமாக உலாவந்து, ஆனந்தத் தாண்டவமாடும் நடராஜப் பெருமானுக்கு எதிரே களிவெறித்தாண்டவம் ஆடுவதைப் பார்த்து வாளா இருத்தல் முறையோ? அன்று அன்று. இந்தியா தனது ஞான நாட்டின் பெருமையும் சக்தியும் பிறங்க நிமிர்ந்து நின்று அரக்கனோடு பொரவேண்டும்; ஏனெனில் உலகம் ஞானகாணியைப் பெறுமளவும், இந்தியாவிலே சாந்தி நிலவாது. எனவே, அதற்கு முதற்படியாக நாம் ஞானக்குன்றேறி நிற்க வேண்டும். சக்தியையும் ஆனந்தத்தையும் நிறைவையும் அளிப்பதாக உறுதிகூறாத எந்தத் தத்துவஇயலையும் இந்நாளைய உலகம் ஏற்க விரும்பாது. அகத்தும் புறத்தும் நம்மிடம் குடிகொண்டுறையும் வறுமை நமது குறிக்கோளைப் பார்த்து நகைப்பது போன்று காணப்படுகின்றது. ஆதலின் தீவிரமாக ஞானத்துறையில் ஈடுபட்டு, அதனைவாழ்வால் நிலைநாட்டுவோம்; நமது நாட்டினை ஞானஅடிப்படையின்மீது உயிர்ப்பித்து எழுப்புவோம்; அதற்கு ஞானத்தாற் கிளரும் அளவற்ற சக்தியை ஊட்டி, பொருளாதார இயல் சமூகஇயல் அரசியல் பண்பாடு சமயம் முதலிய பலதுறைகளிலும் அதனை நிறைவுறச் செய்வோம். அப்போது நமது ஞானவாழ்வே விலங்கியலைப் பெருமைப்படுத்தும் தற்கால நாகரிகத்தை இடித்துரைக்கும் சொற்பொழிவாகும். இந்தியாவின் பண்டைய ஞானப்பெருமையைமட்டும் பேசியென்? ஞானக் குறிக்கோளின் இயம்பரிய மாண்பை வாழ்க்கையிலே மெய்ப்பித்துக்காட்டுவதையே உலகம் ஒப்புக்கொள்ளும்; உலகம் இன்று அவாவோடு எதிர்பார்த்து நிற்பது இந்தச் சான்றையே. இந்தியாவே ஏனையநாடுகளினும்

பார்க்க, மிக்க திறமையோடு அந்த அவாவினை நிறைவேற்ற வல்லதாகும். விலங்கியல் என்னும் தொற்றுநோய் இந்நாட்டிலும் விரைந்து பரவுகின்றது; அதற்கு ஆளாகாதவண்ணம் நாட்டைப்பாதுகாத்து, ஏனைய நாடுகளிலும் அந்நோயினின்றும் மக்களை விடுவித்தல் நமது பண்பிற்கியைந்த கடமையாகும். விலங்கியலுக்கும் தெய்வ இயலுக்கும் இடையே எங்கணும் நிகழும் இப்போரில் தெய்வஇயல் வெற்றிவாகைசூடத் துணை புரிவோமாக! மன்னுயிரின் வருங்கால நன்மை இதனையே சார்ந்துள்ளதாகும்.

சமாதானப் பொங்கல்!

தூங்கிடும் மக்களை எழுப்பிடும் பொங்கல் — உலகில்
தூயவர் எண்ணி மகிழ்ந்திடும் பொங்கல்
ஏங்கிடும் உள்ளம் இன்புறும் பொங்கல் — வாழ்வில்
ஏற்றம் மிகவே தந்திடும் பொங்கல்

உழைத்தவர் இன்பம் பெற்றிடும் பொங்கல் — நெஞ்சில்
உறுதியும் தெம்பும் ஏற்றிடும் பொங்கல்
சளைத்தவர் இல்லையென சாற்றிடும் பொங்கல் — மனதில்
சஞ்சலம் சலிப்பை அகற்றிடும் பொங்கல்

நல்லவர் வாழ்ந்திட வாழ்த்திடும் பொங்கல் — நாட்டில்
நன்மைகள் நிகழ்ந்திட அருளிடும் பொங்கல்
சள்ளைகள் அகற்றிட சமரசம் நிலவிட — நல்ல
சமயத்தில் வந்திட்ட சமாதானப் பொங்கல்!

ஏ. பி. எஸ். மணி,
29, உஸ்மான் ரோடு,
சென்னை-17.

அப்பருக்கு அப்பர் அளித்த கயிலைக் காட்சி

வித்துவான். திரு. வை. சுந்தரேச வாண்டையார் அவர்கள்,
திருவையாறு.

(ஸ்ரீ கயிலாயம் போற்றித் திருத்தாண்டகம்)

திருச்சிற்றம்பலம்

ஆட்சி யுலகை யுடையாய் போற்றி
　　அடியார்க் கமுதெலாம் ஈவாய் போற்றி
சூட்சி சிறிது மிலாதாய் போற்றி
　　சூழ்ந்த கடல்நஞ்ச முண்டாய் போற்றி
மாட்சி பெரிது முடையாய் போற்றி
　　மன்னியென் சிந்தை மகிழ்ந்தாய் போற்றி
காட்சி பெரிது மரியாய் போற்றி
　　கயிலை மலையானே போற்றி போற்றி.

திருச்சிற்றம்பலம்

அமிழ்தினுமினிய தமிழ்மறை அருளிய பெருமக்களில் திருநாவுக்கரசு சுவாமிகளுக்குத் தந்தையார் இட்ட பெயர் மருள் நீக்கியார் என்பது. திருவதிகை வீரட்டானேசுரர் அருளியது திருநாவுக்கரசு. அதனை வடமொழியில் மொழிபெயர்த்து, சேக்கிழார் பெருமானுர் வாகீசப்பெருந்தகை என வழங்கினர். கையில் உழவாரப் படை வைத்திருந்தமையால் அவர்க்கு உழவாரப் படையாளி என்றும், தமிழ் வேதம் பாடினமையால் தமிழாளியார் என்றும், திருத்தாண்டகம் பாடியமையால் தாண்டகவேந்தர் என்றும் வேறு பெயர்களும் இவர்க்கு வழங்கி வருகின்றன. திருநாவுக்கரசு சுவாமிகள் சீகாழிக்கு வந்து சம்பந்தப் பெருமானை வணங்கிய பொழுது அவர் அழைத்த பெயர் அப்பர் என்பது. திருநாவுக்கரசு என இறைவன் ஈந்த திருநாமத்தினும் பிள்ளையார் ஈந்த அப்பர் என்ற திருநாமமே உலகத்தார் அனைவரும் இவரை அறிதற்கேதுவாய் அடிப்படப் பயின்று வருகின்றது. ஆகையால் இத்தலைப்பில் உள்ள முதல் மொழி திருநாவுக்கரசரைக் குறிப்பதாகும்.

அடுத்தது இவர் சிவபெருமானை 'அப்பன் நீ அம்மை நீ' என்ற தனித் திருத்தாண்டகத்திலும் "ஆல வாயி லப்பனே யருள்செ யாயே'' எனத் திருவாலவாய்த் திருநேரிசையிலும் பிற பதிகங்களிலும் கூறுவதால் அவரைக் குறிக்கும். எனவே அப்பருக்கு அப்பர் அளித்த கயிலைக் காட்சி என்னும் தொடர் எல்லா ஆன்மாக்களுக்கும் அப்பனாய் விளங்கி அருளும் சிவ பெருமான், திருநாவுக்கரசு சுவாமிகளுக்கு அளித்த கயிலைக் கோலக் காட்சி என்னும் பொருள் தரும்.

அப்பர் பெருமானின் வாழ்க்கை வரலாற்றுச் சுருக்கம்

சோழநாட்டிற்கும் தொண்டை நாட்டிற்கும் இடையிலுள்ள நடுநாட்டின் கீழ்ப் பகுதியாகிய திருமுனைப்பாடி நாட்டிலுள்ள திருவாமூரிலே, சைவ வேளாளர் குலத்திலே, புகழனார் என்பவர் தமது மனைவியாராகிய மாதினியாருடன் செய்த தவப் பயனாய் அவதரித்தவர் நமது நாயனார். இளமையில் பெற்றோரை இழந்து தமக்கையார் ஆகிய திலகவதி அம்மையார் உதவியோடு வாழ்ந்து வருங்கால் முன் செய்த தவக்குறை பயனால் சமண சமயம் சார்ந்து, பின்னர்த் தமக்கையார் சிவபெருமான்பால் முறையிட்டுக் கொண்டபடி மீளவும் சைவ சமயம் புகுந்து திருவதிகை வீரட்டானம் வந்து திருப்பதிகம் பாடி திருநாவுக்கரசு என்னும் பெயர் சிவபெருமானால் சூட்டப் பெற்றார். அது கண்டு பொறாத சமணர்கள் தமது அரசனாகிய முதலாம் மகேந்திர வர்மன் துணையினால் துன்புறுத்தப்பட்ட பல அபாயங்களினின்றும் நீங்கி திருப்பாதிரிப்புலியூர் முதலிய தலங்கள் தோறும் சென்று பதிகங்களால் இறைவனைப் போற்றி அத்துடன் கையில் உழவாரப் படைகொண்டு ஆலயங்களிலுள்ள புல் முதலியவற்றைச் செதுக்கிக் கைத்தொண்டும் புரிந்து சைவ சமயம் சார்ந்ததற்கு அடையாளமாகத் தமது தோளில் சூலம், இடபம் அமையப் பெற்றார்.

பிறகு திருவரத்துறை திருமுதுகுன்றம் திருத்தில்லை திருநாரையூர் என்னும்தலங்களை வணங்கிக்கொண்டு சீகாழிக்கு வந்து திருஞான சம்பந்தப் பெருமானை வணங்கி அவர் அருள் பெற்று திருக்கோலக்காவை வணங்கினார். அதன்பிறகு திருக் கருப்பறியலூர், திருப்புன்கூர், திருநீடூர், திருக்குறுக்கை,

திருநின்றியூர், திருநனிபள்ளி, முதலான தலங்களை வணங்கிக் கொண்டு திருச்சத்திமுற்றத்தை அடைந்தார். அங்கே இறைவனை வணங்கி,

"கோவாய் முடுகி யடுதிறற் கூற்றங் குமைப்பதன்முன்
பூவா ரடிச்சுவ டென்மேற் பொறித்துவை"

என்னும் திருப்பதிகம் பாடினார். இறைவர் 'நல்லூர்க்கு வா" என்று அருளிச்செய்தார். அப்பமூர்த்தி திருநல்லூரிலே சென்று வணங்க, இறைவர் தம்முடைய திருவடிகளை அவர்தலைமேல் சூட்டியருளினர். பிறகு திருவையாற்றுக்கு அருகிலுள்ள திங்களூர் வந்து அப்பூதி அடிகளார் மகன் பாம்பு கடித்து இறந்தவனை எழுப்பி, அடியார் திருக்கூட்டத்துடன் பல தலங் களையும் வணங்கிச் செல்பவர் திருவாரூர் சென்று திருவாதிரை நட்சத்திரத்தில் வீதிவிடங்கப் பெருமானுடைய திருவிழாவை சேவித்து மகிழ்ந்து இருந்தார். பிறகு திருப்புகலூர் சென்று அங்கே முருகநாயனாருடைய திருமடத்தில் எழுந்தருளியிருந்த திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாரைக் கண்டு வணங்கி சில நாட்கள் தங்கியிருந்தனர். இந்த முருக நாயனாருடைய திரு மடம் திருப்புகலூரில் வடக்கு வீதியின் வடசிறகில் இருந்ததை அவ்வூர்க் கோயில் கல்வெட்டு உணர்த்துகின்றது. இருவரும் திருக்கூட்டங்களோடு பல தலங்களை வணங்கிச் செல்பவர் திருவீழிமிழலையடைந்து அங்கு வாசியில்லாத படிக்காசு பெற்று அடியார்களுக்கு அமுதூட்டி, மறைக்காடுசென்று வடமொழி மறையால் பூசிக்கப்பெற்று மறைக்காடு என்னும் பெயர் பெற்று, அம்மறைகளால் அடைக்கப்பட்டகதவு திறக்கப் படாமல் இருந்த திருக்கோயில் கதவு, திறக்கும்படி தமிழ்மறை பாடி, அங்கிருந்து திருஞானசம்பந்தமூர்த்தி நாயனாருடன் விடைபெற்று வடதிசை திரும்பி, நடுநாடு, தொண்டைநாடு இவற்றிலுள்ள தலங்களை வணங்கித் திருப்பதிகம்பாடி திருக் காளத்தி மலையை வந்து சேர்ந்தார்.

வடகயிலைக் கோலக் காட்சியைக் காணும் விருப்பம் தோன்றல்

'காளத்தியான் அவன் என் கண்ணுள்ளானே' என்னும் மகுடத்தையுடைய திருத்தாண்டகம்பாடி இது தென்கயிலை

ஆயிற்றே. இறைவனைக் களிகூர்ந்து பரமானந்தக் கடலில் திளைப்பதுபோல வடகயிலையின் கண்ணும் சென்று அருட்சத்தியாகிய எம்பெருமாட்டி சமேதராய் வீற்றிருக்கும் எங்கள் ஆண்டவனின் திருக்கோலத்தைக் கண்ணாரக் கண்டு, வாயார வாழ்த்தி, மனமார நினைந்து, போற்றினாலன்றோ இப்பிறவியெடுத்த பயன் முற்றும் என்று நினைவு தோன்றி, அந்த நினைவும் அவாவும் மேலும் மேலும் பெருக அடங்கமுடியாத பேர் ஆர்வத்துடன் வடகயிலை செல்லத் தீர்மானித்தார்.

வடகயிலைச் செலவு

தம்முடன் தொடர்ந்த அடியார் குழாங்களை நிறுத்தி, தாம் மாத்திரம் தனியாகச் சென்று இடை இடையே தலங்களை வணங்கி, தமிழ்நாடு கடந்து, அடுத்து தெலுங்கு, கன்னட நாடுகளையும் நீங்கி மாளவம், இலாடபூமி பைதிரம் இவைகளைக் கடந்து கங்கை அணைந்து சென்று வாரணாசியைப் பணிந்து, பின் வடக்கே செல்லும்படியான கல்வழியே சென்றார். ஒருநாள் பயணமா? இருநாள் பயணமா? பல பல காதங்கள் காலால் நடந்து செல்ல வேண்டுமோ! இடை இடையே பசிக்கு என் செய்வார்? வழியில் எதிர்ப்பட்ட காய், கனி, கிழங்கு, முதலியவற்றை உண்டு, வழியில் காணும் நீர் நிலைகளில் தண்ணீர்ப் பருகி இரவில் தூங்கின நேரம்போக இரவும் பகலுமாய் நடந்து கயிலைமலையை அடைந்தார். கயிலைமலை என்பது இமயமலைச் சாரலில் உள்ளது. இதனை,

பொன்னின் வெண்திரு நீறு புனைந்தெனப்
பன்னும் நீள்பனி மால்வரைப் பாலது
தன்னை யார்க்கும் அறிவரி யான் என்றும்
மன்னி வாழ்கயி லைத்திரு மாமலை

(திருமலைச் சிறப்பு — திருப்பாடல் 1)

என்னும் பெரிய புராணத்தால் அறிக.

இவர் வருந்தாம் வழியாகச் செல்லும்பொழுது புலி முதலிய வனவிலங்குகள் சிவனடியாராகிய இவர்க்கு அஞ்சி ஒரு தீமையும் செய்யாதொழிந்தன. நாகங்கள் இரவில் இவர் செல்லுங்கால் தமது இரத்தினங்களைக் கக்கி விளக்கெடுத்தன.

இவ்வாறு செல்கின்றனர் நமது நாயனர். இளைப்பா சலிப்பா மனத்தளர்ச்சியா இவை எதுவும் தோன்றவில்லை. கயிலை காணும் நோக்கு ஒன்றுமே இவை ஒன்றும் தோன்ருவாறு மிகுந்து நின்றது. அடுத்தாற்போல் ஒரு பாலைவனம் இருந்தது. அதனையும் கடந்து கல்வழியே செல்லச் செல்ல, நடந்தகால்கள் பரட்டளவும் தேய்ந்தன. இனி கால்நடக்க முடியாது. கைகள் இருக்கின்றனவே. அவை பெற்ற பயன் இதைவிட வேறு யாதுளது? என்று கையை ஊன்றியே அக்கொடிய கல்வழியே சென்ருர். கால் தேய்ந்த போது கை எத்தனை நாளைக்கு நிற்கும்? கையும் தேய்ந்து போயிற்று. இன்னும் கயிலை எத்தனை தூரம் இருக்கின்றதோ? காலும் தேய்ந்து, கையும் தேய்ந்து விட்டதே! இனி எப்படிச் செல்வது?ஏன் என்னுடைய மார்பு இருக்கின்றதே. மார்பினல் நகர்ந்து நகர்ந்து செல்வேனுக என்று அவ்வாறே நகர்ந்து சென்ருர். மார்புதான் எத்தனை நாள் தாங்கும்? அதுவும் தேய்ந்து விடவே அவரது கயிலை காணும் ஆர்வமும், முயற்சியும், உறுதிப்பாடும், தளராத மன ஊக்கமும், சற்றும் தேயவே இல்லை.

இனி எஞ்சிய உடம்பு கொண்டு உருண்டு உருண்டு செல்வேனுக என்று அவ்வாறே உருண்டு சென்ருர். என்னே! எங்கள் அப்பர் பெருமானின் வினைத் திட்பம்! என்னே எங்கள் குலதெய்வத்தின் கடைப்பிடி! என்னே எங்கள் பரமாசாரியாரின் பிடிவாதம்! இவர் உறுதிப்பாட்டை உலகினர்க்குக் காட்ட எண்ணிய எங்கள் ஆண்டவனின் மறக்கருணைதான் என்னே! என்னே! அப்புறம் செயல் யாது? தலைப்பாகம் தான் மிச்சம். அதை உருட்டினுல் உடம்பு உருளுமா? உடம்பு உருட்டினுல் தலை உருளும். செயல் நின்றது. ஆர்வமும் உறுதியும் செயலை நோக்கி நிற்கின்றன. இவ்வாறு இவரைத் துன்புறுத்தியது எது? இவர் பாடும் தமிழ் வேதம்தான். இங்ஙனம் இவரைக் கொண்டு தமிழ் நாட்டினர்க்கு இன்னும் பல சைவ உண்மைகளையும் அடிமைத் திறனையும் விளக்கும் தேவாரப் பதிகங்களைப் பாடி நலம் புரியுமாறு எண்ணினன் எல்லாம் வல்ல ஆண்டவன். இதைப் படிக்கும் நமக்கே மனம் கசிந்து உருகுகின்றதே. அனைத்துயிர்க்கும் அன்னையாம் ஆண்டவன் உள்ளம் இன்னுமா உருகாதிருக்கும்? உடனே தோன்றினுர் ஒரு

முனிவடிவத்தோடு. அப்பர் கிடக்கும் இடத்திற்கு ஓடிவந்தனர். அப்பர் பெருமான் நோக்கும்படி நின்றனர். அப்பெருமான் அருகில் ஒரு குளம் தோன்றிவிட்டது. சடைமுடி மரவுரி திரு நீற்றுக் கோலத்துடன் அப்பர் பெருமானை நெருங்கி யாரையா? என்ன இப்படி உடம்பு தேயும்படிச் செய்து கொண்டீரே! உம் முடைய கருத்து யாது என வினவ, அடியேன் சர்வலோக நாயகியாகிய அம்மையாருடன் எங்கள் அப்பனும் சிவபெரு மான் திருக்கயிலையில் வீற்றிருக்கும் கோலத்தைக் கண்ணாரக் காணச் செல்லும் முயற்சியில் இந்நிலை உற்றேன் எனலும், முனிவர் என் செய்தீர்! திருக்கயிலை தேவர்களுக்கும் சென்று காண முடியாதது. அங்ஙனம் இருக்க மனிதப் பிறப்பினர் எங் ஙனம் அடையற்பாலர்? ஆதலின் இவ்வாசையை முற்றிலும் மறந்து மீள்வதே கருமம் என்றனர்.

கேட்ட திருநாவுக்கரசர் கால் தேய்ந்தது. கை குறைந்தது. மார்பு ஒடுங்கியது. இவற்றிலும் வருந்தாது மிக்க வருத்தம் சினத்தோடு எழ 'மீள்வதா' அந்தப் பேச்சு இங்கில்லை. திருக் கயிலையில் இருக்கும் கோலங் கண்டு தரிசித்தன்றி மீளேன் மீளேன் இது உறுதி. ஐயர் எனக்கு அருளுவர். இதில் மிக்க உறுதியும் நம்பிக்கையும் உண்டு என்றனர். எனவே இவரது அளவிறந்த துணிவுடைமையைக் கண்ட ஆண்டவன் இவரை மாற்ற முடியாது. நாமாவது நமது வடிவை மாற்றிக் கொள் வோம் என்பவர் போல, வானில் மால்விடை மீது மலையாள் ஒரு பாகமாகத் தோன்றக் காட்சியளித்தனர். கண்டு களிகூர்ந்தார் எங்கள் அப்பர் பெருமான்.

(தொடரும்)

நால்வர் துதி

பூழியர்கோன் வெப்பொழித்த புகலியர்கோன் கழல்போற்றி!
ஆழிமிசைக் கன்மிதப்பில் அணைந்தபிரான் அடிபோற்றி!
வாழிதிரு நாவலூர் வன்றொண்டர் பதம்போற்றி!
ஊழிமலி திருவாத வூரர்திருத் தாள்போற்றி!

கல்லெழுத்துக்களில் கங்காபுரியினர்

திரு. K. M. வேங்கடராமையா அவர்கள், M.A.,
திருப்பனந்தாள்.

கங்கைகொண்ட சோழன்

இச்சோழப் பேரரசர்களில் மிகச் சிறந்த அரசனுகத் திகழ்ந்தவன் முதலாம் இராசேந்திரன் ஆவன். இவன் கி. பி. 1012 முதல் 1044 வரை ஆட்சி புரிந்தவன்; கங்கைவரை படையெடுத்துச் சென்று வாகைசூடியமையின் கங்கை கொண்ட சோழன் எனச் சிறப்புப்பெயர் எய்திஞன்; 'அலை கடல் நடுவண் பலகலஞ் செலுத்திக்' கடாரத்தை வென்றமை யின் 'கடாரங்கொண்ட சோழன்' எனப்பெற்ருன்.

கங்கை கொண்ட சோழபுரம்

இராசேந்திரன் I தான் கொண்ட கங்கை வெற்றியின் சின்னமாகக் கங்கை கொண்ட சோழபுரம் என்னும் நகரமும், கங்கை கொண்ட சோழேச்சரம் என்னும் திருக்கோயிலும் நிர்மாணித்தான். அந்நகரம் அந்நாளில் மிகப் பெரியதாக அமைந்திருத்தல் வேண்டும். அந்நகரம் இருந்ததற்கு அறிகுறியாகக் கங்கை கொண்ட சோழபுரம் என்னும் பெயருடன் ஒரு சிற்றூரும், கங்கை கொண்ட சோழேச்சரம் எனும் திருக்கோயிலும் காட்சி யளிக்கின்றன. பண்டிருந்த பெருநிலையை அறிவிக்கும் முறை யில் இந்நாளைய கங்கை கொண்ட சோழபுரத்தைச் சுற்றிலும் சில ஊர்கள் உள்ளன. சுண்ணும்புக்குழி என்பதொன்று; இது கோயில் கட்டச் சுண்ணும்பு தயாரித்த இடம் ஆகலாம். கணக்கு விநாயகர் கோயில்; இது கோயிலுக்கு அரைக்கல் தொலைவில் ஓடைக்கு அப்பால் உள்ளது. மண்மலை, மெய்க்காவல் புத்தூர், குயவன்பேட்டை, உட்கோட்டை முதலியன அந்நகரப் பகுதி களாம். உட்கோட்டை என்பது அரண்மனைகள் இருந்த பகுதி

ஆகும். ஆயிரக்கலவன் என்ற ஊரும் இருக்கிறது; அஃது ஆயுதக்களம் என்பதன் திரிபாகலாம். இது போன்ற இன்னும் பல சிற்றூர்களும் அடங்கிய நகரமே முன்னைய கங்கை கொண்ட சோழபுரமாகும்.

கங்காபுரி

இந்நகரம் கங்காபுரி என்றும், கங்கை மாநகர் என்றும், கங்காபுரம் என்றும் வழங்கப்பெற்றுள்ளது. வீரராசேந்திர சோழனின் ஐந்தாவது ஆட்சியாண்டுக்குரிய மணிமங்கல சாஸனம், 'பெரும் புனற்றனுது கங்கைமாநகர் புகுந்தபின்' என்றும், 'இகலிடைப் பூண்ட ஜயத்திருவொடும் கங்காபுரி புகுந்தருளி' என்றும் கூறுதல் காணலாம். கங்காபுரம் என்று தண்டியலங்கார மேற் கோட் பாடலில் உள்ளது.

அறங்கள் பல

பெருநகரமாகத் திகழ்ந்த கங்காபுரியில் வாழ்ந்தோருள் பலர் பல்வேறு அரசர்கள் காலத்தில் தம்மாலியன்ற அறங்களைச் செய்துவந்துள்ளமை பல ஊர்களிற் கண்ட கல்லெழுத்துக்களினின்று அறியப்பெறுகின்றது. அவ்வறங்களிற் சில காண்பாம்.

சிவபுரியில்

சிவபுரி என்பது தென்னூர்க்காடு மாவட்டத்தில் உள்ள ஓரூர். இங்கு முதல் இராசேந்திரனின் ஆட்சி யாண்டு குறிக்கப் பெருத கல்வெட்டுண்டு (510 of 1926). கங்கைகொண்ட சோழ புரத்து அரண்மனையில் திருமஞ்சனம் ஆட்டும் பணிமகளிருள் ஒருத்தி 'நாட்டாமை' என்ற பெயருடையவள். அவள் சிவபுரிக் கோயிலுக்குச் சிறிது பொன் அறஞ் செய்தாள்.

தலைச்சங்காட்டில்

தலைச்சங்காடு என்பது சம்பந்தரால் பாடப்பெற்ற சோழ நாட்டுத் தலங்களுள் ஒன்று. இத்தலத்துள்ள திருவாய்ப்பாடி ஆழ்வார் கோயிலில், கங்கைகொண்ட சோழபுரத்தில் "வீர சோழ மடிகை" என்ற பகுதியில் இருந்த ஒரு வியாபாரி, ராசேந்திர சோழன் மாடை 400 கழஞ்சு பொன் அளித்தான். இஃது 800 காசுக்குச் சமம். இப்பொன்னைக்கொண்டு தலைச்

சங்காடு ஊர் அவையினர், அக்கோயில் நிலங்கள் சிலவற்றுக்கு இறை நீக்கினர். (400 கழஞ்சுக்கு ஆண்டொன்றுக்கு வட்டி 150 கழஞ்சு). இங்ஙனம் முதலாம் இராசேந்திரனின் கல்வெட்டொன்ருல் (203 of 1925) அறியலாம்.

திருவெறும்பூரில்

தேவார காலத்தில் இத்தலம் திருவெறும்பியூர் எனப் பெற்றது. திருநாவுக்கரசர் இத்தலத்தைப் பாடியுள்ளார். இது திருச்சிராப்பள்ளிக்கு அருகில் உள்ளது. இங்கு இரண்டாம் இராசேந்திரனின் 5-ஆம் ஆட்சி யாண்டுக்குரிய கல்லெழுத்து உள்ளது (121 of 1914). கங்கைகொண்ட சோழபுரத்து உய்யக் கொண்டான் தெரிந்த திருமஞ்சனத்தார் வேளத்துப் பெண்டாட்டி ஒருத்தி திருவெறும்பூர்க்கோயிலில் ஒரு விளக்குத்தண்டு வாங்கப் பணம் அளித்தனள்.

திருவாரூரில்

இது ஏழுவிடங்கத் தலங்களுள் முதன்மையான தலம்; வீதி விடங்கத்தியாகர் என்பது தியாகேசப்பெருமான் திருப்பெயர் ஆகும். உடையார் வீதிவிடங்க தேவர் நம்பிராட்டியார்க்கு ஒரு இரத்தின ஆரத்தைக் கங்கை கொண்ட சோழபுரத்தான் ஒருவன் அளித்ததாக இரண்டாம் இராசேந்திர சோழனின் எட்டாம் ஆட்சி யாண்டுக்குரிய கல்லெழுத்தில் உள்ளது (676 of 1919).

திருக்காளத்தியில்

திருக்காளத்தி, மூவர் பாடலும் பெற்ற தலங்களுள் ஒன்று. இத்தலத்தில் விளக்கு வைப்பதற்காக 96 பசுக்களை ஒருவன் அளித்தான். அவனுக்குத் 'தெங்கங்குடையான் கூத்தவடுகன்' என்று பேர். அவன் கங்கைகொண்ட சோழபுரத்தில் "மலையரணப் படைவீடு" என்ற பகுதியில் ஒரு 'சிறுதனம்' அலுவலன். இச்செய்தி, ஆட்சியாண்டு குறிக்கப் பெருத திருக்காளத்திக் கல்வெட்டொன்ருல் (130 of 1922) அறியப்பெறும்.

திருவாவடுதுறையில்

இதுவும் மூவர் பாடலும் பெற்ற சோழ நாட்டுத் தலங்களுள் ஒன்று. திருவாவடுதுறைச் சபையினர் விக்கிரம சோழ

னுடைய மூன்றாவது ஆட்சியாண்டில் இரண்டு வேலி நிலத்தை இறையிலியாக்குதற் பொருட்டு 100 காசு பெற்றார்கள். இந் நிலம் விக்கிரம சோழனுடைய மாதேவிகளில் ஒருவராகிய முக் கோக்கிழானடிகளின் பணிப் பெண்ணால் கொடுக்கப் பெற்றது. அப் பணிப்பெண்ணின் பெயர் 'பவழக்குன்று பெரியாள்' என்ப தாகும். இந்நிலம் குலோத்துங்க சோழநல்லூரில் மங்களேசு வரமுடைய மகாதேவர்க்கு அளிக்கப்பெற்றது. இக் குலோத் துங்கசோழநல்லூர், கங்கைகொண்ட சோழபுரத்துக் கைக் கோளர்க்குரிய வீரபோகம் ஆகும். இங்ஙனம் திருவாவடுதுறைக் கல்வெட்டொன்றியம்புகிறது (69 of 1926).

திருவாவடுதுறையில் "பெருந்திருவாட்டி" என்ற ஒரு அறச் சாலை* முன்னாளில் இருந்தது. இதற்கு "அறச்சாலைப்புறம்" ஆக 13 வேலி நிலம் ஒதுக்கப்பெற்றது. உய்யக் கொண்ட சோழச் சதுர்வேதிமங்கலத்தார் 716¼ அன்றாடு பழங்காசு பெற்று அந்நிலத்தை இறையிலியாக்கினர். இவ்வறச்சாலை கங்கைகொண்ட சோழன் திருகொற்ற வாசலில் புறவாயில் சேனாபதி 'இளங்காரி குடையான் சங்கரன் அம்பலம் கோயில் கொண்டான் ஆன அநந்த பாலர்' என்பவரால் நிறுவப் பெற் றது (71 of 1926).

கோட்டூரில்

இது சம்பந்தர் தேவாரம் பெற்ற சோழ நாட்டுத் தலங் களுள் ஒன்று. (இது திருக்களர் என்ற தலத்துக்கு 3½ கல் தொலைவில் உள்ளது). இவ்வூர்க் கோயிலில் நீர் இறைக்கும் ஒரு உவச்சனுக்காக நிபந்தம் அளிக்கப் பெற்றது. இவ்வறத் தைச் செய்தவன் கங்கைகொண்ட சோழபுரத்துத் தரணி சிந்தா மணிப் பெருந் தெருவில் இருந்த ஒரு வியாபாரி ஆவன். இதனை மூன்றாம் குலோத்துங்க சோழனின் மூன்றாம் ஆட்சியாண்டுக் கல்வெட்டில் (454 of 1912) காணலாம்.

சீகாழியில்

சீகாழி, திருஞானசம்பந்தர் திருவவதாரம் செய்த தலம். இத்தலத்துப் பெரிய கோயிலில் திருஞானசம்பந்தருக்குத் தனி

---

* *திருவாவடுதுறையில் முன்னாளில் "சங்கரதேவன் அறச்சாலை" என்று இன்னொரு அறச்சாலையும் இருந்ததென ஒரு கல்வெட்டில் உள்ளது (159 of 1925).*

ஆலயம் உண்டு. இவ்வாளுடைய பிள்ளையார் திருக்கோயிலின் முதற் பிரகாரத்தைப் பழுது பார்த்தற்குக் கங்கைகொண்ட சோழபுரத்தவன் ஒருவன்,* மூன்ரும் இராசராசனின் இரண்டாம் ஆட்சியாண்டு 219-ஆம் நாளில் பணம் அளித்திருக்கிருன் (388 of 1918).

மடவிளாகத்தில்

இவ்வூர் செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்தது. இங்கு மூன்ரும் இராசராச சோழனின் 18-ஆம் ஆட்சியாண்டுக் கல் வெட்டுள்ளது (484 of 1926). கங்கைகொண்ட சோழபுரத்துக் கங்கைகொண்ட சோழேச்சரத்து நிமந்தக்காரன் ஒருவன், கல்லூரான க்ஷத்திரிய சிகாமணி நல்லூர் ஊரவரிடம் திருவீரட் டானமுடைய நாயஞர் திருப்பள்ளியெழுச்சிக்காக 8 கண்ட கோபலன் மாடை அளித்தனன். இதற்காக 2000 குழி இறையிலி நிலத்தை ஊரவர் கோயிலுக்கு உரிமையாக்கினர்.

முடிப்புரை

மேலே குறிப்பிட்டவாறு பலர் கங்கைகொண்ட சோழபுரத் தில் இருந்து தமிழ் நாட்டில் உள்ள பல கோயில்களில் அறஞ் செய்தவர்களாகக் காணப்பெறுகின்றனர். அன்னேரும் பிறரும் இன்னும் எத்தனையோ கோயில்களுக்குப் பல அறங்களைச் செய் திருக்கலாம். அவை இந்நாளில் அறியக்கூடவில்லை. இன்ன ணம் நல்லறஞ் செய்தோர் பலரும் வாழ்ந்த கங்கைகொண்ட சோழபுரம், இன்று ஒரு சிற்றூராகப் பழம் பெருமை சிறிதும் தோன்ருமே இருக்கிறது. பல அறங்களையும் செய்தாருடைய அறப்பயன் என்றுதான் வெளித் தோன்றுமோ? என்றுதான் கங்கைகொண்ட சோழேச்சுரர் பழம் பெருமையுடன் காட்சி யளிப்பரோ?

ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும்வா யெல்லாம் செயல். — *திருக்குறள்*

---

* *கங்கைகொண்ட சோழபுரத்துக் கங்கைகொண்ட சோழன் திரு மதிளுக்குள் வடகூரில் உத்தம சோழப் பெருந்தெருவிலுள்ள வானமாளிகை உடையான் வேம்பன்வைசியார் மகன் நாரம் பூண்டான் (தருமபுர ஆதீனப் பதிப்பு. 2-ம் திருமுறை – தலவரலாற்றுக் குறிப்பு – பக்கம் 65).*

சமயமும் தமிழும்

திரு. மது. ச. விமலானந்தம் அவர்கள் M. A.,
துணைத் தமிழ்ப் பேராசிரியர்,
சரபோசி கல்லூரி, த ஞ் சா வூ ர்.

ஏனை மொழிகட்கு இல்லாத சிறப்புக்கள் இன்தமிழுக்கு எத்தனையோ உண்டு. அவற்றில் ஈண்டு எண்ணத்தக்கது: அனைத்துச் சமயங்களும், அருந்தமிழ் அன்னைபால் அன்பு பூண்டு ஆன்ற தொண்டுகள் பல செய்து, அணிகலன்கள் பல பூட்டிப் பெருமையடைந்தமையே. உலகின் ஒப்பரிய சமயங்கள் ஒன்றுகூடி தத்தம் சமய இலக்கியங்களை யாத்து மகிழ்ந்த ஒரே ஒரு உலகமொழி உண்டெனில், அது நம் அருந்தமிழே எனப் பெருமையோடு கூறலாம். சமணம், பௌத்தம் சைவம் வைணவம், கிருத்துவம், இஸ்லாம் என்ற ஆறு பெருஞ் சமயங் களும் ஒருமையுற்று அருமையான பணிகள் புரியப் பெருமை யுற்றுப் பிறங்கியது,பிறங்குகின்றது பைந்தமிழ். தொன்மையும் மேன்மையும் மிக்க கிரேக்க, லத்தீன் மொழிகட்கோ, உயர் தனிச் செம்மொழியான வடமொழிக்கோ, இப்பெருமை உண்டா என்றால் இல்லையென்றே இயம்ப வேண்டியுள்ளது.

தமிழ் இலக்கியத்தை ஒருமுறை கண்ணோட்டம் செலுத் தின், சமயச் சார்பில்லாத செந்தமிழ்ப் பனுவல்கள் ஏது மில்லையோ என்னுமளவிற்குப் பெரும்பாலும் எல்லாம் சமய நூல்களாகவே இருக்கக் காணலாம். தமிழுக்குப் பெருமை தந்து நிற்கும்-தமிழன் மார்தட்டிப் பெருமைப்படப் பேசும் ஐம்பெருங் காப்பியங்களில் ஒன்றேனும் சமயச்சார்பில்லாத நூல்கள் உண்டா? சிலப்பதிகாரம், (சமயப் பொதுநோக்குடையது எனக் கருதப்படினும், பொதுவாகக் கருதப் படுவதற்கிணங்க) சிந்தா

மணி, வளையாபதி மூன்றும் சமணசமயத்தவை; மணிமேகலையும் குண்டலகேசியும் பௌத்தம் தந்தவை. இரட்டைக் காப்பியங்கள் எனப் பீடுறப் பேசும் சிலம்பும் மேகலையும் தனியார் தந்த அணிகலன்களோ? சமணமும் சாக்கியமும் [பௌத்தமும்] அளித்திட்ட பனுவல்களல்லவோ! ஐஞ்சிறு காப்பியங்கள் மட்டும் என்னவாம்! ஏன், பதினெண் கீழ்க்கணக்கு நூல்களில் பெரும்பாலன சமணம் தந்த செல்வங்கள் அல்லவா? தேவாரத் திருமுறைகள் சைவம் அளித்தவை; திவ்வியப் பிரபந்தங்களோ வைணவம் வழங்கியவை. பெருமைக்குரிய பெரியபுராணம் சைவத்தின் சொத்து; கற்றோர் போற்றும் கம்பராமாயணம் வைணத்தின் உடைமை. ஏன் அவ்வளவு தூரம் செல்லவேண்டும். தமிழனுக்குப் பெருமை பெற்றுத் தந்திட்ட தொல்லிலக்கணமாம் தொல்காப்பியமும், வான்மறையாம் திருக்குறளும் வழங்கிய காப்பியரும் வள்ளுவரும் சமண சமயத்தவர் என்றன்றோ ஆய்வாளர் உலகம் இயம்புகின்றது. வித்துவான்கள் ஏத்தும் நன்னூல் சமணமுனிவர் செய்ததன்றோ?

இவ்வண்ணம் ஒவ்வொன்றாக ஓர்ந்து வந்தால், சமயச் சார்பில்லாத நூல் ஒன்றேனும் உண்டா? சமயமின்றிச் செந்தமிழ் வளர்ந்திருக்குமா? என்ற ஐய நிலைக்கே அனைவரும் வரவேண்டியுள்ளது. அங்ஙனம் அருந்தமிழ் பெருஞ் சமயங்களால் பேராக்கம் பெற்றுள்ளது. சமயமின்றிச் செந்தமிழில்லை என்னுமளவிற்கு சமயத்தமிழ் - சமயம் வளர்த்த தமிழ் என்றியம்பும் நிலைக்கு, சமயச்செல்வாக்கு தலையோங்கி நிற்றலை யுற்றுநோக்கும் போது, சமயத்திற்கும் செந்தமிழுக்குமுள்ள இணைப்பும் பிணைப்பும் எளிதே அறியவரும்.

தமிழுக்குத் தலைவணங்கிப் பணிபுரிந்து அணிசெய்த சமயங்கள் ஆறு: அவை சமணம், பௌத்தம், சைவம், வைணவம், இஸ்லாம், கிருத்துவம் ஆகும். முன்னவை இரண்டும் வடக்கேயிருந்து வந்தவை; பின்னவை இரண்டும் பிற நாட்டினின்றும் போந்தவை; நடுவணதமையும் இரண்டும் தமிழகச் சமயங்கள். ஆக, தமிழகத்துத் தமிழுக்கு அகச் சமயங்களாகிய சைவமும், வைணமும் தமிழன்னையின் இரு கண்களென இலங்கிப் பணிபுரிந்தன. வடக்கிருந்துத் தென்னகம் வந்து தொண்

டாற்றிய இந்திய சமயங்கள் இரண்டு, அவையே சமணமும் பௌத்தமும். ஏனைய இரண்டும் பிற நாட்டினின்றும் போந்து பைந்தமிழ்ப் பணியாற்றின. இங்ஙனம் தமிழகத்தில் பிறந்தவை, [சைவமும் வைணவமும்] புகுந்தவை, [சமணமும் சாக்கியமும்] போந்தவை [இஸ்லாமியமும் கிருத்துவமும்] ஆக அமையும் ஆறு சமயங்களும் முத்திறத்தினவாய் அமைந்து தித்திக்குந் தமிழுக்கு எத்தனையோ பணிகள் இயற்றியுள்ளன. இங்ஙனம் ஆறுக்கும் மேற்பட்ட வேறுபடு சமயங்கள் வளர்தமிழ்பால் விருப்பு மிக்குற்று வகையான தொண்டுகள் செய்த திறம் வியந்து செயல் மறந்து பாராட்டற்பாலது.

இதில் உள்ள விந்தைக்குரிய – வியப்புக்குரிய செய்தி யாதெனில், சமணமும், பௌத்தமும் பகைமை மிகக் கொண்ட சமயங்கள்; சைவமும் வைணவமும் முரண்பட்டவை; பின்னவை இரண்டும் ஏனைச் சமயங்களை அறவே வெறுப்பவை. ஆனால் அத்தகு மாறுபாடும் வேறுபாடும் கொண்ட இவ்வறு சமயங்களும் இன்தமிழ்ப் பணியில் பகைமை மறந்து – வேற்றுமை மறந்து – பிணக்கின்றி நிற்கின்றன. இத்தனிச் சிறப்பினைக் கண்ட கவிஞர் ஒருவர்,

‘பொற்சைவ வைணவமும்,
புத்தர்பிரான் பொன்னுரையும்,
நற்சமண கிறித்துவமும்,
நபிகள்பிரான் நல்லுரையும்,
பற்பலவா யிருந்திடினும்;
பைந்தமிழின் பண்பேற்றுக்
கற்போரைப் பிடித்திழுத்துக்
கனிதமிழின் சுவையூட்டி;
நாயன்மார் நாவமுதும்,
நல்லாழ்வார் பாசுரமும்,
மேயபுகழ் மேகலையும்,
மேம்படு சிந்தாமணியும்,
மாமுனி தேம்பாவணியும்,
மாண்பேறு *சீறு*வும்,

காமுறவே எல்லோரும்
கண்ணாரக் கண்டோதும்
காவியமாய் இந்நாட்டில்
கதிர்வீசக் காண்கிறோம்.'

எனப்பாடி மகிழ்கின்றார்; தமிழின் மாட்டுள்ள அன்பால் ஒருமையுற்று விளங்குவதை வாயாரப் புகழ்கின்றார். சைவன் வைணவனை வெறுக்கிறான்; ஆனால் அச்சமய நூலாம் திவ்வியப் பிரபந்தத்தை இனித்துச் சுவைக்கிறான். திருப்பாவை திருவெம்பாவை மாநாடுகள் இணைந்து நிற்கின்ற அற்புதக் காட்சியினையும் ஈண்டு எண்ண வேண்டும். தென்னாடுடைய சிவனே போற்றி, எந்நாட்டவர்க்கும் இறைவா போற்றி எனப்பாடும் – பெரிய புராணமே பெரிதென பகரும் சைவன் இதயங்கனிந்துருகிப் படிக்கின்றான் இராமன் திருக்கதையை – இராமாயணத்தை. கிருத்துவத்தையும், இஸ்லாமியத்தையும் வெறுக்கும் வைதீக சமயத்தவன் தேம்பாவணியையும், சீருப்புராணத்தையும் வாயாரப் புகழ்கின்றானே இது தமிழின் மாண்பா? அன்றித் தமிழ்க் கோயிலிலே தகவுடைய சமயங்கள் பகையற்று பிறங்கும் பெற்றி பெற்று ஒற்றுமையுறுகின்றனவா? அல்லது தமிழின் ஈர்ப்பு இச்சமயங்களை இகல் மறக்கச் செய்து விட்டதா? வெளியில் தாழ்வும், பூசலும் மிக்க சமயங்கள் வளர்தமிழ் பால் வந்ததும் வேற்றுமை விடுத்து ஒருமையுற்ற விந்தைதான் என்னே!

இங்கே ஒன்று, எண்ண வேண்டும்: அகச் சமயங்களாகிய சைவமும் வைணவமும் தவிர, புறச் சமயங்கள் எதுவும் இன் தமிழால் அன்பு பூண்டோ, அன்றித் தூயதமிழ்ப்பணியாற்ற வேண்டுமெனும் பெரு விருப்பு கொண்டோ தமிழ்ப்பணி புரிந்தனவாகக் கூறுவதற்கில்லை. தமிழகத்தில் தங்கள் சமயங்கள் காலூன்றித் தழைக்க, ஆங்குள்ள தமிழின் துணையின்றி இயலாது என்றறிந்த இச்சமயத்தினர், இன் தமிழ்ப் பணியில் ஈடுபட்டனர். எந்த மொழி கொண்டு தங்கள் சமயங்கள் பரவ முடியும் என்று எண்ணினார்களோ, அந்த மொழியே அச்சமயத்தவர்களை ஆட்கொண்டு விட்டது. தமிழைக் கருவியாக்கக் கருதினர்; தமிழைப் பயின்றனர். அதனூடே அதன் இனிமையும்

அழகும் அறிந்து இன்புற்றனர். உரிய கருவியாக்கக் கருதிய வர்கள் உள்ளத்தில் ஒண்தமிழ் உலேயா நிலே பெற்று நின்றது. கருவியாக்கிய கன்னித் தமிழுக்கே எண்ணரிய தொண்டு இயற்று மாருயிற்று.

தங்கள் கருத்துக்களேயும் கொள்கைகளேயும் தமிழ் மக்களிடம் பரப்பப் பல்வகை இலக்கியங்களேயும் பல்சுவைப் பனுவல்களேயும் இயற்றினர். அங்ஙனம் சமயம் பரப்ப அவர்கள் ஆற்றிய பணியே, அருந்தமிழ்ப் பணியாகவும் முடிந்தது. அவர்கள் நோக்கம் சமயப்பணி; அதுவே செந்தமிழ்ப் பணியாகவும் நிறைவேறியது. சமயக் கருத்துக்களேப் பரவும் வகை செய்ய இலக்கியங்கள் யாத்தனர்; அவ்விலக்கியங்கள் தமிழுக்குரிய செல்வங்களாக விளேந்தன. எனவே இப்புறச் சமயங்கள் இன்தமிழ்ப் பணியே நோக்காகக் கொண்டு இயற்றவில்லே; தங்கள் சமயத்தைப் பரப்பத் தமிழைக் கொண்டன; கருவியாகக் கருதிய கன்னித்தமிழில் காதலும் கொண்டனர்; அதனுல் சமய நூல்களோடு இலக்கிய நூல்களேயும் இலக்கணச் செல்வங்களேயும் இயற்றலாயினர் என்றே, அல்லது சமயக் கருத்தினேப் பரப்ப அவர்கள் ஆற்றிய பணியே தமிழன்னேயின் அணிகளாக அமைந்தன; தமிழ்ச்செல்வங்களாக முகிழ்த்தன என்றே இயம்பலாம். சமயத்திருப்பணி தமிழ்ப் பொற்பணியாகப் பரிணமித்தது.

இக்கூற்றின் உண்மையை இப்புறச் சமயங்கள் இன்தமிழில் யாத்துள்ள நூல்கள் கொண்டே உணரலாம். கருத்தினேப் பரப்ப கருவியாக்கிய கன்னித் தமிழில் மயங்கியமையாலேயே, சமயத்தைப் பரப்பதற்குரிய நூல்கள் இயற்றியதோடு நில்லாமல், தமிழ் வளர்ச்சிக்குரிய எண்ணரிய இலக்கண நூல்களேயும் எழுதிப் போந்தனர். இதனுற்ருன், (1) சமயம் பற்றிய நூல்கள், (2) இலக்கியச் சுவைமிகு நூல்கள் என இருவகையில் சமயங்கள் வழங்கிய அமைகின்றன. இது கொண்டு, சமயங்களின் சிந்தையும் செயலும், அதன் விளேவாகச் செந்தமிழ், இலக்கிய இலக்கணச் செல்வங்கள் பல பெற்றன என்பதறியலாம்.

தமிழாம் தரு காதலும் வீரமுமாகிய கிளேகள் பெற்று நெடுமரமாக நின்றநிலே போய், பூத்துக் குலுங்கிப் பொற்

கனிகள் மல்கிய பெருமரமாக இலக்கணம், நீதி நூல்கள், நிகண்டு, பெருங்காப்பியம், சிறுகாப்பியம், புராணம், சிற்றிலக்கியம், ஜோதிடம், உரைநடை, வாய்பாடு, தமிழாக்கம், விஞ்ஞானம், தருக்கம், திறனுய்வு, நாடகம், நவீனம், சிறுகதை, மொழியியல் முதலிய துறைகள் கொண்ட கற்பகத் தருவாகத் திகழச் செய்த பெருமை இச்சமயங்களையே சாரும். அவற்றின் பணியின்றேல், இங்ஙனம் பைந்தமிழ் பல்வேறு துறைகளிலும் சிறந்தொளிர்ந்திருக்குமா என்பது ஐயமே. இங்ஙனம் கன்னித் தமிழ் கிளைத்துத் தழைத்துக் கவினுற அமைய சமயங்கள் துணை நின்றன என்பதை யாரே மறுக்கவல்லார்.

இனி, இன் தமிழில் இத்துணைப் பெருநூல்கள் பல பெருகவும், பரந்து விரிந்து பெரும் இலக்கிய இலக்கணக் கடலாக நந்தமிழ் திகழவும் இச்சமயங்களே ஏதுவென இயம்பினும் தவருகாது. சமணமும், பௌத்தமும் கீரியும் பாம்பும் போல; சைவமும் வைணவமும் எலியும், பாம்பும் போல. இங்ஙனம் பகைச் சமயங்கள் அனைத்தும் போட்டியிட்டுப் பைந்தமிழுக்குப் புத்தணிகள் புனைந்தளிக்க முன் வந்தமையால், பன்னூல்கள் பெருகிப் பல்கின. ஒரு சமயத்தவர் காப்பியம் இயற்றினுல், இன்னெரு சமயத்தவர் அதை விஞ்சக்கூடிய வகையில் காப்பியம் இயற்றுவர். ஒரு சமய நூலுக்கு மறுப்பு நூல் மற்றொரு சமயம் இயற்றிடும்; குண்டலகேசிக்கு மறுப்பாக நீலகேசி அமையுமாப் போல. சிந்தாமணி நூலின்பால் ஈடுபாடுடைய மன்னனைத் தம் பக்கல் திருப்ப, பெரியபுராணம் எழவில்லையா? சைவத்திற்குத் திருத்தொண்டர் புராணமென்ருல், வைணவத்திற்கு கம்பராமாயணம் அமைந்ததன்ருே? ஒரு சமய நூற்கடலுள் இலக்கண நூல் இருப்பின், அதற்கு ஒப்பான இலக்கண நூல் தம் சமயத்தில் அமைய வேண்டுமெனும் ஆர்வத்தாலல்லவோ இத்துணை இலக்கண நூல்கள் எழுந்தன; யாப்பு நூல்கள் தோன்றின; தமிழில் நீதிநூல்கள் நிரம்ப உள்ளமைக்குக் காரணமே இச்சமயங்களிடை அமைந்த போட்டியும் பூசலும் தாமே! ஒரு சமயத்தில் பல்வேறு நூல்கள் இருக்குமாப் போன்றே, தம் சமயத்திலும் இருக்க வேண்டும்; அப்போதுதான் தமிழரின் அன்பைப் பெறமுடியும்; அவர்களுடைய மதிப்பிற்குரியதாக அமைய

இயலும் என்றெண்ணி, எண்ணற்ற நூல்களை வண்ணமுறத் தீட்டுவதில் கண்ணும் கருத்துமாயிருந்தன. அதன் பயனால் அளப்பரிய இலக்கிய இலக்கணச் செல்வங்கள் அருந்தமிழில் குவிந்தன.

இச்சமயங்களால் தமிழ் பெற்றிட்ட பயன்கள் பல. பல் வேறு துறைகளிலும் தமிழ் தழைத்தது; புதிய துறைகள் புகுந் தன; புதிய பாவினங்கள் முகிழ்த்தன; புதிய போக்குகள் தோன்றின. பாலி, பிராகிருதம், வடமொழி, ஆங்கிலம், போர்ச்சுகீசு, உருது மொழிச் சொற்கள் தமிழ்ச் சொற்கோவை யைப் [Vocabulary] பெருக்கின. பள்ளிக்கூடம் என்ற சொல்லே சமண பௌத்தம் தந்திட்ட சொல்லன்றோ? காதலும் வீரமுமாக இருந்த தமிழ் இலக்கியப் போக்கினை மாற்றி, ஒழுக்க நெறி, பக்திமுறைப் பாங்குகளை அமைத்தவை இச்சமயங்கள் அல்லவா?

இப்படி எத்தனையோ நன்மைகளைத் தந்திட்ட சமயங்கள், ஒரு சில தீமைகளையும் தரவே செய்தன. போட்டியால் ஒருபுறம் இலக்கியங்கள் தோன்றியது போன்றே, மற்றொரு புறம் நல்ல பல இலக்கியங்கள் மறையவும் செய்தன. சமணம் போலவே பௌத்தமும் பல்திற நூல்களைப் படைத்ததாக அறிகிறோம்; ஆனால் ஒரு சிலவே கிடைத்துள்ளன. ஒரு வேளை ஏனையவை சமயப் போரால் அழிந்திருக்கக் கூடுமோ என்றே எண்ண வேண்டியுள்ளது. சமண பௌத்த சமயங்கள் இசை, கூத்து ஆகியவற்றைச் சிற்றின்பம் விளைத்திடும் திக்கலைகள் எனக் கருதி அவற்றிற்கு ஆக்கம் தராது நசுக்கின. ஆதலின் இன்று பெயர் அறியவரும் எண்ணில் இசை, நாடக நூல்கள் கிடைக் காமற் போயின. மொழியும் ஓரளவு கெடுநிலை எய்தியது. சமண பௌத்தரால் மணிப்பிரவாள நடை,வடமொழியும் தமிழும் கலந்தவடமொழி வல்லவர்க்கும் விளங்காது-தமிழ் அறிந்தோர்க் கும் தெரியாது. இருமொழி இயன்றோர்க்கே புரியக்கூடிய ஒரு புதுத்தமிழ் தோன்றி இடர் விளைவித்தது. அது போன்றே'கிருத்து வர்கள் தமிழ்' என்றே ஒரு வகைத் தமிழும் [பாதிரித் தமிழ்] 'இஸ்லாமியத் தமிழ்' என ஒரு வகைத் தமிழும் எழுந்து இன்னல் தந்தன.

சமயங்களால் வளர்ந்த தமிழ் இரு வகையில் அடங்கும். ஒன்று சமயத் தொண்டர்கள், பெரியார்கள் வளர்த்தமை; இன்னொன்று மிஷனரிகள், மடங்கள் போன்ற நிலையங்கள் வளர்த்தமை. இங்ஙனம் தனியாருவரும் தகவுடை அமைப்பகங்களும் [Individuals and Institutions] ஆக இருமுனை-இருமுக அரவணைப்பில் தமிழ் வளர்ந்து வாழ்ந்து வளம் பெற்றது. இதற்கு எடுத்துக்காட்டாக வஞ்சிரநந்தி எனும் சமண முனிவரால் மதுரையில் அமைந்திட்ட திராவிட சங்கத்தைக் கூறலாம். சைவ வைணவ மடங்கள் பல ஆற்றிய-ஆற்றிவரும் தொண்டும் எண்ணுக. 'மடங்கள் வளர்த்தத் தமிழ்' எனத் தனியொரு நூலே எழுதுமளவிற்குத் தருமபுரம், திருவாவடுதுறை, திருப்பனந்தாள், குன்றக்குடி, இராமகிருஷ்ணர், மயிலம், ஞானியார், சங்கராச்சாரியார் மடங்கள் மாத்தமிழ் வளர்த்திடும் மாண்பே மாண்பு.

ஆறுக்கும் மேற்பட்ட சமயங்கள் அன்னைத்தமிழுக்கு அரிய பணிகள் புரிந்திருப்பினும், ஒவ்வொரு சமயமும் ஒவ்வொரு வகையில் செய்த பணியில் தனிச் சிறப்புற்றே விளங்குகின்றன. கிருத்துவம் அச்சு, விஞ்ஞானம், ஆய்வு போன்றவற்றில் தனித்தும், சமணம் எண்ணரிய நூல்களை அளித்திட்டமையால் உயர்ந்தும், இஸ்லாம் புதிய படைப்புக்களைத் தந்து சிறந்தும், வைணவம் வேதத்தைவிட திருவாய் மொழிக்கே சிறப்புத் தருவதால் முதன்மையுற்றும் அமைகின்றன. மலர்கள் வண்ணத்தால் வேறுபடினும், மணத்தால் தனித்துவம் பெறுமாப் போன்றே, செந்தமிழ் பணியில் பொதுமை பெரினும், சிறப்பு வகையால் சீர்மை பெற்று விளங்குகின்றன சமயங்கள்.

இவ்வாற்றான் சமயத்தால் சீர்மைபெற்ற செந்தமிழ், ஒரு குறிப்பிட்ட சமயத்தில் சிக்கியோ அன்றி தனியொரு மதத்திற்குக் கட்டுப்பட்டோ அல்லாது குறிப்பிட்ட ஒரு சமயத்திற்கு உரியதுமாகாது, கடவுள் போல, அனைத்துச் சமயங்களையும் கடந்தே நிற்கின்றது; சமயச் சிறையில் சிக்கி, மக்கி மடிந்து போகாது, கட்டுண்டு நலியாது, கடந்து நின்று காட்சியும் மாட்சியும் பெற்றுப் பிறங்குகின்றது. இத்துணைச் சமய கருத்துக்கும் இடங்கொடுத்து தான்மையும் தகுதியும் இழக்காது.

தன்மை கெடாது திகழ்கின்றமை எண்ணும் போது இறும்பூது எய்துகின்றோம்.

இதுகாறும் கண்டவற்றான், சமயங்கள் வளர்த்திட்ட சால்புடையது செந்தமிழ்; பல்வேறு சமயங்களின் போட்டியால் பைந்தமிழ் தழைத்தது, கிளைத்தது; சமயமின்றேல் செழுந்தமிழ் இவ்வளவு செழிப்புற்று வளர்ந்திருக்குமா என்பது ஐயம்; சமயத்தால் செழிப்புற்ற தமிழ் அவற்றால் ஒரு சில தீமைகளும் எய்தியது என்பதும் கண்டோம். கண்ட நாம், செந்தமிழ் வெல்க! வளர்தமிழ் வளர்க்கும் சமயங்கள் வாழ்க! என வாழ்த்தாமல் இருக்க முடியுமா? நன்றிமிக்கவர்களாயிற்றே நற்றமிழர்!

ஏற்றமுடன் வாழியரோ!

அருணந்தி எனும்பேரார் குருபரனார் வழித்தோன்றல்
அரனார்தம் அடியவர்க்கா அறவழியை அளந்தறிந்தார்;
எளியவரைக் கண்ணோக்கி எம்மனோர்க் களிசெய்வார்;
நன்றியிது நாம்மறவோம் அன்றியிது புகழ்ச்சியில்லை;
மன்பெரும் புகழேற்கும் பொற்கமலத் தாள்போற்றிச்
சொற்கூறுந் தொழிலுடையெம் நற்றமிழ்க் குமரகுரு
பரன்என்னும் இதழ்வாழ்க! பல்லாண்டு நனிவாழ்க!
ஆற்றிடுபதி குருண்டொடு பிற்காலக் கலைத்தொண்டும்
நாற்றிசையும் தமிழ்பரப்பி ஏற்றமுடன் வாழியரோ!

"தீவான்"

பாம்பன் ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகள் சரித்திரச் சுருக்கம்*

திரு ச. சச்சிதானந்தம் பிள்ளை அவர்கள்

"பாம்பனெனும் பதிமுளைத்த பவளக்குன்றே!
பழம்பாண்டித் தமிழ்ப்பொழிலே! பண்பார் இல்லத்
தீம்பயிரே! அன்புகொழிதிரையே! தெய்வத்
திறங்கண்ட அறநிலையே! செகத்தில் உற்ற
கூம்பலற எழுகதிரே! குழந்தை வேலன்
குகனெறியே நெறியென்ற குருவே! நீதி
ஓம்புகவேன் றுரைத்தொழுகி உலகில் வாழ்ந்த
உயர்குமர குருதாச ஒளியே! போற்றி." [திரு. வி. க.]

நமது பாரத நாட்டின் பெருமைகளுள் முதன்மையான தாய் விளங்குவது, பரம்பொருளைத் தம் அநுபவத்திற் கண்ட ஞானிகள், பண்டு தொட்டு இன்றளவும், அதன்கண் வாழையடி வாழையென வந்துகொண்டிருப்பதேயாகும். அம் முறையில், கி. பி. 19-ஆம் நூற்றுண்டிலும் பல மகான்கள் தோன்றினர். யுக தருமத்தின்படி சத்தியமும் நன்னெறியும் வலுக்குன்றிய போதெல்லாம் அவர்கள் அவசியமான சீர்திருத்தங்களைச் செய்து, மேலாம் தெய்வ நெறியைப் பின்பற்றி உயர்வடைய மக்கட்கு உதவி புரிந்தருளியுள்ளார்கள். அம்முறையில், கி. பி. 19-ஆம் நூற்றுண்டில், ஆரிய சமாஜ, பிரம சமாஜத் தாபகர்கள், சமரச வேதாந்தச் செந்நெறி பரப்பிய ஸ்ரீ இராம கிருஷ்ண விவேகானந்தப் பெரியோர்கள், சமரச சுத்த சன்மார்க்க சங்கத் தாபகராகிய இராமலிங்க சுவாமிகள், உலக குரு இமயஜோதி சுவாமி சிவானந்த சரஸ்வதி முதலியோர் தோன்றினர். அந்த நூற்றுண்டில்தான்-1853-ஆம் ஆண்டில் ஸ்ரீமத் பாம்பன் சுவாமிகளும் அவதரித்தார்கள்.

---

* இது, சென்னை, தேனும்பேட்டை, ஸ்ரீ பாலசுப்பிரமணிய சுவாமி கோயில் கோபுர கும்பாபிஷேக மலரில் வெளியானது.

இச் சுவாமிகளை நேரில் தரிசிக்கும் பேறு பெற்றவர்களில் சிலர் இன்றும் உள்ளனர். இவர்களில் சுவாமிகளின் சீடர் ஒருவர் தம் குருநாதரைக் கண்டு, அவர்களது சரித்திரம் விவரமாக எழுதப்படவேண்டும் என்று பன்முறை விண்ணப்பித்து வந்தார். அதுவும் ஓர் ஆடம்பரச் செயலாகுமென்று கூறிச் சுவாமிகள் மறுத்துவிட்டார்கள். பொய்யைப் பெரிதும் வெறுக்கும் சுவாமிகளது சரித்திரத்திலும் பிற்காலத்தில் பொய்யும் கற்பனையும் கலந்து விடக்கூடுமே என்ற அச்சத்தை அச்சீடர் தெரிவித்து வருந்தியபோது, சுவாமிகள், ஒரு நிபந்தனையுடன், சரித்திர விவரம் தெரிவிக்க இசைந்தார்கள். அந்த நிபந்தனையாவது, இச்சரிதம் தமது காலத்திற்குப் பிறகுதான் வெளியிடப்பட வேண்டும் என்பதாம். அதற்கிணங்கி அச்சீடர் சுவாமிகளிடம் பலமுறை சென்று கேட்டறிந்தவற்றிலிருந்து குறிப்புகள் எடுத்து எழுதி வைத்து வந்தார். இவற்றையும், சுவாமிகள் அருளியுள்ள நூல்களையும் ஆதாரமாகக் கொண்டு இச் சரித்திர நூல் உருவாகி வந்தது. சுவாமிகள் மகாசமாதி யடைந்த நிகழ்ச்சிக்கு முற்பட்ட பகுதிகள் யாவும் சுவாமிகளாலேயே செப்பம் செய்யப்பெற்றவையாகும். இந் நூல் 1929-ஆம் ஆண்டு ஜுன் மாதத்தில் வெளியிடப்பட்டுள்ளது. இந்த மெய்ச் சரித்திரத்தில் காணும் அரிய சம்பவங்களும் உண்மைகளும் பல*. அவற்றுள் ஒரு சிலவற்றைமட்டும் இக் கும்பாபிஷேக மலரில் ஒரு கட்டுரையளவில் சுருக்கித் தரும் கடினமான கடமையைச் செய்ய முயலுகின்றேன்.

ஸ்ரீமத் குமரகுருதாச சுவாமிகளின் ஊர் பாம்பன். தந்தையார் சாத்தப்ப பிள்ளை; தாயார் செங்கமலத்தம்மாள். மரபு சிவாலய அகத்திருப்பணி வேளாளர் மரபு. சுவாமிகள் அவதரித்தது தாயார் ஊராகிய இராமேச்சுரத்தில். காலம் கி. பி. 1853. பெற்றோர் இட்ட பெயர் அப்பாவு என்பது.

---

* இந்நூலின் இரண்டாம் பதிப்பு 1965-இல் சென்னை, திருவல்லிக்கேணி தா. வெங்கடாசல முதலியாரால் வெளியிடப்பட்டுள்ளது. இது சுமார் 190 பக்கங்கள் கொண்டது. இந்நூலைத் தழுவியே புலவர் அரசு என்னும் கவிஞர் 566 பாடல்களில், பாம்பன் குமரகுருதாச சுவாமிகள் வரலாறு என்னும் நூலை 1957-இல் வெளியிட்டுள்ளார்.

முதலில் இவர் முனியாண்டி பிள்ளை என்பவரிடம் தமிழ் கற்று வந்தார். பின்பு ஒரு கிறிஸ்துவ கலாசாலையிற் சேர்ந்து படித்தார். சிறு வயது முதலே அறிவும், ஒழுக்கமும், ஆண்டவன்பால் பக்தியும் வளரலாயின. மசூதியையோ மாதா கோயிலையோ காண நேரிடும்போதெல்லாம் அவற்றை வணங்கிச் செல்லும் பரந்த நோக்கமும் அவர்க்கிருந்தது.

பாடசாலையை விட்டு நீங்கு முன்னமே, தேவராய சுவாமிகள் பாடிய கந்த சஷ்டி கவசத்தை நாள்தோறும் 36 முறை ஓதி வந்தார். ஒரு நாள், தாமும் பரம்பொருளைப்பற்றிப் பாட வேண்டும் என்னும் வேட்கை எழுந்தது. 'கங்கையில் ச்டையில் பரித்து' என்னும் சொற்றொடர் எழுந்தது. தடை சிறிதுமின்றிப் பனையோலையில் ஒரு பாடலை எழுதி முடித்தார். அதுமுதல், நாள்தொறும் ஒரு பாடல் பாடும் நியமத்தை மேற்கொண்டார். பின்பு, தம் தந்தையாரின் நண்பராகிய சேது மாதவ ஐயரிடம் சடாக்ஷர மந்திரோபதேசம் பெற்றார். அவர் ஆணையின்படி வடமொழியும் கற்கலானார். சித்தர் நூல்களையும் ஆராய்ந்தார். கி. பி. 1893-இல், இவர் திருவனந்தபுரத்தில் ஓரன்பர் வீட்டு மேன்மாடியில் தனித்திருந்து 22 நாட்களில் யாப்பிலக்கணத்தை நன்கு படித்துணர்ந்தார். உடனே பல்சந்தப் பரிமளம் என்னும் நூலைப் பாடினார்.

இவரைப் பாம்பனில் நன்ருக அறிந்த சேஷகிரிராயர் என்னும் அந்தணர் - வடமொழிப்புலமையும் ஆங்கிலக் கல்வியும் பெற்று உத்தியோகத்திலிருந்தவர்-இவரது அறிவாற்றல், முருகபக்தி முதலிய பண்புகளை அறிந்து, இவருக்குக் குமரகுருதாசர் என்னும் பெயர் சூட்டினார். அதுவே பின்பு பலரால் போற்றி வழங்கப்படுவதாயிற்று.

ஆர்வத்துடன் முருகனை வழிபட்டு வருகையில், இவ் விளைஞர்க்குத் துறவில் நாட்டம் எழுந்தது. திருமணம் செய்து வைக்கப் பெற்றோர்கள் முயன்றபோது 25-ஆம் வயது வரையில் மறுத்தே வந்தார். பின்பு, தமது மந்திர குருவானவர் தமக்கு உறுதியாக இட்ட கட்டளையை ஏற்று, 1878-இல் காளி முத்தம்மாள் என்னும் நங்கையைத் திருமணம் செய்து

கொண்டார். இரண்டு ஆண் குழந்தைகளும் ஒரு பெண் குழந்தையும் பிறந்தன. இவர் இல்லறத்தை நல்லறமாகச் சுமார் பதினேழுஆண்டு காலம் நடத்தினர்.

எனினும், இவர் மனம் துறவறத்தையே நாடிக்கொண் டிருந்தது. அடிக்கடி தல யாத்திரையும் செய்து, ஆங்காங் குள்ள முருகப்பெருமானைப் பாடிவந்தார். குடும்ப வாழ்க்கை முடியுமுன்பே இவர் உப்பையும் புளியையும் நீக்கிவிட்டார்; நாளுக்கு ஒரு முறை உச்சிப்போதில் மட்டும் உணவு கொள்ளும் விரதத்தை மேற்கொண்டார். இந்த நியதி இவர் ஆயுட்கால முழுவதும் காப்பாற்றப்பட்டு வந்தது.

கடவுளை நேரிற் காணவேண்டும் என்னும் ஆவல் இவருக்கு நாள்தோறும் பெருகியது. கடுந் தவநெறியில் உறைந்து நின்று நேராய் முருகப்பெருமானிடமிருந்தே உபதேசம் பெற வேண்டும் என்ற உறுதி பிறந்தது. 1894-ஆம் ஆண்டில் பிரப்பன்வலசை என்னும் கிராமத்தின் மயான வெளியில், முப்பத்தைந்து நாள் இவர் நிட்டையில் அமர்ந்தார். பல சோதனைகள் நிகழ்ந்தன. ஆறும் நாளில், மனம் அடங்கிற்று. ஏழாம் நாள், இவர் நாடிய உபதேசம் கிடைத்தது. அதன்படி சிவயோகத்தில் அமர்ந்திருந்தார். முப்பத்தைந்தாம் நாள் முருகனுணைபின்படி வெளியே வந்தார். இந்த அரிய அநு பவங்கள் யாவும் சுவாமிகள் பாடல்களிலேயே விளக்கமாகத் தரப்பட்டுள்ளன.

இச்சிவயோகியார், பாம்பனுக்குத் திரும்பி வந்து மௌன நிலையில் இருந்தார். பல பாடல்களை அருளிச் செய்தார். 1895-இல் இல்லற வாழ்க்கையிலிருந்து விலகிவிட்டார். வாணி பத்தில் ஈட்டிய பெருஞ் செல்வப் பற்றையும், மனைவி மக்கட் பற்றையும் துறந்துவிட்டார். தாம் வாழ்ந்த பாம்பன் பகுதியை யும் விட்டகன்றுர். பின்பு தாம் உயிருடன் இருந்த வரையில், அப்பகுதியின் எல்லையில் கால் வைக்கவில்லை. தமது மனைவி யாரும் அவ்வெல்லையைத் தாண்டி வெளியே வரலாகாது என்று விதித்தார். அன்னைக்கு ஆறுதல் கூறிவிட்டு, அப்பழம்பதியை நீத்துப் புறப்பட்டுவிட்டார்.

பின்னர், முருகன் திருவருள் தூண்டுதலால், இவர் மதுரை முதலிய சிவதலங்கட்குத் தனியாக யாத்திரை செய்துவிட்டு, முதன் முறையாகச் சென்னைக்குப் போக ரயிலிற் புறப்பட்டார். அன்றிரவே, சென்னை வைத்தியநாத முதலி தெரு, 41-ஆம் எண்ணுள்ள இல்லத்தில் வசித்துவந்த முருகபக்தி மிக்க மூதாட்டியார் ஒருவருக்கு இத் தபோதனர் வருகை கனவில் அறிவிக்கப் பட்டது. மறுநாள் காலை சுவாமிகள் எழும்பூர் ரயில் நிலயத்தில் வந்திறங்கியதும், ஒரு துறவி இவரைச் சந்தித்துப் பேசித் தம்முடன் அழைத்துக் கொண்டுபோய், மேற்குறித்த அம்மையார் இல்லத்தில் சேர்த்ததும், மறைந்துவிட்டார். அம்மையார் தனது கனவில் தோன்றிய தவசி இவரே என்று தெரிந்து கொண்டு, சுவாமிகளைப் பக்தியுடன் பணிந்து வரவேற்று அவர்களைத் தம் இல்லத்து மேன்மாடியில் தங்க வைத்தார்; சுவாமிகளது கடுந் துறவு நிலை, உணவு நியமம் இவைகளைத் தெரிந்து கொண்டு, அதற்கு ஏற்ற முறையில் பணிவிடை செய்துவந்தார். சுவாமிகள் அந்த மூதாட்டியார்க்கும் உபதேசம் செய்தருளினார்கள்.

1896-இல் சுவாமிகள் மீண்டும் தலயாத்திரையாகப் புறப்பட்டுச் சிதம்பரத்தை யடுத்த குயவன்பேட்டையில், திரு. இராஜா முத்துக்கிருஷ்ண நாயுடுவின் உபசரிப்பைப் பெற்று மௌன நிலையில் இருந்தார்கள். அதுகாலை, பரிபூரணானந்த போதம், தகராலய ரகசியம் என்னும் அரும்பொருள் செறிந்த இரு பெரு நூல்களை இயற்றினார்கள். தகராலய ரகசியத்தில் முருகப் பெருமான் தமக்கு ஒரு சொல்லால் உணர்த்தியருளிய உபதேசப் பொருளை விரிவாக விளக்கியுள்ளார்கள்.

பின்பு சுவாமிகள் இவ்வூரினின்றும் புறப்பட்டுக் குடந்தை, சுவாமிமலை முதலிய தலங்கட்குச் சென்று வழிபட்டு, மீண்டும் சிதம்பரத்தையடுத்துள்ள பேட்டையில் தங்கித் திருப்பா என்னும் நூலைத் தொடங்கி இயற்றிவந்தார்கள். இந் நூலில்,

“சத்தியமே உரை என்றருள் சாரும்
புத்தி உரைத்து மறைந்து புலங்கூர்
நித்திய அன்பினில் நிறீஇய பின்,என்
அத்த எனக்கய லாவதும் என்னே”

என்னும் மிக அரிய திருச்செய்யுள் அமைந்துள்ளது. அத் திருவாணையின்படியே சுவாமிகள் தமது தவ வாழ்க்கையை நடத்திவந்தார்கள். "துறவு நடையும் கறையாம் பொய்யில்" என்று தமது ஞான வாக்கியம் என்னும் நூலிலும் குறித்துள் ளார்கள்.

இத் தபோதனர் வாழ்க்கையில் சீவ கருணைப் பண்பும் அமைந்திருந்ததற்குச் சான்றுக ஒரு நிகழ்ச்சியைக் குறிக்கலாம்: திருநெல்வேலியைச் சார்ந்த சிக்க நரசையன் கிராமத்தில் ஓர் அன்பர் வீட்டில் இவர் தங்கியிருந்தபோது, ஒரு பகலில் ஒரு முட்டைப்பூச்சி வெளிவந்து விரைந்து சென்றது. இவர் அவ் வீட்டுச் சிறுவனை நோக்கி, அதனைப் பிடித்து வெளியிற் கொண்டுபோய் விடுமாறு பணித்தார். அவன் அதனை நசுக்கிக் கொன்று விட்டான். இதனைக் கண்டதும், இவர் மனந் துடித் தது. அச் சிறுவனைக் கண்டித்தார். "யான் உணவு கொள்ள மாட்டேன். நீ போ" என்று பணித்துவிட்டு, வருத்தத்தோடிருந் தார். வீட்டிலுள்ளோர் யாவரும் இவரைக் கண்டு வணங்கி, சிறுவன் செய்த குற்றத்தை மன்னித்து, உணவு கொள்ள வர வேண்டும் என்று வேண்டினர். "இழவு ஏற்பட்டுள்ளது. இப் பொழுது உணவு உட்கொள்ளல் கூடாது. நாளைக்குக் கூடும்" என்று கூறிப் பால் மட்டும் அன்று மாலை அருந்தி, மறுநாள் உச்சிப் போதில் உணவு அருந்தினர். "எவ்வுயிரும் என்னுயிர் போல் எண்ணி இரங்கவும் நின்தெய்வ அருட்கருணை செய்யாய் பராபரமே" என்ற தாயுமானுர் வேண்டுகை அன்பர்கள் பலர் நினைவிற்கு வரலாம்.

பின்பு சுவாமிகள் சிதம்பரத்திற்குத் திரும்பி, முருகன் திருவாணையின்படி மீண்டும் சென்னையை அடைந்தார்கள். திருவொற்றியூர், திருமயிலை, திருப்போரூர், திருத்தணிகை முதலிய தலங்கட்குப் பன்முறை சென்று வழிபட்டு வந்தார்கள்.

இவர்கள் 1902-இல் காசி யாத்திரை செய்தார்கள். ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் மடத்தில் தங்கியிருந்தபோது, ஆங் கிருந்த காஷாயதாரண வயோதிகர் ஒருவர், இரண்டு புதிய காஷாய வஸ்திரங்களைக் கொண்டுவந்து சுவாமிகட்கு அணி வித்து, இது திருவருள் தூண்டுதலால் நிகழ்ந்தது என்று தெரி

வித்தார். அன்றுமுதல், நம் சுவாமிகள் காஷாய உடை தரித்து வரலானுர். இச் சம்பவம் சுவாமிகள் பாடிய காசி யாத்திரை என்னும் நூலில் குறிக்கப்பட்டுள்ளது. இவர் சென்னைக்குத் திரும்பிய பின், மேலும் சில அன்பர்கள் சீடராயினர். சுவாமிகள் நூற்றெட்டு உபநிடதங்களையும் நுனித்து ஆராய்ந்து, சுத்தாத்வைதநிர்ணயம் என்னும் அரிய நூலையும் அருளிச் செய்தார்கள். பத்துப் பிரபந்தம் என்னும் பெயரில் மிறைக் கவிகளையும் சித்திரக் கவிகளையும் இயற்றினுர்கள்.

சுவாமிகட்கு விதேகமுத்தியில் வேட்கை முறுகி வளர்ந்தது. பிறர்க்குத் தெரிவிக்காமல், ஒருநாள் இவர்கள் தனியாகச் சென்னையை விட்டுக் கால்நடையாகத் திருவொற்றியூரைக் கடந்து, உணவு ஏதும் தேடாமல் திருப்பாலைவனஞ் சென்று, களைப்புடன் படுத்திருந்தார்கள். ஓரன்பர் இவர்க்கு ஏற்பன செய்து, ஆண்டார் குப்பம் வழியாகத் திருவொற்றியூரிற் சேர்ப்பித்தார். சென்னை அன்பர்கள் சிலர் சுவாமிகளைக் கண்டதும் பரிவுடன் சென்னைக்கு அழைத்துக் கொண்டு வந்தனர். முன்பு தங்கியிருந்த மாடியில்லத்தில் சேர்த்தனர். அக்காலத்தில்தான் சுவாமிகள் குமரவேள் பதிற்றுப் பத்தந்தாதி என்னும் மிக உருக்கமான நூலைப் பாடினுர்கள். அதிலிருந்து, அவர்கள் மனநிலையை உணர்தற்குத் துணையாக ஒரு பாடலைமட்டும் இங்கே தரலாம்:

"நல்ல பொன்மயி லூரு மென்னெரு நாத னே!இனி வாதநூல்
வல்ல னென்று மதிக்கு மாறுரை மல்கு சங்கம் விரும்பிலேன்.
இல்ல மேய சிறந்த மானவர் என்பர் நேயமு நம்பிலேன்.
அல்லல் தீர்மடம் ஆலயங்கள் அமைத்து வாழவும் எண்ணிலேன்"

வடசொல் புகாத தமிழ்நூல் இல்லையே என்று சிலர் குறை தெரிவிக்கவும், 'இரு மொழிக்கும் கண்ணுதலார் முதற்குரவர்', இரு மொழிகளும் இரு கண்கள் போன்றவை என்ற கருத்தையுடைய இச் சுவாமிகள் சேந்தன் செந்தமிழ் என்னும் தனித் தமிழ் நூலைப் பாடி, அரிய பல ஆராய்ச்சிக் குறிப்புரைகளும் வரைந்தார்கள்.

சுவாமிகள் மீண்டும் பின்னத்தூர்க்குச் சென்று நிட்டை கூடியிருந்தார்கள். அக்காலத்தில், அங்கு வாழ்ந்துவந்த

வைதிக சமயத்தவருள் ஒரு பிரிவினர் மற்ெருரு பிரிவினரை நிந்தித்து வாதத்திற்கு அழைத்தனர். இவ்வாறு அழைக்கப் பட்டவர்கள் சுவாமிகளிடம் வந்து, தம் குறையை நீக்கும்படி முறையிட்டனர். "வாதமும் சமய பேதமும் கடந்த மனோலய இன்ப சாகர" நாட்டமுடைய சுவாமிகட்கு வாதங்களில் ஈடுபட மனமில்லை; தம்மை வந்தடைந்த அன்பர் மனக்கவலையையும் புறக் கணிக்க முடியவில்லை. முருகப்பெருமான் திருவுளக் குறிப்பை நாடி அறிந்தார்கள். தாக்க வந்தவர் கட்சியை நூலறிவும் நுண்ணறிவும் கொண்டு நன்கு ஆராய்ந்து இரண்டு நூல்கள் எழுதினார்கள். வாதசபை கூடவில்லை. சுவாமிகட்கு ஏற்பட்ட கடமை நிறைவேறிவிட்டது. விஞ்ஞான வளர்ச்சியின் விளை வாக, மக்கள் வாழ்க்கையில் பல்வேறு வசதிகளும் கெடுதிகளும் பெருகிவரும் இந்த நூற்றாண்டில், எல்லா நாட்டினரும் எல்லா மதத்தினரும், சமரச சன்மார்க்க நாட்ட முடையவர்களாய், உலகம் எல்லாம் ஒரு பெருங் குடும்பம் என்று கொண்டு, அறி வுடன் அன்பும் அருளும் தொண்டும் செறிந்த சகோதரவாழ்க்கை வாழ வேண்டும். நம் நாட்டின் ஞான அநுபூதிமான்கள் வாழ்ந்து காட்டிய நெறியும் இதுவே. "ஒன்றுபட்டாலுண்டு வாழ்வே; நம்மில் ஒற்றுமை நீங்கில் அனைவர்க்கும் தாழ்வே" என்ற தேசிய மகாகவி பாரதி வாக்கின் பரந்தநோக்கு எல்லா நாட்டவர் உள்ளங்களிலும் பதிந்து நன்மையே விளைப்பதாக!

சுவாமிகள் சென்னைக்குத் திரும்பியபின், திருவாளர் சின்ன சாமி சோதிடர் முதலிய சிலர் சீடராயினர். திருவல்லிக்கேணியில் வாழ்ந்துவந்த இந்தச் சோதிட அன்பர் இல்லத்தில் பல ஆண்டுகள் சாந்தியுடன் தங்கியிருந்தார்கள்.

தமிழ்ச் சான்றோர் திரு. வி. கல்யாணசுந்தர முதலியாரின் வேண்டுகோளுக்கிணங்கி, சுவாமிகள் சென்னை இராயப் பேட்டைக்கு வந்து ஸ்ரீ பாலசுப்பிரமணிய பக்த ஜன சபைக்கு 31-1-1915-இல் கால்கோள் செய்தருளினார்கள். சில ஆண்டுகள் கழித்து, இச்சபையில் சைவ மகிமை என்னும் பொருள்பற்றி ஓர் அரிய சொற்பொழிவும் ஆற்றினார்கள்.

தொடர்ந்து பல அரிய செய்யுள் நூல்களையும், வசன நூல் களையும் சுவாமிகள் இயற்றி வந்தார்கள். தாம் பாடிய பதிகங்

களின் இறுதிப் பாட்டில் அருணகிரிநாதரைக் குறிப்பிடும் ஒரு நியமமும் சுவாமிகள் வைத்துக்கொண்டிருந்தார்கள். தமிழகத்தில் அருணகிரிநாதருக்குக் குருபூஜைகள் முறையாகக் கொண்டாடப்படாதிருந்ததைச் சுவாமிகள் கவனித்து, உத்தராயணத்தில், ஆருவது பௌர்ணமி நாளில் தவருது அதை நடத்தி வரும்படி தம் சீடர்கட்குக் கட்டளையிட்டார்கள். முதன் முதல் சென்னை புதுப்பாக்கம், ஸ்ரீ சிவசுப்பிரமணிய பக்தஜன சபையில், கி. பி. 1918-இல், அது சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. இவ்விழா ஆண்டுதோறும் தொடர்ந்து நிகழ்ந்து வருகிறது. வேறு பல ஊர்களிலும் கொண்டாடப்பெற்று வருகிறது.

சுவாமிகள் பாடல்களையும், சிலவற்றிற்கு அவர்களியற்றிய திட்பம் போன்ற அரிய உரைகளையும், சிவஞான தீபம், சுத்தாத்வைத நிர்ணயம் போன்ற சிறந்த வசன நூல்களையும் படித்தவர்கள் சுவாமிகளிடம் பெருமதிப்பும் பக்தியும் உடையராயினர். பலர் சீடர்களாயினர். இவர்கட்கும், பிற்காலத்தில் அடியவராகுபவர்-கட்கும் பயன்படும் கருத்துடன் சுவாமிகள், மஹா தேஜோமண்டல சபை என்னும் ஓர் தாபனத்தை நிறுவினுர்கள். அதன் இயல்பை அவர்களே பின்வருமாறு விளக்கியுள்ளார்கள்:

“அளவிலாத் தேஜோ மண்டல இறைவனெருவனையே ஆசாரத்தோடும், அன்போடும் வழிபடுஉம் அடியார் அனைவரும், எத்தேசத்தாராய், எக்குலத்தாரா யிருப்பினும், அவர் ‘மஹா தேஜோ மண்டலத்தார்’ ஆவராகலின். யாமவரை யிப்பெயர் தரித்து நிற்கும் கடன்மைக்குட்படுத்தியுள்ளேம்”. [திருப்பா – கடவுள் வணக்கத்து 3–ன் உரை] இங்கு “இறைவனையே” என்பது குமார பகவான் ஒருவனையே குறிக்கும்.

செக்கர்வேள் செம்மாப்பு என்னும் நூலில் உள்ள முழுமுதல் இலக்கண அதிகாரமும், செக்கர்வேளிறுமாப்பு என்னும் நூலின் விடுபேற்றதிகாரமும் தமது முடிவான சித்தாந்தம் என்று சுவாமிகள் எழுதியுள்ளார்கள்.

கனவிலும், நனவிலும், நிஷ்டையிலும் முருகப்பெருமானைத் தரிசித்த இப்பெரியார்க்கு, பெரிதும் அஞ்சத்தக்கதோர் சம்பவம் 27–12–1923-இல் நேர்ந்தது. அதையடுத்து ஆண்டவனருளும்

கிடைத்தது. சுவாமிகள் அத்தேதியில் சென்னை தம்புசெட்டி தெருவில் நடந்து சென்றுகொண்டிருந்தபோது, ஒரு குதிரை வண்டியின் சக்கரம் ஒன்று இவர்களின் இடது கணைக்காலில் ஏறிக் காலை முறித்துவிட்டது. அதைக் கண்டு திடுக்கிட்ட அன்பர்கள், அரசாங்கத்துப் பெரிய வைத்தியசாலையில் (General Hospital) சுவாமிகளைக் கொண்டுபோய்ச் சேர்த்தனர். எலும்பின் முறிவு மிக அபாயகரமானதென்றும் உப்பு, புளி நீக்கியவரும் எழுபது வயதானவருமான இப்பெரியவருக்கு எலும்பு கூடுவது சந்தேகமே என்று மருத்துவர்களும் கருதினர். சீடர் சின்னசாமி சோதிடர்மட்டும் முழு நம்பிக்கையுடன், சுவாமிகள் பாடிய சண்முக கவசத்தை நாள்தோறும் நியமப்படி ஓதிப் பிரார்த்தித்து வந்தார். எலும்பு கூடிவிடும் என்ற நம்பிக்கை ஏற்பட்டது.

பதினோராம் நாளிரவு, இரண்டு மயில்கள், மேல்திசையிலிருந்து நடனம் பண்ணிக்கொண்டு வருவதைச் சுவாமிகள் கண்டு, படுக்கையிலிருந்தபடியே கைகூப்பி வணங்கினார்கள். அவற்றுள் பெரியதொன்று தன் கலாபத்தை மண்டலாகாரமாக்கி ஆகாயமெல்லாம் ஆவரணித்துக் காட்சியளித்தது. பின்பு ஓர் நாளிரவு, சுவாமிகள் தமது படுக்கையிலே தம்மொடு ஒரு செவ்விய குழந்தை படுத்திருப்பதைக் கண்டு மகிழ்ந்தார்கள். குழந்தை மறைந்துவிட்டது. முருகன் திருநாமம் ஒன்றைச் சுவாமிகள் பன்முறை உச்சரித்தார்கள்

"பதினைந்து நாட்களில் இரணம் ஆறிவிடும்; அதுபரியந்தம் இவ் வைத்தியசாலையை விட்டு யாண்டும் போக வேண்டாம்" என்ற திருவாக்கும் வெளிப்பட்டது. அவ்வாறே எலும்புகள் கூடிவிட்டன.

இம் மயூரவாகன சேவனமே மார்கழி மாதத்தில் பூர்வ பக்ஷத்துப் பிரதமைதோறும், ஞான பூசையைக் கொண்ட விழாவாகக் கொண்டாடப்பட்டு வருகிறது. சுவாமிகளே, தாம் இயற்றிய பாரகாவியமாகிய ஸ்ரீமத் குமாரசுவாமியத்தில் 'அசோகசாலவாசம்' என்னும் பகுதியில் இச் சம்பவங்களைப் பாடியுள்ளார்கள். அவ்விழா தொடர்ந்து நடைபெற்றுவருவதற்கு வேண்டிய ஏற்பாடுகளையும் செய்துவைத்தார்கள். வட சென்னையில் திருப்

பள்ளித் தெருவிலும், திருவான்மியூரில் சுவாமிகள் சமாதியிலும் இவ்விழா தவருது நிகழ்ந்து வருகிறது.

சுவாமிகள் 17–7–1926-இல் ஓர் உயில் சாசனம் எழுதி வைத்தார்கள். 19–12–1927-இல் அதற்கு அநுபந்தமான சாசன மொன்றைப் பிறப்பித்தார்கள். 21–12–1927-இல் இது பதிவு செய்யப்பட்டது.

1928-ஆம் ஆண்டு மே மாதத்தில் கோடைக்கால வெப்பந் தாங்காமல் பெங்களூர்க்குச் சுவாமிகள் சென்று தங்கினுர்கள். அங்கே சில அபூர்வமான தோற்றங்கள் கிடைத்தன. ஜுலை மாதம் சென்னைக்குத் திரும்பிவிட்டார்கள். அப்பால் உடல்நலம் குறைவதாயிற்று. அன்னத்தை அறவே நீத்தார்கள். ஆயினும் கந்த மகா சஷ்டி விரதத்தையும், மயூரவாகன சேவன விழாவை யும், மாசி சிவராத்திரி பூஜையையும் மிகச் சிறப்பாகவே கொண்டாடினுர்கள்.

பின்னர் வைகாசி, 2உ யன்று, தமது பிரிய சீடராகிய சின்னசாமி சோதிடரை வருவித்து, தம் சமாதிக்காகத் திரு வான்மியூரில் நிலமொன்றை விரைவிற் பார்த்து வாங்குமாறு பணித்தார்கள். பிறகு ஒரு நாள் இரவு தம் அருகிலிருந்த சீடர்கள் இருவரை நோக்கி, “மயூரவாகன சேவன விழாவை விடாது நிகழ்த்தி வாருங்கள். என்னுடைய உடலைத் திருவான்மி யூரிலே சேர்த்துவிடுங்கள்” என்ருர்கள்.*

“30—5—1929 காலை 7–15 மணிக்கு யாவரும் அறியவே சுவாமிகள் சுவாசத்தை உள்ளுக்கிழுத்தார்கள். அது வெளி வராமல் உந்தியிலேயே எழும்பி அடங்குவதாயிற்று. சுவாமிகள் அடங்கியது அந்நிலையிலேயாம். அது நிகழ்ந்தது, சுக்கில வருஷம் வைகாசி மீ அமரபக்ஷத்துச் சஷ்டி திதியும், அவிட்ட நக்ஷத்திரமும் கூடிய சுப வேளையில்.”

“மறுநாள் 31—5—1929, வெள்ளிக்கிழமை காலை 8–15 மணிக்குத் திருவான்மியூர் சேர்ந்து, சமாதி நிலயத்தில் அமர்ந் தருளினுர்கள்.

---

* அப்பர் சம்பந்தர் தேவாரப் பாடல்களைப் பெற்றுள்ள இத்தலத்தின் மீதும், சுவாமிகள் ஒரு பதிகம் பாடியுள்ளார்கள்.

அச்சமாதிக் கோயிலில் அவருடைய இறைவனுகிய முருகப் பெருமானுக்கும், அவருக்கும் நித்திய வழிபாடு நடைபெற்று வருகிறது. மேற்குறித்த மூன்று விசேட நாட்களிலும், கிருத்திகை, பௌர்ணமி நாட்களிலும் விசேட பூஜைகள் நிகழ்ந்து வருகின்றன. மயூரவாகன சேவன விழா எம்முறையில் நிகழ வேண்டும் என்பதைச் சுவாமிகள் விளக்கமாக எழுதி வைத்துள்ளார்கள்.

இச்சமாதிக் கோயிலும், அதற்கெதிரில் திரு. சி. மாசிலாமணி முதலியார் கட்டித் தந்த அறச்சாலையும், இவற்றைச் சார்ந்த நிலம் முதலிய சொத்துக்களும் மஹாதேஜோ மண்டல சபையின் பொறுப்பில் உள்ளன. நித்திய பூஜை விழாக்கள் முதலியவற்றை இச்சபை நடத்தி வருகின்றது.

அறிவிலும் பண்பிலும் சிறந்த பெரியோர் பலர் சுவாமிகளுடைய அருமைச் சரித்திரத்தையும், இவர் அருளியுள்ள நூல்களையும் கவனித்தபோது, இவர் மேலுலகிலிருந்து அனுப்பப்பட்ட ஒரு மகாத்துமா என்று மதிப்பர். சுவாமிகள் பாடியுள்ள 6660 செய்யுட்கள் அவர்களாலேயே ஆறு காண்டங்களாக வகுக்கப்பட்டுள்ளன. சன்முக கவசமும் பஞ்சாமிர்த வண்ணமும் தீமைகளை நீக்கும் ஆற்றல்மிக்க பாராயண நூல்கள் என்று பலரால் போற்றப்பட்டு வருகின்றன. தம் சீடர்களுக்குச் சிறப்பு வகையில் வற்புறுத்தி உணர்த்த விரும்பிய நுண்ணிய கடமைகள் பல, செவியறிவு நூல் என்னும் சிறு வடிவப் பெருநூலில் காணவுள்ளன. அறிவாராய்ச்சிக்குப் போதிய இடந்தரும் பண்பு சுவாமிகள் பண்பு. இதனை அவர்கள் நூல்கள் பலவற்றிற் காணலாம். காவிய நயங்களை 'ஸ்ரீமத் குமாரசுவாமி'யத்தில் காணலாம்.

சுவாமிகள் மீது திரு. வி. க. முதலிய அறிஞர்கள் சிலர் தோத்திரங்கள் பாடியுள்ளனர்.

கடவுளை நேரில் தாம் கண்டு, பிறரும் கண்டு உய்ய வேண்டும் என்ற கருணையுள்ளம் படைத்த இப்பெருந் தபோதனர்-அநுபவ ஞானி-புலவர்-திருநாமம் நம் பாரத நாட்டில் என்றும் நிலைபெற்றிருக்கும் மாண்பை யுடையது. மக்களை மேன்நிலைக்குச் செலுத்தும் ஆற்றல் படைத்தது.

"இருமொழியின் கருத்துணர்ந்திங் கெவருளத்தும்
ஞானவிளக் கேற்றுவானை,
ஒருமொழியைச் சிவற்குரைத்தோன் உயரருள்பெற்று
அருணகிரி யெனவுள்ளானைப்
பெருமொழிநூல் உரைகள்பல அருள்குமர
குருதாசப் பேரினானைத்
திருமொழிஎற்(கு) உரைத்தானைச் சிறியேனை
ஆள்வானைச் சிந்தைசெய்வாம்."

குமரகுருதாச குருப்யோ நம:

Gunavathi Bai.

" திவான் "

"Those who came to scorn, remained yet to Pray"

Madhava Singh was a Rajput vassal belonging to Agnikulam. His wife was Gunabai alias Gunavathi and both of them were God-fearing pious people with intense love in the well-being and prosperity of their subjects.

Gunavathi gave birth to two sons and two servant maids were appointed to look after those children. One of the maids so appointed was always enchanting the names of God and Gunavathi on noticing it was very much moved and was struck with wonder at her deep meditation even in the midst of her multifarious duties. The more she began to think about the greater became her ardent desire for prayer and deep meditation which automatically began to take deep root in her mind. Well placed in life with all luxuries at her command as Gunavathi was, she became more and more absorbed in meditation and was entirely detached from worldly affairs and the pious devotees paying homage to her, increased also day by day.

It was a mystery for the Duke to note the change in the life of his wife and he even thought that she had gone mad. One day he made bold to accost her as to why she neglected her own conveniences, disliked company, shunted people and loved isolation, anxious to know the reason for her sudden change.

Source: "Sri Maha Baktavijayam (in Tamil) Published by the Little Flower Company (Lifco) Madras-17"

The answer was that she had peace of mind and happiness in the thought of the Lord and revelled in the meditation of His benign grace surrendering her mind at His Holy Feet and that she had nothing to long for, besides.

The Duke got enraged and rebuked her saying "Have you developed such a sense of " virakti " (விரக்தி) and " vairakya " (வைராக்யம்) as to neglect your babies and me, your husband? Should there not be a limit for every act and for one of your age it is too much to assume the role of an ascetic and it is meaningless. Gunavathi closed her eyes trembling, praying to God and Lord Krishna appeared before her and assured her that she need not have any fear and disappeared. The Duke ordered the servants of the Harem not to allow any visitor to her anymore without his permission.

But Gunavathi's devotion only intensified-her pujas and meditation and the visits of her devotees growing more and more intense by leaps and bounds. The Duke's anger knew no bounds and he commanded his servants to murder Gunavathi and he left for forest for hunting. In obedience to the command given four murderers armed with swords and entered the Harem and Lo! there they saw her entirely absorbed in the pomp and splendour of puja-the ringing of the bells, sweet fragrance of flowers, burning of incense all round-which kept them dumb and spell-bound. With the culmination of the puja and the lighting up of Harathi; a lightning dazzled the eyes of all and a fierce leopard emerged out of the idol with a roar, dashed against all articles throwing them pellmell, killed the four murderers in the panic thus created

and vanished. The people on hearing the thunderlike roaring of the leopard came running to the Harem and were astonished to see the four murderers with swords lying down dead on the floor. Gunavathi came out calm and collected, after finishing puja and learnt what had happened and the purpose for which the Lord emerged as a roaring leopard. The wonderful news spread like wild fire all around and even reached the ears of the Duke in the forest. He shuddered with fear, communicated his remorse to her and begged pardon of his wife through a messenger and requested her to continue her pujas as ever before.

The Duke while returning home from the forest after a few days was crossing in a boat a forest stream in spate. When his boat reached the centre of the stream a fierce cyclone brokeout and the boat was thrown up and down with no control and was about to be drowned. The Duke in this sad plight lost all hope, thought of his wife to save him from the impending danger. To his great amazement and admiration the storm subsided within a twinkling of an eye. There was perfect calm all over and the boat reached the bank safely. The Duke rushed home and entreated his wife to forgive him for all the evils he did unwillingly and his worthy wife only smiled with all magnanimity saying that he had not done anything to be pardoned.

நால்வர் திருவவதாரச் சிறப்பு

சொற்கோவும் தோணிபுரத் தோன்றலுமென் சுந்தரனும்
சிற்கோல வாதவூர்த் தேசிகனும் — முற்கோலி
வந்திலரேல் நீறெங்கே? மாமறைநூல் தானெங்கே?
எந்தைபிரான் ஐந்தெழுத் தெங்கே?

ஓடும் உயிரும் தேடும் இறைவனும்

திருமதி. அனந்தலக்ஷ்மி சுப்பிரமணியம் அவர்கள் M. A.,
5, Vinayaga Mudali St,
சென்னை – 1.

"பெய்யுமா முகில் வண்ணுல் உன்றன்
பேச்சும் செய்கையும் எங்களை
மையல் ஏற்றி மயக்க உன்முகம்
மாய மந்திரந்தான் கொலோ?
நொய்யர் பிள்ளைகள் என்பதற்கு
உன்னை நாங்கள் உரைக்கிலோம்
செய்ய தாமரைக் கண்ணினுய்; எங்கள்
சிற்றில் வந்து சிதையேலே."

என்று ஆயச் சிறுமிகள் கண்ணனைக் கெஞ்சுவதாக நாச்சியார் பாடியருளினுர். சிற்றில் அழிந்து விடுமோ என்ற கவலை ஆயர்களுடையது மட்டுமல்ல; நம்முடைய கவலையும்தான். சிற்றில் அதாவது நம்முடைய வாழ்க்கை என்னும் சிறிய மணல் வீடு அழிந்து விடுமோ என்ற கவலை எல்லோர்க்கும் தானே தோன்றுகிறது? பலருக்கு மரண பயத்தின் ஒரு பகுதியாக இந்தக் கவலை முளைக்கிறது. வேறுசிலர்க்கு-மிகக் குறைந்த சிலர்க்கு இந்தக் கவலை வேறு வகையில் அமைகிறது. அவர்கள் மெய்ப்பொருள் தேடிச் செல்லும் மெஞ்ஞானியர்; வாழ்க்கையின் அடித்தளமாய் நிற்கும் கடவுள் என்னும் உறுதியின் அரவணைப்பை நாடிச் செல்லும் பேரறிவாளர். ஆனுல் அந்த உறுதி கிட்டும் போது சரேலெனக் கையைப் பின் இழுத்துக்கொண்டு இவ்வுலகைப் பிரிய மனமில்லாமல் திரும்பிப் பார்க்கிருர்கள். இது மெஞ்ஞானப் பாதையில் செல்பவர்க்கு ஏற்படும் நிலை. இந்த நிலை மணிவாசகர்க்கும் ஏற்பட்டது. இந்த அநுபவத்தின் பலனுக எழுந்தது திருவாசகம்.

இவ்வுலகில் வாழும் உயிர்கள் யாவும் தோன்றுதற்கு முன்பே இறைவனின் கழல் போற்றும் மாண்பின. ஆனுல் இவ்

வுலகில் தோன்றியவுடனேயே அந்நிலையை அறவே மறந்து விடுகின்றன. ஆகையால் தான் அவ்வுயிர்களுக்குப் பிறவித் துன்பம் புலனுவதில்லை. அவைகள் வாழ்ந்து மடியும் காலத்தில் உலகியல் அறிவும் பொருட்பற்றும் மிகுந்து "இறப்பு" என்னும் சொல் கேட்கவும் அஞ்சுகின்றன. இவ்வுலகம் பெரியது; நீடு நிற்பது என்று எண்ணி ஏமாந்து நிற்கின்றன. ஆனுல் அதன் பலன்? வினைகளின் பிணைப்பும் பிறவித் துன்பமும்தான். ஆனுல் இறைவன் அப்படியெல்லாம் உயிர்கள் உய்யாமல் மடிய விடுவதில்லை; அவன் தான் இருப்பதைக் காட்டிக் கொண்டே இருக்கிருன், மணிவாசகரைக் கழல் காட்டி ஆட்கொண்டான்; சுந்தரரைத் தடுத்தாட் கொண்டான்; அன்புடை அவ்வுயிர்க் கெல்லாம் ஊழியனுக மாறிவிடுகிருன்; தேவர்க்குயர்ந்தோராய் மாற்றி விடுகிருன்.

இறைவன் தன்னை மறந்து உறங்கும் உயிர்களைத் தட்டி எழுப்புகிருன்; அவைகள் எப்படியெல்லாம் நடந்து கொண்டாலும் அவற்றைத் தமக்குகந்ததாக மாற்றிக் கொண்டு விடுகிருன். இந்த உலகில், ஆணவத்தில் அழுந்தி நிற்கும் அவ்வுயிர்களின் மனதில் சூழ்ந்திருக்கும் "அகங்காரம்" என்னும் இருளைக் கிழித்துக் கொண்டு தான் ஒளிமயமாக மாறிநிற்கின்ருன். அப்பொழுது பாழ் இருளில் வாழும் உயிர் ஒளியின் பெருமையை உணர்ந்து அந்த ஒளியிலேயே வாழ விரும்புகிறது. மெய்யறிவு கைவரப்பட்ட உயிர்கள் புறவாழ்க்கையில் நாட்டம் செல்லாது இறைவன் பால் வாழவேண்டும் என்று பெரு விருப்புக் கொண்டு விடுகின்றன.

இத்தகைய உயிரின் அனுபவத்தைத்தான் மணிவாசகர் திருவாசகத்தில் காட்டுகின்ருர்.

தண்மலர் இட்டு நாத்தழும்பேறப் பாடாது வறிதே கழித்து நின்ற உயிரை இறைவன் தடுத்தாட்கொண்டான்; இனி அவ்வுயிர் புரந்தரன் மால் அயன் வாழ்வு கிட்டினும் விரும்பாது; எத்தனையோ தேவர்களும் முனிவர்களும் காத்திருக்கத் தன்னை வந்தாண்ட அதிசயத்தை எண்ணி எண்ணி உருகுகிருர் மணிவாசகர். இனி அந்த உயிர் செய்ய வேண்டியதெல்லாம் அவன்

பால் நெஞ்சு நெக்கு நெக்கு உருகி, அவன் அருளாலே அவன் தாள் வணங்கி, பற்றி அன்பு செய்ய வேண்டியதுதான். அவன் தாள் பற்ற அவன் அருள் புரிந்துவிட்டான்; இனி அன்பு புரிதல் தான் வேண்டும்; அந்த அன்பினையும் அவன்தானே தரவேண்டும்? ஆட்டுவிப்பவனும் அவன் என்றால் ஆட்டுபவனும் அவன் தானே! அதனால்தான் மணிவாசகர் கேட்கிறார்; "நின்தன்வார் கழற்கு அன்பு எனக்கு நிரந்தரமாய் அருளாய்" என்று. "எதற்காக?" "நின்னை ஏத்த முழுவதுமே" என்பார்.

இப்படியெல்லாம் ஒளிபெற்ற உயிர்கள், செய்யாதவற்றையெல்லாம் எண்ணி எண்ணி மாயும் உயிர்கள், இனியாவது உய்ய வேண்டும் என்று பெரு விருப்பம் கொள்கின்றன. தேவர்கள் யாவரும் தங்கள் பதவியின் பொருட்டும் நீடிய வாழ்விற்காகவும் இறைவனை வாழ்த்துகின்றார்கள்; ஆனால் நம் வாதவூரார் காட்டும் உயிர்கள் நீடிய பிறப்பிற்காகவும் உயர் பதவிக்காகவும் ஏங்கி நிற்கவில்லை. அவை விரும்புவதெல்லாம் தொல்லை இரும்பிறவி இத்தோடு அழிய வேண்டும் என்பதுதான். இதனைத்தான் திருவாசகத்தில்,

"பாழ்த்த பிறவி அறுத்திடுவான், யானுமுன்னைப் பரவுவேன்"

என்பார்.

இவ்வாறு தம்முடைய சிறுமையை எண்ணி எண்ணி வாடும் உயிர்கட்கு இறைவனின் பெருமை மலைபோல் தோன்றுகிறது. வானவர் யாவரும் தங்கள் பதவி பொருட்டும் நீடிய வாழ்விற்காகவும் அவனை வாழ்த்துகின்றனர். முனிவர்கள் எவ்வளவோ தவம் புரிகின்றார்கள்; ஆனால் அவர்களையெல்லாம் உய்விக்க வேண்டிய இறைவனுக்கு வேறொரு பெரும் பொறுப்பு இருக்கிறது; அன்றாடம் உணவிற்கும் உடைக்கும் போராடி நிலைபேறில்லாத வாழ்க்கையில் உள்ள கவலையில் ஈடுபட்டு வருந்தும் உயிர்கள். அவ்வுயிர்கள் பொருட்டு அவன் வாழுகிறான்; அவற்றின் ஒரு துளி அன்பை மலைபோல் கருதுகிறான்; அவற்றை உய்வித்தல் தன் தலையாய கடன் எனக் கொள்கிறான்; இதன் பலனாகத் தன்னைக் குறைத்துக் கொண்டு நம்மை வந்தடைகிறான்.

இப்படிப்பட்ட உயிர்கள் யாவும் இறைவனைச் சாராது ஒழி தற்குக் காரணம் உணர்ச்சிகள்தாம். இறைவனை நாடாது நிலை யில்லாத உலக இன்பத்தை நம்பி, கனவை நினைவாகப் போற்றி அதற்கு வழியான இன்பங்களையெல்லாம் உண்மையென நம்பி மகிழ்கின்றன. ஒவ்வொரு பொருளாகத் தம் நிலையாமையைக் காட்டி மறைந்தவுடன், நீடித்த ஒரு பொருளின் மீது உயிர்க்கு நாட்டம் செல்கிறது. ஈடுபட முயல்கிறது. ஆனால் ஈடுபட முயன்றாலும் முடியாமைக்குக் காரணம் "மனம்" என்பர் மணி வாசகர்; சுந்தரரோ, "வாழ்வர் கண்டீர் நம்முளவர் வஞ்சக மனத்தீரே" என்று கூறி ஐந்து உறுப்புகள் தான் என்பர். இதன் காரணமாகத்தான் அறிவு தெளிந்தாலும் நெஞ்சம் தெளியமாட்டேன் என்று கலங்கிவிடுகிறது. இதனைத்தான் கம்பநாடனும்,

"காசடை விளங்கிய காட்சித் தாயினும்
மாசடை பேதைமை யிடைமயக்கலால்
ஆசடை நல்லுணர் வனைய தாமெனப்
பாசடை வயின்தொறும் பரந்த பண்பது" [பம்பை படலம்]

என்று தெளிந்த நீரில் அடர்ந்த செடிகள் படர்ந்து மறைப்பதை, நல்லறிவைக் கலக்கும் உணர்ச்சிகளுக்கு ஒப்பிட்டுள்ளார். எப் பொழுதும் அறிவு நல்லதையே சொல்லும், நல்லதைத்தான் காட்டும்; இதனால்தான் கீதையில் "அறிவின் தெளிவிலே எச் செய்கை புரிந்தாலும் நல்ல செய்கைதான்,அறிவு, தெளிந்த பின் தீயவை என்று ஒன்று செய்ய சாத்தியப்படாது" என்று கண்ணன் கூறுகிறான். நெஞ்சத்திற்கும் அறிவிற்கும் என்றுமே போராட்டம்; அதுவும் இடைவிடாத போராட்டம்; இந்தப் போராட்டத்தில் அறிவு வெல்லும் போது இறைவனும் வென்று விடுகின்றான். இவன் அன்பிற்காக ஏங்கி நிற்கும் உயிர்களின் உணர்ச்சிகளோடு-நெஞ்சத்தோடு போரிட்டு வெல் கிறான்; அவன் அன்பின் அடிமைகளாக உயிர்களை மாற்று கிறான். "அவனே ஒண்பொருள்" என உணரச் செய்கிறான்.

இவற்றையெல்லாம் நம்முன் வாழ்ந்து மறைந்த பெரி யோர் காட்டியுள்ளார். திருவாசகம் இந்த மாண்பைத் தான்

பறைசாற்றுகிறது. இவற்றையெல்லாம் காணும்போது ஒரு கருத்துத்தான் தெற்றென விளங்குகிறது. உடம்பொடு உயிர்க்கு உண்டான சொந்தம்-இந்த மண்ணில் அதற்கு உள்ள பிடிப்பு இவையெல்லாம் எளிதாகத் தளர்வதில்லை; ஆனால் இறைவனுடைய அருள் உயிரை மீட்டு வீடுபேறு அளிக்கிறது. ஆனால் இதற்கு முன், உயிர் உலக வாழ்வை நோக்கி ஓடுகின்றது. அதற்குள்ளே தன்னைப் புதைத்துக் கொண்டு அவன் அருட்கரத்தில் படாமல் நழுவுகிறது. ஆனால் அதற்கெல்லாம் இறைவன் இடம் தருவதில்லை; உயிரை விடாமல் தொடர்கிறான், அளவிட முடியாத அன்புடன் தொடர்கிறான். அவனைத் துறந்து எங்கும் போக முடியாது என்பதனை உயிர் உணரும்படிச் செய்கிறான். உலகில் உள்ள உயிர் எந்த வாழ்க்கையிலும் நிரந்தரமாக இருக்க முடியாமல் தோல்வி கண்டு இறைவனைத் தெரிந்து கொள்கிறது. இந்த மெய்யறிவு கைவரப் பெற்றதும் பற்றுகள் எல்லாம் அறவே மறைந்து விடுகின்றன. தன் சக்தியெல்லாம் இழந்து உடைமையெல்லாம், உரிமையெல்லாம் இழந்து வருந்தி நிற்கும் உயிரை அன்புடையவன் அணைத்துக் கொள்கிறான். எல்லாவற்றையும் இழந்து நின்ற உயிர் எல்லாவற்றையும் பெற்றாற் போல் பெரும்பேறு அடைகின்றது.

இந்தக் கருத்தைத் தெரிவிப்பதாகக்கொண்டு திருவாசகத்தைப் படித்தால், உயிர் ஏமாந்த நிலையில் கொண்ட ஏக்கத்தின் பிரதிபலிப்பைக் காணலாம். துன்பத்தின் எதிரொலியைக் கேட்கலாம். இவ்வாறு கற்றார் மனதினையும் கல்லார் உள்ளத்தையும் கரைத்துக் கண்களை நனைப்பதால் தானே இது உலகம் உய்ய ஒரு வழிகாட்டியாக உள்ளது?

பாண்டி நாட்டுத் தலங்கள் பதினான்கு

கூடல் புனவாயில் குற்றாலம் ஆப்பனூர்
ஏடகம்நெல் வேலி இராமேசம்—ஆடானை
தென்பரங்குன் றம்சுழியல் தென்திருப்புத் தூர்கானை
வன்கொடுங்குன் றம்பூ வணம்.

சுந்தர மூர்த்தி சுவாமிகளின்
அற்புதத் திருப்பதிகங்கள்
Hymns of St. Sundarar

திரு. T. B. சித்தலிங்கம் அவர்கள், M. A.,
தமிழ் விரிவுரையாளர்,
காசி இந்துப்பல்கலைக்கழகம், காசி.

Tiruttondattogai.

திருத்தொண்டத்தொகை: பண்: கொல்லிக்கௌவாணம்

திருவாரூர்

தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்
திருநீல கண்டத்துக் குயவனார்க் கடியேன்
இல்லையே என்னாத இயற்பகைக்கும் அடியேன்
இளையான்றன் குடிமாறன் அடியார்க்கும் அடியேன்
வெல்லுமா மிகவல்ல மெய்ப்பொருளுக் கடியேன்
விரிபொழில்சூழ் குன்றையார் விறன்மிண்டற் கடியேன்
அல்லிமென் முல்லையந்தார் அமர்நீதிக் கடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே. 1

Tiruvarur:

I am the slave unto the slaves of the-
Brahmins of Chidambaram.
I am the slave of Tiruneelakantar, the potter.
And slave am I to Iyarpagai, who never said 'no' to anyone, and to the slaves of Maran of
Ilayankudi.
I serve Meypporul Nayanar, who won every battle, and Viranmindar of Kunrai.
The slave of Amarnithi am I, the servant of the Lord at Arur. (Arur=Tiruvarur).

(To be continued)

உ

திருச்செந்திலாண்டவன் துணை

திருவாசக அநுபூதி உரை*

(சீகாழித் தாண்டவராயர் அவர்கள் இயற்றியது)

திருச்சிற்றம்பலம்

திருவெம்பாவை

இனி, திருவெம்பாவையான திருவருள் விநியோகம் அருளிச் செய்யப் புகுகின்றதாவன; தசசத்திகளுள் முதற்சத்தியான பராசத்தியின் அநுபூதியான திருவருள் விநியோகம் அருளிச் செய்யப் புகுகின்றதாவன:--

ஆதியு மந்தமு மில்லா வரும்பெருஞ்
சோதியை யாம்பாடக் கேட்டேயும் வாட்டடங்கண்
மாதே வளருதியோ வன்செவியோ நின்செவிதான்
மாதேவன் வார்கழல்கள் வாழ்த்திய வாழ்த்தொலிபோய்
வீதிவாய்க் கேட்டலுமே விம்மிவிம்மி மெய்ம்மறந்து
போதா ரமளியின்மே னின்றும் புரண்டிங்ஙன்
ஏதேனு மாகாள் கிடந்தா ளென்னேயென்னே
ஈதேயெந் தோழி பரிசே†லோ ரெம்பாவாய்.

---

† 'ஏலோரெம்பாவாய்' என்பது பாவைச் செய்யுட்களின் இறுதியில் காணப்படும் அடிநிறை. இஃது பாவை நோன்பு நோற்பவர் அப்பாவையையே விளித்து முன்னிலைப் படுத்திக் கூறுவதாகும். 'எம்முடையபாவை போல்பவளே! இதனை ஏற்றுக்கொள் ஆராய்ந்துபார்' என்று இதற்குப் பொருள் கூறுவர்.

---

* இவ்வரிய நூலைப் பதிப்பித்த சென்னை—திருவான்மியூர், மகாமகோபாத்தியாய டாக்டர் உ. வே. சாமிநாதையர் அவர்கள் நூல் நிலையத்தாரின் அனுமதி பெற்று இது வெளியிடப் பெறுகின்றது. இதன் விலை ரூ. 13/- ஷை நூல் நிலையத்தில் கிடைக்கும், 20% கழிவு உண்டு.

(இ - ள்). உற்பத்தி நாசம் இல்லாததாய், அடிஞானமில்லா தார்க்கு அளவிட வரிதான எச்சோதி ஈசான மூர்த்திகட்கு மேலானதோ, அச்சிவச்சோதியை நாங்கள் அனைவரும் 'திருவடி கதி எனத் தோத்திரம் செய்ய, "மூலமலசத்தியே! உள்ளத்து இருப்பான தாயே! திருச்செவி கேட்டும், விஷத்தடங்கண் பெற்ற மாதாவான மூலமல சத்தியே! ஆனந்த அனந்தலோ?" எனப் பராசத்தி மலசத்தியை நோக்கிக் கூறிப் பின்னும், "உன்னுடைய பாங்கியரான திரோதானச் சத்திகள் அழைப்பக் கேளாதிருந்தாயே! வன்செவியோ நின்செவி? மகாதேவரை அச்சத்திகள் துதித்தது, தத்துவ சோபான விதிதோறும் அத்துதி அதிட்டித்து நிற்கக் காண்கிலேயோ?" எனப் பராசத்தி அருளால் மலசத்தி பரிபாகமாகிப் பரவசமுற்றுத் தழுதழுத்து மாயா பூ அமளியின் மேல் புரண்டு, "இவ்விடம் நமக்கில்லை" என யாதொரு பற்றுக்கோடுமின்றிச் செயலற்ற அநுபூதி.

பராசத்தி திருவுளம் கொண்டு, "திரோதானச்சத்தித் தோழியர்களே! இதுவென்ன! இதுவென்ன! அற்புதம்! எனது உயிர்ப் பாவாயான பெண்ணே! இவ்வகை ஞானம் ஈசன்பால் அன்பே இப்பரிசு—என அருளியதை அன்பாற் காண்க.

இச்செய்யுள் மனோன்மணி யென்னும் சத்தியின் திருவாக்காய்ச் சர்வபூததமனியை உணர்த்துகின்றது என்பர் பிறர்.

திருஞானசம்பந்தர் அற்புதங்கள்

"புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்த னுர்தலை தத்தெனத் தத்துமே
கனலில் ஏடிடப் பச்சென் றிருக்குமே
கதவு மாமறைக் காட்டி லடைக்குமே
பனையில் ஆண்பனை பெண்பனை ஆக்குமே
பழைய என்புபொற் பாவைய தாக்குமே
சினவ ராவிடம் தீரெனத் தீருமே
செய்ய சம்பந்தர் செந்தமிழ்ப் பாடலே"

திருப்பனந்தாள் - ஸ்ரீ காசி மடம்

'திருமுறை வெளியீடுகள்'

			ரூ. பை
1	விநாயகர் திருமுறை (அச்சில்)	...	
2	ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் பிரபந்தத்திரட்டு டாக்டர் சாமிநாத ஐயர் குறிப்புரையுடன் (புதிய பதிப்பு)	...	3 50
3	சிவக்கொழுந்து தேசிகர் பிரபந்தம்	...	3 00
4*	திருஞானசம்பந்தர் தேவாரம் (மூலம் மட்டும் புதிய பதிப்பு)	...	2 75
5*	திருநாவுக்கரசர் தேவாரம் ,,	...	2 00
6*	சுந்தரர் தேவாரம் ,,	...	1 30
7*	திருவாசகம் ,,	...	0 56
8*	திருக்கோவையார்—பேராசிரியர் உரையும் பழைய உரையும் (புதிய பதிப்பு)	...	2 90
9*	ஒன்பதாம் திருமுறை—திருவிசைப்பாவும் திருப்பல்லாண்டும் தெளிவுரை	...	1 50
10	,, ,, மூலம் மட்டும்	...	0 56
11*	திருமந்திரம் (புதிய பதிப்பு) ,,	...	2 25
12*	பதினோராந்திருமுறை (புதிய பதிப்பு) ,,	...	1 50
13*	பெரியபுராணம் (மூலம்மட்டும்)	...	3 00
14	பெரியபுராணம் உரை நடை	...	2 00
15	திருத்தொண்டர் புராண சாரம்	...	0 40
16*	அகத்தியர் தேவாரத் திரட்டு	...	0 36
17	திருவிளையாடற் புராணம் மூலம் மட்டும்	...	3 00
18	திருவிளையாடற் புராணம் உரை நடை	...	2 25
19	கந்தபுராணச் சுருக்கம் (மூலம் மட்டும்)	...	1 75
20	கந்த புராணம் — முதல் மூன்று காண்டங்கள் மூலம் மட்டும்	...	2 75
21	,, யுத்த தேவ காண்டம் ,,	...	2 00
22	,, தக்ஷகாண்டம் ,,	...	1 50
23	கந்தபுராண உரைநடை ,,	...	3 00
24	திருக்குறள்-அறத்துப்பால் மூலமும் குறிப்புரையும் ஹிந்தி மொழி பெயர்ப்பும்	...	1 50
25	திருக்குறள்-பொருட்பால் ,,	...	2 50
26	திருக்குறள் — காமத்துப்பால் ,,		
	ஷை 24, 25, 26. திருக்குறள் 3 புத்தகமும்	...	4 00
27	திருக்குறள் மூலமும் குறிப்புரையும்	...	0 75
28	தாயுமான சுவாமிகள் பாடல் குறிப்புரை	...	1 25
29	அம்மையார் அற்புதத் திருவந்தாதி (புதிய பதிப்பு)	...	0 25
30	திருக்கைலாய ஞானவுலா— உரையுடன்	...	0 50
31	கந்தர் அலங்காரம் குறிப்புரையுடன்	...	0 25
32	கந்தரனுபூதி மூலம்	...	0 13
33	கந்தரனுபூதி தெளிவுரை	...	0 35
34	கந்தர்கலி வெண்பா - ஆங்கிலம் ஹிந்தி மொழிபெயர்ப்புகளுடன்	...	0 37
35	கந்தர்கலி வெண்பா மூலம் மட்டும்	...	0 10
36	கந்தர்கலி வெண்பா மூலமும் உரையும்	...	0 37
37	நீதிநெறி விளக்கம் - ஆங்கிலமும் ஹிந்தியும்	...	0 50
38	[illegible] ஆங்கிலமும் ஹிந்தியும் [illegible]	...	0 06

Under No. R. No. 1485/57.

Regd. No. M. 5574

39	முதுமொழி மேல் வைப்பு (குறிப்புரையுடன்)	...	0 75
40	திருவுசாத்தானக் கல்லெழுத்துக்கள்	...	0 37
41	திருக்குறள்-பொருட்பால்-பரிமேலழகர் உரை இலக்கணக் குறிப்பின் விளக்கம்	...	0 13
42	திருச்செந்தூர்க் கந்தர் கலிவெண்பா-மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத்தமிழ்-மதுரைக் கலம்பகம்-நீதிநெறி விளக்கம்-மதுரை மீனுட்சியம்மை இரட்டைமணி மாலை-மதுரை மீனுட்சியம்மை குறம்	...	2 75
43	திருவாரூர் நான்மணிமாலை-முத்துக்குமாரசுவாமி பிள்ளைத்தமிழ்		1 25
44	சிதம்பர மும்மணிக்கோவை-சிதம்பரச் செய்யுட் கோவை தில்லைச் சிவகாமியம்மை இரட்டைமணிமாலை	...	1 00
45	பண்டார மும்மணிக் கோவை-காசிக்கலம்பகம் சகலகலாவல்லி மாலை	...	1 00
46	சிதம்பரச் செய்யுட்கோவை	...	0 75
47	முத்துக்குமாரசாமி பிள்ளைத்தமிழ்	...	0 50
48	குமரகுருபர சுவாமிகள் திவ்ய சரித்திரப்பட விளக்கங்களும் கந்தர்கலிவெண்பா விளக்கப்படங்களும்	...	0 25
49	திருக்கயிலைத் திருமுறை	...	0 37
50	திருக்கடவூர்த் திருமுறையும் பிரபந்தங்களும்	...	0 19
51	செந்திலாண்டவன் மகிமை	...	0 15
52	திருக்குறள்-உரைக்கொத்து-அறத்துப்பால் 3-ம் பதிப்பு	...	1 37
53	ஷை ஷை பொருட்பால் 2-ம் பதிப்பு	...	2 75
54	ஷை ஷை காமத்துப்பால் ஷை	...	1 20
55	அபிராமி அந்தாதி-தெளிவுரையுடன்	...	0 50
56	மதுரை மீனுட்சியம்மை பிள்ளைத் தமிழ் (குறிப்புரையுடன்)		(அச்சில்)
57	திருவாரூர்-திருப்பனுவல்கள்	...	0 10
58	திருவெம்பாவை-திருப்பள்ளியெழுச்சி	...	0 10
59	பழமொழித்திருமுறை	...	0 25
60	திருவாரூர் நான்மணிமாலை	...	0 50
61	Hymns and Proverbs	...	0 30
62	அப்பர்விழா வெளியீடு	...	0 25
63	நவக்கிரகமாண்பு	...	0 25
64	குமரகுருபரர் வரலாறும். அற்புதத்தேவாரத் திரட்டும்	...	0 30

மேலே கண்ட நூல்கள் கிடைக்குமிடங்கள்:-

1. ஸ்ரீ குமரகுருபர சுவாமிகள் கலைக்கோயில், ஸ்ரீவைகுண்டம்.
2. ஸ்ரீ K. சுப்பிரமணிய அய்யர் அவர்கள்.

"தியாகராஜ விலாசம்" 53. பிள்ளையார் கோயில்தெரு,
திருவேட்டீஸ்வரன்பேட்டை, திருவல்லிக்கேணி, சென்னை-5

குறிப்பு:- • இக்குறியிடப் பெற்றவற்றின் விற்பனைத் தொகை ஸ்ரீலஸ்ரீ காசிவாசி சுவாமிகள் அவர்களால் நிறுவப்பெற்ற பன்னிரு திருமுறைப் பதிப்பு நிதியைச்சாரும். மற்ற நூல்களில் திருக்குறள் உரைக்கொத்து (எண் 52, 53, 54) தவிர்த்து எஞ்சியவற்றின் விற்பனைத்தொகை 'குமரகுருபரன்' பத்திரிகையைச்சாரும்.

அச்சிட்டது:- குமரகுருபரன் அச்சகம், ஸ்ரீவைகுண்டம்-66.